சிரவை கௌமாரமடாலய வெளியீடு.

உ

குருவே துணை.

சிரவணபுரம் கௌமார மடாலயம்

# ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகள்

# அலங்காரச் சிந்து
# பிரதாபச் சிந்து
# அநுபந்தச் சிந்து

---

ஆசிரியர்கள்

ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகள்

தி. மு. செந்திநயகம் பிள்ளையவர்கள்

தி. மு. செ. முருகதாச பிள்ளையவர்கள்

கௌமார மடாலயம்.

T15130
R005E05

உரிமை பெற்றது.

T.15130

உ

குருவே துணை.

# அலங்காரச்சிந்து.

இஃது
கோயமுத்தூருக் கடுத்த
சிரவணபுரம் கௌமாரமடாலயம்
ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகள் மாணுக்கர்

**ஸ்ரீமத் கந்தசாமிசுவாமிகளால்**

இயற்றி

கிரந்தம்

ந. இரங்கசாமிக் கவுண்டரவர்களது
பொருளுதவி கொண்டு

கௌமார சபையாரால்

சென்னை
"கேசரி" அச்சுக்கூடத்தில்
பதிக்கப்பெற்றது.

அக்ஷய௵ மேடாரவி

குருவே துணை.

# முகவுரை.

சிந்துத்திரட்டு, என்னும் பெயர்பெற்ற இப்புத்தகத்தினுள், அலங்காரச்சிந்து, பிரதாபச்சிந்து, அநுபந்தச்சிந்து, என்னும், மூன்றுபிரிவான சிந்து நூல்கள் ஒருங்கேதிரட்டிப் பதிக்கப் பெற்றுள்ளன. இடையில் அவதார விழாப்பதிகமொன்றும் உள்ளது. இந்நூல்கள் தமிழ்நாட்டின் முகம் போன்ற கொங்குநாட்டிற் சிறந்த கோயமுத்தூருக் கடுத்த வடபுறம் சத்திமங்கலம் ரோட்டில் உள்ள சிரவணம் பட்டியென்னும் கிராமத்தின் மேற்கு ஒன்றரைமைல், சின்னவேடன் பட்டி யென்னும் கிராமத்துக்குக் கிழக்கே, அரைமைல் தூரத்திலுள்ள சிரவணபுர மென்னுந் தலத்தில், ஸ்ரீ தண்டபாணி மூர்த்தி, சித்தி மகோர்க்கட விநாயமூர்த்தி, ஆலயங்களும், கௌமார மடாலயமும், வகுத்து, அங்கு ஸ்ரீ கனக சபையில் சிவயோகாநுபவானந்தத்தி லமைந்துள்ள ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகளது கைம்மாறில்லாக்கருணையின்ப சாகரமுழுகும் அன்பினர்களுக்குப் பயன்பெறவேண்டியினிய சிந்துயாப்பி லமைக்கப் பெற்றுள்ளன. இந்தத்திரட்டு நூலை அன்புடன் கைப்பொருள் கொண்டு அச்சிட்டுதவிய கீரநத்தம் ம-ா-ா-ஸ்ரீ ந. இரங்கசாமிக் கவுண்டரவர்களுடைய நன்றி மிகப் போற்றற்பாலது.

இங்ஙனம்:

அக்ஷய வருஷ மேடரவி.

**வை. சுந்தரமய்யர்,**
கேசரி அச்சுக்கூடத் தலைவர்,
அண்ணுபிள்ளை தெரு, ப... ..லை, சென்னை.

குருவேதுணை

# சாத்துகவிகள்

சிரவணபுரம் கௌமாரமடாலயம் அடியவர்களி லொருவரான

## ஸ்ரீமத்—சுந்தரசுவாமிகளியற்றியன

### சிந்துக்கவிகள்.

சிந்துபாடத்துணிந்த புந்தியீர்சற்றுநின்று
தெளிவொடுபெற்றிடுவீர்—உரைத்திடு—நயமொழிகற்றிடுவீர்
இந்தநாளிற்சிறிது முந்தினோர்சொற்றதினு
மியனயமுற்றதுவே—யதிவித—சுகவியல்பெற்றதுவே
பந்தபாசத்தொடர்பி கந்தபேர்சித்தமிசை
பதிவுறவைப்பதுவே—யரும்பெருங்—கதியிடையுய்ப்பதுவே
கந்தசாமிப்பெயர்கொ ளெம்பிபாடுற்றசிந்து
களியையளித்திடுமே—படிப்பவ—ருளமுமினித்திடுமே. (க)

அண்ணாமலைக்கவிஞன் முன்னுரைத்ததினும்
அதிசுவைதுற்றுளதே—யதற்கிணை—யிதுவெனவொப்புளதே
கன்னுயிர்தத்தகைகொ ளின்னிசைத்தகவி [திடுமே
கதியையளித்திடுமே—தொடர்ந்துறும்—விதியையொழித்
தன்னோர்குரவனரு ளின்னேயிவனுமுறச்
சார்புடனத்துவனே—யமைவுறு—மோர்பெறுசத்துவனே
சின்னாளகத்திருந்து மின்னார்மயக்கருந்து
சிறுமையுடைத்தவனே—துறந்துறு—மறிவுபடைத்தவனே

தன்னனதத்ததன வென்னுவிருப்பினொடு
சந்தமிகப்பொழிவா—னரும்பெருந்—தந்திரமுற்றறைவான்
சொன்னன்மிகக்குறையு மன்னேவிகற்பமறு
தூயவுளத்தினரே—சிறிதொரு—வாறுணர்சத்தினரே. (உ)

சந்தக்கவி

தனனதனத் தனனதனத் தனனதனத் தனதான.
அருள்வலிபெற் றுலகமுழுக் களவறுசித்—திகளாடி
யவைதொறுமுற் றதிமதுரத் தருள்வலிமைக்—கவிபாடி
யிருள்வலியற் றெவர்களுமிக் கிணையில்பரத்—தினைமேவி
யிகபரமுற் றிடவவருக் கினிமைகொண்மெய்ப்-பொருள்கூறி
பருவமினுக் குறுமகளிர்ப் பரசுமிருட்—கெடநூறி
பகலிரவற் றிடுமிடமுற் படவதின்மெய்ச்—சுகமூறி
யருவபரத் திடையணைவுற் றருவுருவத்—தகைமேவி
யதுவுமறக் குரவனருட் கயலகலத்—தினம்வாழி. (ங)

அறுசீர்விருத்தங்கள்

தேசிகோத்தமனை வெங்கள்குருபரன்குறிப்புத்தெரிந் தமட்டு-மாசையாற்பரிவுகொடு நடக்குமருதாசலப்பே ரற வோன்சொற்குத் தாசராய்ப்பணிபுரியு மன்பருக்குமடிமை செயச் சலிப்புறுத-நேசனுங்கிரநத்தத் திரங்கசாமிப்பெயர் கொ ணோர்மையாளன். (க)

பொருள்படைத்த பயனறவோர்க் குதவுதலேயாமெனு மெய்ப் போதம்வாய்ந்தோ - னருள்படைத்தசிரவணத்தூர்க் கௌமாரமடத்தன்பர்க் கன்பேசெய்யுந்—தெருள்படைத் தெங்குருபுகழ்ச்சீர்ச் சிந்தைவெளிப் படவச்சிற் சேர்ப்பித் தோங்கும்-பொருள்படைத்த பேறடைந்தா னிகபரச்சீர் கொண்டுமிகப் பொலிகமாதோ.

சிரவணபுரம் கௌமாரமடாலயம்

அடியவர்களிலொருவரான

## ஸ்ரீ இரங்கமுத்து ஐயா அவர்களியற்றியன.

### எண்சீர் விருத்தங்கள்.

எல்லாமெய்ச் சற்குரவ னருளேயென்ன
வெண்ணியந்த வண்ணநடை யிசையக்கொண்ட
நல்லார்க ளியாவரினும் வசையொன்றில்லா
நன்மைமிகப் பெருகு கந்தசாமித்தூயோன்
பொல்லாவல் வினையாவும் போக்கும்வண்ணம்
புகன்றசிந்து நூலிலுள்ள பொருள்களெல்லாம்
வல்லார்க ளோர்குவர்வாய்ச் சண்டைசெய்யும்
வம்புரைப்பா வலர்கள்சிறு மதிக்கெட்டாதே. (க).

குருபரன்றுண் மேலன்பு கொண்டுவாழுங்
குமாரனு மெங்கள்கந்த சாமி யண்ணல்
பரும்புகழ்ச்சீர் மிசப்படைத்து வாழ்ந்தோரான
பழமையோ ரிணையான பண்போன்கண்டெ
ரிருதயமீ துரிமைமிகப் படைத்தமேலோ
ரினிதெனநற் சிந்துநூ லிசைத்தான்சீலம்
வருமொழிகொண் டுரைத்தனுப சாரமாகு
மனத்தகத்தே மதித்துவக்குங் கனத்த தாமே. ()

குருபாதமேகதி

---

குருவே துணை

# சாத்துகவிகள்.

ஸ்ரீலஸ்ரீ தண்டபாணிசுவாமிகள் குமாரர்

## தி. மு. செந்திநாயகம்பிள்ளையியற்றியன

### அறுசீர் விருத்தங்கள்.

சிரவணமாபுரத்தினிற்கௌ மாரவிராமானந்த தேசிகன்றன், வரமலிமெய்க்கவுமார மடாலயச்சீருரியநந்த வனச்சீர்மேலோர், பரவுபொழிற்சீர்கணநா தன்குமரனுலயச்சீர் பதுமக்காடு, விரவுபுனல்வாவிச்சீர் குருபரன்வாழ்கனகசபை விளங்குஞ்சீரும். (க)

சுக்கிரவாரச்சபையிற் கூடுகவுமாரமுழுத் தொண்டரானோர், விக்கினமாம்புவிமாயை விலக்கியுண்மையறிந்தடையும் வினைதச்சீரு, மக்கிரகண்ணியக்குரவ னவரவர்பக்குவபேத மறிந்தன்னோர்க்கா, முக்கியநற்பயன்களுறக் கருணைபுரிந்துபதேச மொழியுஞ்சீரும். (உ)

அந்தவிராமானந்தன் பெருமையுஞ்சேர்த்துலகினுள்ளா ரறியுமாறே, சந்தநயமெதுகைநய மோனைநயஞ்சுவைநயங்கடழைப்பமேலாஞ், சிந்தனுலள்ளியெங்குஞ் சிந்தினனல்லலங்காரச் சிந்தென்பேராற், கந்தசாமிப்பெயர்கொண் டவனடிமைத்திறம்பேணுங் கருணையானே. (ங)

அத்தகையசிந்துநா லிணைக்கிரகத்தநக ரமைந்துநாளு, முத்தமசற்குருபான்ருள் பணிமருதாசலத்தவன்சொ லுறு திபூண்ட, பத்தன்மெய்வேளாளகுலத் திரங்கசாமிப்புனி தன் பரிவிற்பொன்னீந், தித்தரையிற்பலருமுவப் புறப் பதிப்பித்தனன்றவத்தி னேற்றத்தாலே. (ச)

---

திருவாமாத்தூர்க் கௌமார மடாலயம்

தி. மு. செந்திலுயகம் பிள்ளை குமாரர்

## முருகதாசபிள்ளை யியற்றியது

சிந்துக்கவி

(தெள்ளுதமிழ்—என்ற சந்தம்.)

வண்மைமலி கொங்குவளநாடு—முன்செய்
மாதவப்பயனெனவேநீடு—மெழின்
மன்னுசிரவணபுரி யென்னுநகரினிலுரு
வாமே—பதின் மேயே

உண்மைபரிவினையறியாதே—தின
முண்டுறங்கிச்செத்தொழிந்திடாதே—யெனை
யொத்தசிறுசிலருக்குமுட்செறிநற்றகைக்கருணைத்திறத்துட
னுன்னி—பன்பு மன்னி

பற்பலுவமானமுவமேய—முடன்
பக்குவத்தளவுரைக்குமேய—மலி
பண்பிராமானந்ததேசிக னென்றிவாழ்மாதங்கமாசனைப்
பான்மை—சனை மேன்மை

நந்தவனஞ்சோலைமுதலாக—வுள
நற்றலச்சிறப்பையழகாக—மிகு
நன்னலஞ்செறிசெந்தமிழ்ச்சுவை மன்னிடும்படிசிந்தெனற்
நண்ணி—யுளத் தெண்ணி [கவி

சற்குரவனுத்தரவின்படியே—யிதைச்
சாற்றிமுடித்துள்ளுவந்தாணிடியே—யெனுந்
தகைப்பல்சந்தமுமோதுகின்ற சிறப்புமிஞ்சியசீர்கொள்கந்த
சாமி—யென்னு நாமி

சந்ததங்குரவனடிதன்னை—நிதஞ்
சார்ந்துவழிபடுபவன்மின்னை—நிகர்
சகத்துயரொருவிநன் மகத்துவத்துறவறஞ்
சார்ந்தோ—னுண்மை தேர்ந்தோன்

இயம்பு மிந்நூலையச்சி லேற்றி—மிகு
மேற்ற மடைந்தான் குரவற் போற்றி—வைகு
மிரங்கசாமி யென்ற பெய ரமைந்த சீலனின்பநல
மேய்ந்தான்—பவங் காய்ந்தான்.

முற்றிற்று

உ

குருவே துணை

# அலங்காரச்சிந்து.

## பாயிரம்.

காப்பு—வெண்பா.

இம்பருளார் வாழ்வா னிராமானந் தப் பெருமா
னும்பர்களுங் கண்டுவகை யுற்றிடச் செய்—பம்பருட்கெள
மாரரினந் தங்கு மடாலயச்சீர் வாழ்த்தவவன்
பூரணச் செம் பொற்பதங்காப்பு. (க)

### விநாயகர் துதி

(சந்தவரைவந்தகுகநாதா என்ற சந்தம்.)

அந்தமுறுசிந்தூரமா—முகவா-யாரு
மன்பின் மிகப் போற்று முதற்பகவா—தொழு
மார்வமுளாரைப் பிரியாச் சுகவா
எனை—மகவா—யுள—முகவா—தின
மம்புவியில் வெம்பவிடல் தகவா

நந்தலின் மெய்யன்பு மிகுநம்பி—யாண்டார்
நம்பியைச் சோதித்திடவே செம்பி—யன்செய்
நல்லுணவுண்டாய் கணம் விரும்பி
யெனைக்-கும்பி—யிடை—வெம்பி-யுற
நாட்டிய தென்னே கருடதும்பி

ஔவை தனைவான் கயிலை மீது—கையா
லன்புடன் வைத்திட்டனை யப்போது—ஏழை
யாகுமென் மேலிந்த விதச்சூது
செயி—லேது—துணை—யோது—இன்றே
யாண்டருளெந்தாய் புறமாக்காது

செவ்வை பெறுமுன்றனருட் காதை—செவி
சேர்த்து மதி காந்தனுடல் வேதை—யறத்
தீரவருளீந்திடு மெந்தாதை
மிகு—பேதை—யருட்—பாதை—பெற்றுச்
சேரவளித் தாளுனடிப் போதை

மெய்கண்ட நாதனுபமாறே—யயா
வெண்கவி யெண்பத்து நான்கில் வீறே—சுவை
மிஞ்சிடச் சொற்றுண்ட மறையீறே
யெனை—மாறே—புக—லூறே—புரி
வெவ்வினை தீர்த்தாண்டருள் மெய்ப்பேறே

வையமுள்ளோர் போற்று மெழிற் பொன்னே—ருடல்
மன்னுருக்கு மாங்கத நன்மன்னே—கொண்ட
மாற்றரு நோய் தீர்த்தருளென்னன்னே
யென்கண்—முன்னே—சேவை—யின்னே—தந்தென்
மாயமயனீக்கிலை யீதென்னே

அன்ன மிசைமன்னுமலர் வேதா—மிகு
மன்புகொடு போற்று மலர்ப்பாதா—அன்பர்
ஆசையற நல்கிடு மெந்தாதா
வென்மேல்—வாதா—விரங்—காதா—உன்ற
னம்புயத்தாள் சூட்டிட லாகாதா

மன்னு மெழில் மின்னிடை யெம்புத்தி யவிர்
வாம நிலை மேவுமுயர் சித்தி—யிவர்
மத்தி கொள்ம கோர்க்கட நின் சுத்தி
பெறு—பத்தி—யருட்—சித்தி—யுடன்
வந்தருளி னிப்பிறவா முத்தி. (உ)

## இதுவுமது

(கண்ணுயிரம்—என்ற சந்தம்)

வண்டோகை கொண்டு சுழல் தண்டாரணிந்த குழல்
மருவிய சித்தியொடெழில் பெறுபுத்தி மணாளனே—சதுர்
மறை முடியிற்றிகழ் கமலமலர்க்கிணை தாளனே

தண்டாவிறற் கொளுறு தண்டாயுதக்கை பெறு
சமனுளம் வெட்குற விகல்செய்புலப்பகை தன்னையே—யிது
தருண மறுத்தரு ணலமுறவைத்தரு ளென்னையே

உல்லாச மன்புவிரி வல்லாளன் முன்புபுரி
யுயர்தளியிற்புவி நரர்சுரர்மெச்சிட வுற்றவா—வவ
னுவகையளித்திரு கழல்புகவுற்றருள் பற்றவா

நில்லாவுலகநடை புல்லாமிகவுநடை
நிலையறு துற்குண மிகுமன மொப்பறு முன்னையே—தின
நினைதர வைத்துன தடிமையெனக்கொளெ னன்னையே

மஞ்சூர் மகத்தரச னஞ்சா மிகப்பரச
மகிழ்வொடவற் கெதிர் நிலவிமலர்க்குல மன்னியே—திகழ்
வனமில குற்றிட வருளினை பொற்புறு பொன்னியே

மிஞ்சாணவத்தடர்பி லஞ்சாருடற் றொடர்பில்
மிகுதுயரக்கடல் படியெனையற்பொடு மீட்டுவாய்—அருள்
விரிவுறுசிற்சுகவ நுபவமெய்க்கதி கூட்டுவாய்

கங்காளனுசிபகர் மங்காத காசிநகர்
கவினுறு மக்களுண் மிகைகொள் விருப்பொடு விண்டவாறவர்
கனிதமிலிற்றெருறு மொரு பொழுதுற்றுண—வுண்டவா

பொங்காழியிற்றுரும்பு சிங்காலையிற் கரும்பு
புரையு மெனுட்டியர் முழுதறி கிற்றிலை போலுமே—யெனைப்
புவியினிடத்திது வரையு மலைத்தது சாலுமே

முன்பார் சுராந்தகனும் வன்பார் நராந்தகனும்
முயல் வுறு வெற்பனபவ மொர்கணத்தினில் மாற்றினை-தவ
முதியவர் பெற்றுயர் பதமலரிற் புகவேற்றினை

என்பாதகப்பிறவி வன்போடிடத்துறவி
லினையறு முத்தியிலடைய விடுத்திடில் யாவரே—யுனை
யிது நலமற்றிடு செயல தெனத்தடையாவரே. (௩)

முற்றிற்று.

---

உ

குருவே துணை.

# அலங்காரச்சிந்து.

## நூல்.

### குரு மகிமை.

விந்தை மலிராமா னந்தப் பெருந்தகை
சந்த நிறைந்த மெய்ச்சீரே—முற்ற
விண்டு முடிப்பவராரே
விரிவுற்றிரை கடலிற்குல வலையொத்தவிர் தருபற்பல [விந்தை

எவ்வமில் சிந்தையி லெவ்வெவ ரெவ்விதம்
வவ்வின ரவ்வண மாயே—யன்பா
லீன்றெடுத்த பெருந்தாயே—யென
விச்சைத்திரண் முற்றத்தரு விச்சைக்கன சித்திப்பெரு [விந்தை

இந்த நிலத்தொரு தந்தைதாய் தந்தவந்
தந்திடுமைந்த னென்றே—யாதி
யந்த மிலான் பதப்போதே—தம
திடமாமென நிதநாடல்செய் திடமாத வருடணுடு மெய் [விந்தை

மெய்த்தவமேமுய லுத்தம சத்தியர்
சத்துவ புத்தியினூடே—யருள்
வித்தகருற்ற மெய்வீடே—யெனும்
விமலச்சுவை நிலை காட்டிடு கமலப்பத விணை நாட்டிடுவிந்தை

உ

குருவே துணை.



ஸ்ரீலஸ்ரீ இராமானந்தசுவாமிகள்

சிரவணபுரம் கௌமாரமடாலயம்.

ஊனசை விட்டுத் தியான சோபானத்தின்
மோன சுகானந்த நாட்டிற்—புகு
ஞான விசாலர்தம் மாட்டிற்—றினம்
ஒப்புச் சொலலற்றுக்கரை யுப்பைக்கொளு மப்பைப்புரை
[விந்தை

பாகசதுர்த்தி விசாக வைபோகசு
பாகர சேகரத்தன்றே—யிந்தப்
பாரிற் பொலிதரு நன்றேய்—தலிற்
பாசக்கரன் முருகோனென வாசற்றவர்புகல் நீள்கன விந்தை

உத்தமமே னிலை நத்திய நித்திய
சத்திய புத்திய ருள்ளம்—பொலி
யத்தகையாம் புகழ் வெள்ளம்—சொலி
லுலவாததனு லொப்புவனுல கோரளவே செப்புவன் விந்தை

எண்ணினலம் பெறு புண்ணிய ரெண்ணுயர்
கண்ணியர் நண்ணிடும் வண்ணம்—தவம்
பண்ணிய கொங்கின ரெண்ணம்—திரண்
டின்பத்திரு வுருவாயரு ளன்பர்க் கொரு குருவாவரு விந்தை

மங்கு வளத்தது கொங்கென வெங்கணும்
நங்கு செய் வெங்குணர் சங்கம்—தலை
தொங்கிடலாகிய பங்கம்—பட
மையற் கொடு நெறி பாழ்படு மெய்யற் புத நிலை பேணிடு
[விந்தை

மண்ணி லுள்ளாருக்கும் விண்ணிடை நண்ணிய
புண்ணிய பண்ணவரார்க்கும்—எண்ணும்
வண்ணமளித் தின்பஞ் சேர்க்கும்—படி
மத்திப் படிமணி வெற்பவனத்துற்ற நல.நுளுற்பவ விந்தை

மன்றலி லங்கிய தென்றலின் கன்றுறு
மின்றமிழ்க் குன்றில் வாழ்சீலம்—பொலி
மாதவனே யிந்த ஞாலம்—சுக
வாழ் விற்புக வென நாடிடு சூழ்வுற்றுருவு கொடாடிடு விந்தை

மங்குறு நாண முழுங்கி நெருங்கிய
சங்கையில் வெங்குணர் மேனி—காகம்
கங்கநரி நாய்க்குத்தீனி—செயும்
வயமார் வேலப்பப்பெய ரினனீள் சீலத்தொப்பிய விந்தை

தெங்குவளம் பெறு கொங்கிலி லங்கிய
பொங்கிய விங்கித மாநூர்—களிற்
றுங்க மிலங்கிய சீரூர்—எனும்
செல்வச் சிரவண மாபுரி யொல்லுற்றடியரை யாதரி விந்தை

மையுறு மின்னிகர் பொய்யுறு வையக
மையல் கொள்கையரு நேரே—புயர்
மெய்யுறு சேவை செய்வாரே—லருள்
மல்லற் புதமிகை தேக்கிடு நல்லற் புதமயமாக்கிடு விந்தை

திங்களொப்பா முகமங்கையர் பங்கயச்
செங்கையைக் கொங்கையை நாவால்—தினம்
செப்பிடு வேனைப் பல்பாவால்—உயர்
செவ்வைப்படுதனைப் போற்றிடு மிவ்வுத்தம நெறிக்கேற்றிடு
[விந்தை

தன்னவதார மெய்துன்னிய நன்னல
முன்னலி லன்னவர் மேலே—தின
மன்னிய பேரருளாலே—அவர்
தம்பக்குவ மொத்துக்கதி நம்பத்தளி கட்டிப்பதி விந்தை

விக்கினந் தீர்த்துயர் மக்களையக்கிர
　　மெய்க்கதி புக்கவிடுக்கும்—தனை
　　யொக்கு முதிப்பையடுக்கும்—செய்ய
வேளுங்கரி முகனுந்திரு நாளும் பெறு நல முந்தரு
　　　　　　　　　　　　விந்தைமலி. (க)

## இதுவுமது

(தெள்ளு தமிழுக்குதவு சீலன்—என்ற சந்தம்)

நாற்றிசை வாழ்மாந்தர்களும் வணங்கும்—இராமா
னந்த வருணும முறவிணங்கும்—பரன்
நம்பு மதியோரளவி லம்புவி யிலாடு குரு
　　நாதன்—சுக போதன்

போற்றி செயு மன்பர்பிழை யெண்ணான்—அருள்
பொங்கிவழிகின்ற கடைக் கண்ணான்—நிதம்
பூவுலகில் யாருநல மேவு நெறி காணவருள்
　　புரிவான்—மிகு பரிவான்

முத்தரிடத்தே யறிவாய் விரிந்து—சுக
முற்றுமுணர்ந்தின்ப முறப்புரிந்து—எல்லா
மூர்த்தி யுந்தானுனநிலை பூர்த்தியுந் தேர்வானருள்
　　முயங்கும்—ஒன்று யியங்கும்

பத்தியடியாரிதய மென்னும்—செய்ய
பங்கய மலரும் வண்ண மன்னும்—ஞான
பந்தமலி வொன்றிராமா னந்த வருணன் செயலென்
　　படியா—சொல்லின் முடியா

துன்பகற்றுமைந்து கரநாதன்—வரை
தோறுநடமாடிடு பொற்பாதன்—எனச்
சூக்குமவுணர்ச்சி யுளார்நாக்குறை செயப்பொருந்து
தூயன்—குருராயன்

தென்பொதியையோன் மெய்யவதாரன்—இந்தத்
தேசமுழுதுய்ய வருள்தீரன்—எனத்
தெள்ளுமறிவிற் பெரியர்விள்ளு நலமுற்றிலகு
சீலன்—மிகு கோலன்

திங்களுண் மதித்துமிகநாணும்—அருட்
* சிந்துரமுகத்தை யெதிர்காணும்—மிகு
தீனர்களுமொப்பி லுயர்ஞானவழி யிற்றெனவே
தேர்வார்—களிகூர்வார்

கொங்குகமழ்கொங் குவளநாடு—கொளுங்
கோதில்பலவாம் பதிகளூடு—வளங்
கொண்டசிரவண புரத்தண்டர்களு மெச்சுதவக்
கோலம்—பெறு காலம்

இமையமுதற் சேதுவிவைமட்டும்—நலம்
ஏய்ந்தபுகழ்ச் சீர்மிகவும் மெட்டும்—பர
வின்பகவுமாரமட மன்படியரி யாருமுய்ய
ஈவான்—நலம் மூவான்

அமையுமுயர் வெய்தியமடத்தே—யெழி
லார்ந்தகுகைசேர் தனியிடத்தே—யிருந்
தாற்றுதவத்தோடு புவியேற்றமுறச் செய்தவிந்தை
யறைவேன்—வினை குறைவேன். (உ)

* சிந்துரம்—குங்கும திலகம்

## பஞ்சபூதப் படம் வகுத்தல்

(சென்னிகுள நகர் வாசன் என்ற சந்தம்)

மாற்றுப்பல விதத்தங்கம்—புரை
மாணடியார் திருச்சங்கம்—அவர்
வதியப்பெறு நிலைமைக்கியை தரு பற்பலவிதவற்புத
வாழ்வார்—பணி சூழ்வார்

பேற்றைத்தவத்தொடர் பாலே—யிந்தப்
பேதைமைவாழ்க் கையின்மேலே—யுறு
பிரமைத்தொடர்பற நற்குரவனைநற்பர மௌனநத்திடு
பெருமை—மிகு மருமை

மன்னுயர்மெய்க் கவுமாரம்—புகு
வண்ணமதியின பாரம்—பெறு
மகிமைப்பெரி யவருய்த்துணர் தருமுச்சிதநலமிக்கவிர்
வண்மை—தகு முண்மை

துன்னுறுமிந்தப் பேரண்டம்—கொடு
தோற்றும்பொருள் முற்றப்பிண்டம்—தனில்
தோய்வுற்றிடுமெனுமோருரை வாய்மைத்தகையெனயாவரும்
சொல்ல—வையம் வெல்ல

சந்திரசூரியர் நடையும்—அதிற்
சாரும்பகலிர விடையும்—மறை
தமமிக்குறு *குகு வுஞ்சமுழுமைப்படு நிலையுந்தகச்
சாற்றும்— உளந்தேற்றும்

---

* குகு—அமாவாசை

இந்திரனுதியர் போகம்—கீழே
யேய்ந்தவிருள் யமலோகம்—அன்பா
விணையுஞ்சரிதை செய்வோரின மணையுஞ்சுகபதமாதியு
மிசைக்கும்—கொள நசைக்கும்

சாக்கிரசொப்பனஞ் சுழுத்தி—மிசை
தங்குதுரியமும் வழுத்தி—வளந்
தருசத்தமெனுலகத் தொடரிருபக்கமுமுளவற்புதந்
தனையும்—கொடு புனையும்

வாக்கிறந்தாய் தருசோதி—மலே
மன்னுமின்றி யந்தமாதி—அதன்
மகிமைத்திறமுழுதிற்றெனை மகிழச்சொலுமளவைத்தல
மதியால்—தேர்தல் விதியால்

பூரணமெய்யருட்டீர்க்கம்—பெறு
புண்ணியர் சாருஞ்சன் மார்க்கம்—புகு
புனிதச்சிவவடிவுற்றவர் நனியெட்டிடுமுயர்மெய்க்கதி
போதும்—நன்று மோதும்

காரணமாதவர் சிந்தை—யென்றும்
காட்சிபெற்றேயமர் விந்தை—தனைக்
கருணைக்கரலிகிதத்திடைதெருளப் புரிகுருமெய்க்கழல்
கணிப்பாம்—பவந்துணிப்பாம். (ந)

# கணேசர் சந்நிதான விசேடம்

(என்னடி நான் பெற்றமங்கை என்ற சந்தம்)

அந்தண்புவி மீதிற்றனமே-மாத-ரினமே-மிகு-கனமே-யென
அல்லற்பொறுத்திட மனமே—இச்சை
யலையாழியினிடை வீழ்தரு மறியாமை கொள்முழுமூடரும்
ஆதரவான்கரையேற—பர
போதசுகானந்த மீற

எந்தைராமானந்தநாமி—யன்பர்காமி—குருசாமி—பர
வின்பம்விளை தருபூமி—யென்று
மிமிழ்வாரியின் மிகையாகிய வருளாலுலகுறு மானிடர்
யாவருநன்னெறிபிடிப்பான்—எண்ணிப்
பூவர்கணண்ணுற நடிப்பான்

செம்பதுமப்பதம் வணங்கும்-தொண்டிவிணங்கு-மதிநுணங்
சீரடியார்மனமுணங்கும்—படி. [கும், அருட்
செயிரேபுரிகொடுமால்வினை யடியோடறும் வணமேபுரி
சித்திமமோர்க்கடன்கோயில்-எனச்
செய்தளித்தான் முத்திவாயில்

அம்புவியிற் பரன்வாழும்—தலந்தாழும்—அன்பி-லாழும் நிச
வார்வமுள்ளாரிவண்சூழும்—தோறும்
ஆ ஆ விதுபோலோர்தலம் நாலாசையின் மேலேயிலை
அற்புதமற்புத மென்பர்—நிறை
கற்புள விற்பன்ன வின்பர்

---

* ஆசை - திசை

வில்லுமிழுங்கருமேகம்—பொய்த்து லோகம்-பசிதாகம்கொடு
வெம்பிடுநாளபிடேகம்—செய்து
விளைவெண்டளை தனிலெக்கைதவிள் பதிகஞ்சொலிலுட னின்
விந்தைபெறுஞ் சோணைபெய்யும்—படி [புற
சிந்தைகனிந்தீதல் செய்யும்

அல்லறுக்கும் *மணியாராம் அலங்காரம்—செய்யபாரம்தனை
அற்புதத் தோடுகாணேரம்—தனி
லடங்காப்பொறிபுலன்யாவும் வைகிடங்கேட்பது மிலதாயுயர்
ஆனந்தமாகியேவியக்கும்—சுக
மோனங்கொள்வானுடனயக்கும்

கண்டவுடன்சிரங்குட்டி—கரங்கட்டி-கண்ணீர்கொட்டிகஞ்சக்
கான்மலரிற்கருத்தொட்டி—யெரி
கனன்மீதுறமெழு காமெனவுருகார்வ மெய்திடுமாதவர்
காட்சியருட்டரிசனமே—இன்ப
மாட்சியளித்திடுமனமே

அண்டர்புகழ்தருசித்தி-யெழிற்புத்தி-தினம்நத்தி-மார்பி
லணையுமகோர்க்கடவத்தி—முக
னமருந்தனியிடமுற்றபல் வியனுஞ்சொலமிகுவிற்பன
வாதிசேடன்றலைவணங்கும்-எனிற்
பேதைநானென்சொல விணங்கும். (ச)

---

* மணியாரம் - உருத்திராக்கமாலை

## தண்டபாணி சுவாமி சந்நிதிச்சிறப்பு

(பொன்னுலவு சென்னிகுள என்ற சந்தம்.)

குன்றுதொறு நின்றடியர் நன்றுபுகல் கின்றதுதி
கொண்டருள்புரிந்து மகிழ் வானவன்—அன்பர்
*புண்டரிகத்தூறுமின்பத் தேனவன்—உயர்
கோலமிஞ்சருணைசலம் பெறுவாழ்வெனுந்தவ ராசன்விண்டிடு
கோமளக்கவிக்கணிச்சையானவன்—வள்ளி
சாமளத்தனத்தைநத்து கானவன்

கன்றுமனமொன்று மெனைத்துன்றுபவ மின்றகலக்
கந்தவரவிந்தபதந் தந்தவன்—இராமா
னந்தவருணமமொடு வந்தவன்—மிகு
காதலார்† திருவோணமாபுரி மீதினீள்கவுமாரவாலயக்
காட்சிபெறுமற்புதத்தினீட்டமே—சொல்லக்
கேட்கில்வினை விட்டொடுக்கு மோட்டமே

யாசபந்த ‡ மோசு சந்த நேச மந்த காசவந்த
பாலொளிவெணீறமைந்தகோலமே—யூன்று
கோலொடுகௌபீன மொன்றுசீலமே—கொடு
பாரிலங்கியயாருமன்பொடுபேணிடும்படியேயமர்ந்தருள்
பண்ணவன்றனதருட் பெருக்கமே—தின
மெண்ணிடவுண்டாமனத்துருக்கமே

தேசம்விண்ட தேசுகொண்ட வாசதண்ட பாணிவிண்ட
திப்பியப் பொருட்சுவைய பாரமே—கொள்
திருப்புகழ்க்கவி சொலார வாரமே—கேட்டுச்

---

* புண்டரிகம் - இருதயகமலம் † திருவோணம் = சிரவணம்
‡ மோசு = கெடுக்கிற

சேடனீளிடியே கொலாமெனை வாடியே புகனுவொன்மிகச்
சிந்தை யிடையே பயநிறைக்குமே—பொருள்
விந்தையினே கையதை மறைக்குமே

வேதவந்த பாதகந்த நாதனந்த போதசந்த
மேனிதங்கிலே பனங்கொள் வாசமே—யிந்த
மானிலத் துளோர்களின் சுவாசமே—யொன்றி
விஞ்சிடும்புல னஞ்சையுங்குக னஞ்சரண்செலும் விஞ்சைதந்
மேனிலேக் கதிவழியிற் கூட்டுமே—யுயர் [தவிர்
வானிடத் தருட்கவலே நாட்டுமே

வாதுதங்கிடாது கந்தன்மீது சந்தமாது ரங்கொள்
வண்ண மிகப்பாடு மன்புவேலேயே—நிகர்
திண்ணியர் பெருக்குகண்ணீர் மாலேயே—யவிர்
வள்ளனீறதை யள்ளியேபுவி நள்ளுமானிடர்கொள்ளவேயவர்
மாணடித்து களுடனே யீயுமே—யதைப்
பூணுமுத்தமர் பவமுங் காயுமே

*போதுகொண்டு போதுகின்ற போதுகொண்டு போதுகின்ற
பூரணனுக் கர்ச்சனே செய்யன்பரே—யங்கி
சேருமெழுகொத்துருகு மென்பரே—யவர்
போதமிஞ்சுசை மீதமைந்தவிபூதி கண்டிடிலேத மென்பன
போமருக்கன் சாடுமிமம் போலவே—யுயர்
சேமமுற்றுஞ் சாரவருஞ் சாலவே

ஓதுமுத்த ராயனத்து மீதுதெக்கி ணுயனத்து
முய்யவலஞ் சாடுகூட லம்மையே—யெனச்
செய்யுமலங் காரவாரசெம்மையே—காண

---

* போதுகொண்டு—காலமமைந்து, போதுகின்ற—பேர்துமான
போதுகொண்டு—புட்பங்கொண்டு, போதுகின்ற—செல்லுகிற.

ஒற்றபேர் மனமற்றுமோர்பொருள் பற்றுமோ நினைவுற்றெறு
லொத்தவுளத் துங்கனிவு நண்ணுமே—புண்மைப் [துக
பத்தியுளோர்க் கென்புகல வொண்ணுமே

கொன்னிலவு பொன்னுலக மன்னலகி லின்னலுறக்
கோதில்சயந்தற் சிறையில் வீக்கியே—யவன்
சோதி யுலகத்தையு நீருக்கியே—யுறு

கோரசூர சமாரதீர வயாரகாரண பூரணகர
கோலங் கண்டோருக்கு மலங்கூடுமோ—மனம்
ஞாலங் கண்டினப் புலனிலோடுமோ

வன்னமயில் தன்னில்வரும் பன்னிருகை மன்னனருள்
மன்னுகவு மாரரினம் போற்றவே—யவர்த்
தன்னிகரிலாப் பதத்தி லேற்றவே—தினம் [யாவையும்

வாய்ந்தெழிற் றிருவோணமா புரிதோய்ந்தி யற்றருளாடலி
வகைபடுத் தெடுத்துரைக்கக் கொஞ்சமே—யவை
தொகைபடச் சொற்றேதுதிப்பாய் நெஞ்சமே. (ரு)

---

## கோயில் வளம்

(புள்ளிக் கலபமயிற்பாகன் என்ற சந்தம்.)

ஆறுசமயத்த வருந்தானே—யென்று
மப்பாலுமாகி நின்றகோனே—தின
மமைந்த கௌமாரமடஞ் சமைந்தகோவில்பெறும்
அணியே—சொல்வேன்—கணியே

கூறுமுயர்மதத் தெல்லோரும்—ஒன்று
கூடித்தொழும்போது டற்சேரும்—பல
கோலமு மெவ்வெவர்க்குஞ் சாலவமைந்துபுறம்
குறிக்கும்—பண்பு—மறிக்கும்

வில்லுமிழ்பொற் காவடிதோ ளேற்றி—யன்பால்
மெய்சிலிர்த்துக் கண்களினீரூற்றி—சூரர்
விண்முகமாலைத்தெறுநற் சண்முக மாலைப்பனுவல்
விள்வார்—இன்பங்—கொள்வார்

எல்லுற்றமர் சிகரிமிசையே—இந்த்ர
வில்லுற்றொளி குலவு மிசையே—விண்ணோர்
ஏத்துமிறைவன்பிரபை சாத்தி யலங்கரித்த
தென்னும்—படி—மன்னும்

நீதியடியரிடை சேர்ந்தோர்—பின்பு
நீங்கவருந்துவரென் றோர்ந்தோர்—சொல்லல்
நிசமுற்றிடப் புறத்தின் வசமுற்றிட மனத்தில்
நினைவார்—மிக—இனைவார்

தீதினரும்பத்தர்பரி சனமே—கொடு
தெய்வவடிவத்தொர்தெரி சனமே—பெற்றுச்
சேணுயருமேருவரை காணுமுயர்காகமிணை
சேர்வார்—களி—கூர்வார்

கோபுரத்தின்மேவுகிளிக் கூட்டம்—அன்பர்
கூறுபலகவிகளி னீட்டம்—முற்றும்
கூறியருணாசலங்கொள் வீறியலு நாதனெனக்
கொள்ளும்—படி—நள்ளும்

நூபுரஞ்சேர்சீறடியா ராட்டம்—தனை
நோக்கிவெட்கும்வான்மகளி ரீட்டம்—என
*நொச்சிமிசைமின்னினங்க ளிச்சையுடன்வந்துவந்து
‡நூறும்—கணம்—தோறும்

* நொச்சி—மதில். ‡நூறும்—மறையும்

மல்லற் சிகரி மிசை யுறங்கி—முகில்
வார்ந்து கண்ணீர் சொரிந்து கறங்கி—நிறை
மண்டு கௌமாரர்முறை கண்டு நிலைக்க வெண்ணி
வருந்தும்—தவம்—பொருந்தும்

செல்லின்மிசையாடுகொடி யாடை—விண்வாழ்
தேவர்கண் மனத்தினிலை சாடை—தன்னால்
தெற்றென விப்பூவுலக ரிற்றெனவுட் காணும் வண்ணந்
தேற்றும்—இச்சை—மாற்றும்

* இல்லை குறையீ தென்றுட் போவார்—உடன்
‡ இல்லை குறையென்று வெளியாவார்—அவண்
ஈயு மிறைவன்குலவு கோவில் வளமத்தனையும்
எவரே—புகல்—பவரே. (சு)

## நித்தியா நித்திய ஆராய்ச்சி

(பூமி மெச்சிடும் என்ற சந்தம்)

மெத்த முற்பிறப்பி னுத்தமத் தவசுபணினோ—ரருள்
நண்ணினோ—ரிந்த மண்ணினோ—ரறிவின்
மீதிலாய் வதற்ற கோதிலாத ஞானக் கண்ணினோர்
நித்தியத்தி னொடு நித்தியத்தினிலை யாய்பவர்—இச்சை
காய்பவர்—மன—மோய்பவர்—என்று
நேருமோ சுகம் பொய் தீருமோ வெனவுளாய் பவர்
நாமமிக்குறச்செய் தேமலர்க்கணை பெய் வேளையே நிகர்
காளையே—யென்றோர்—பூளையே—யென்ன
நரைத்துத் தேகமுற்றத் திரைத்துச் சாய்ந்தரிந்த நாளையே

*ஈதில்லை குறை யென்று உட்போவார்
‡உடனே குறையில்லை யென்று வெளிப்படுவார்

ஏம மென்னு மொரு நாமமன் னுமைசுவரியமே—பெற்ற
பெரியமே—யாமென் பிரியமே—மிக
வெய்தினரிடத்தும் ஐதினச்சுதாரித் திரியமே

பாவ மங்கையர்பால் மேவலின்ப மெனுஞ் சொல்லரே—யறி
வில்லரே—மிகு—புல்லரே—இன்பம்
பயக்கு மற்றை யிரண்டியக்கு மொப்ப தென்பாரல்லரே

சாவதுற்ற போது மாவலிக்கு மாசாபாசமே—யென்ன
பாசமே—கொள் பைசாசமே—யெனுந்
தையலாரியமன் கையதான கொடும் பாசமே

பற்று மிஞ்சவெமைப் பெற்றெடுத்ததாய ரெத்தனை—பிதா
எத்தனை—பெண்டி—ரெத்தனை—மிக்க
பாசங் கொண்ட வெமை மோசங்கண்டவுட லெத்தனை

மற்றும் யோனி தொறு முற்ற தானபவ விலக்கமே-செய்யத்
துலக்கமே—யாயு—ளிலக்கமே—வீண
மாளு மென்று சேடனுளு மெய்து முள்ளக் கலக்கமே

காதணைந்த குழை மோதுகின்றகட்சிமிட்டிலே—யொளிப்
பட்டிலே—செய்—பகட்டிலே—மருளக்
காதல் பூட்டு மாதர் சாதல் வேட்டுச்சார்ந்தார்கட்டிலே

ஏதுவைய மிசையாது மோர்படித்தா யில்லையே—மாறு
தொல்லையே—என்ன—தொல்லையே—யினி
யென்று சேர்வமுயர் நன்றதான கதி யெல்லையே

எந்த வேளையுயி ரந்தகன்கடவு மாயமே—மிக்க
பாயமே—செய்திக்—காயமே—வீழ்த்த
வெண்ணுவார் கொலது நண்ணுருமலெதுபாயமே

சந்தமே விராமானந்தநாதனரு ணம்பனே—நிகர்
குப்பனே—யெனப்பம்பனே—கர்கள்
சாற்றுவார் பவத்தை மாற்றுவான மக்கவும்பனே. (எ)

---

## அடியார்குழாமடஞ்சாரவெண்ணுதல்

(செந்தின் மாநகர் வாழ்கந்த நாதன்—என்ற சந்தம்)

சொந்தமேவிராமா னந்தநாதனிரு
துய்யபாத கஞ்சமே-நமக் குய்யமேவு தஞ்சமே-பவத்
தொடர்புகோறும் நஞ்சமே யெனத்
துறந்துவைய நசை மறந்து மெய்யருளிற்
றோயுமன்பர் புஞ்சமே

பந்தமேவுமனை யந்தமானமனை
பற்றுமைந்தர் மிசையே—மிக வுற்றமைந்த நசையே-யெனும்
பாவகோர வசையே—யற்றிப்
பாரின் மீதறிஞர் யாரு மெச்ச வெங்கும்
பரவுவார்க ளிசையே

அந்தமானவுடல் சொந்தமான பொரு
ளாதியாகு மிவையே—மாயோ பாதியாகு நவையே—மிக
அல்லலாக்கு குவையே—சொல்ல
லாவதிற் பழுதிலாத நற்சுக முண்
டாகவைப்ப தெவையே

மந்தமாமதியர் மைந்தர் வீடுபொருள்
வார்ந்ததாகு மினையே—மிக வீர்ந்த நூலதனையே—தம்பால்
மருவுநல்ல வினையே என
மயங்குகின்றவணி தயங்கு நுண்ணிடையார்
வசத்தராவ ரெனையே

பெற்றிடற் கருமை யுற்றதாகியுயர்
பிறவிதான்ம னுடமே-மாற்ற மறலி யென்று நடமே-யாற்றும்
பிடரிமீதி னிடமே—யிந்தப்
பெற்றியோர் கிலது பற்றிலே யுழலல்
பேதையான மடமே

கற்று நன்னெறியைப் பற்றிடா துலகர்
கட்கு நாளும் விற்பரே-சற்றும் வெட்குறாத வற்பரே-பவங்
கதித்து நீடு வெற்பரே—யவர்
கண்ணெதிர்ப்படினு முண்ணடுக் குறுவர்
கதியை நாடு பொற்பரே

வம்புவாதுகணி றம்புதுற்சனர்கள்
வாசமுற்ற விடமே—மிருக நேசமுற்ற கடமே—யுறு
மதிமருட்டு விடமே—யங்கு
வாழ்ந்துளார் களென்று மாழ்ந்த பாழ்நரகில்
வதிகுவார்கள் திடமே

வம்பு தோயுகள வம்புயாத னங்கொள்
மாதரார்க ணடமே—யென்றும் போதமேவு தடமே—கொடு
வளர் கௌமார மட்மே—யொன்றி
வளரிரா மானந்த குருவின் மாணடிகள்
வாழ்த்தில் முத்தி திடமே. (அ)

## அடியார்கள் மடாலயஞ் சார்தல்

(சந்தவரை வந்ததுக நாதா என்ற சந்தம்)

ஞாலமயல் மூலமறச்சாடி—யன்பர்
ஞானநிலை தேர்வுறுவா ரூடி—இராமா
னந்த குருநாதனடி தேடி
புகழ்பாடி—யன்பு நீடி—யின்ப
நல்லருட் கௌமார மடங்கூடி

நாலெனெ வேரலமிடும் வேதம் - உண்மை
நாட்டும்யராகம விஞேதம் - மிகும்
நன்மைய தென்றோதிடும தீதம்
குருபாதம் - எனும் போதம் - கொடு
நாசமுறச் செய்வர்திரி பேதம்

மிக்க குருவைக் கணெதிர் கண்டே - யவர்
வேதவுயர் வாந்திருவாய் விண்டே - தினம்
விள்ளுமொழியாகிய கற் கண்டே
மிகவுண்டே - யன்பு கொண்டே - யின்பாய்
மிஞ்சவியப் பாருளந் தெருண்டே

மக்களுருவைக் கொடுமண் மீது - தவ
மாட்சியை விட்டேய வத்திற் போது - போக்கி
மாக்களைப் போலே மடிந்தி டாது
யிது போது - பதப் போது - தந்தான்
வள்ளலெனக் கொள்வரிரும் பூது

கஞ்சமல ரொஞ்சியவுல் லாசம் - துவர்க்
கண்ணறி கிலாத பிர காசம் - திகழ்
காட்சி தெவிட்டாத மந்த காசம்

உள வாசம் - கொளு நேசம் - பெற்றோர்க்
கண்களிற் கண்டால் விலகும் பாசம்

விஞ்சு பவசஞ் சலங்க ணீறு - பட
விட்டொளி பரப்புதிரு நீறு - முற்று
மிக்கவிரு முத்துளமெய் வீறு
சிந்தை மாறு - ருதபேறு - பெற்ற
வித்தகருக்காருவமை கூறு

நஞ்சனைய நெஞ்சகத்தைத் திருத்தி - இராமா
னந்தவருட்டேசிகன்று ளிருத்தி - புலன்
நாடிடுதற் போதவுண வருத்தி
மனம் பொருத்தி - யின்ப விருத்தி - கொடு
நாளுமடைவார்களுளந் திருத்தி

மிஞ்சு புலனஞ் சினுக்கு வன்பர் - இன்னும்
வேண்டு மன்பென்றேயழும் பொய்த்துன்பர் - எழு
வேலையினு மிக்கவுய ரன்பர்
உருகென்பர் - மிகு மின்பர் - யாவு
மெய்க்குரவன் றன்றிருக் கூத்தென்பர். (சு)

---

## நந்தவனச்சிறப்பு

(பாதிராத்திரி வேளையில் என்ற சந்தம்)

தடைபடாவருட் கடையிராமானந் தப்பெயர்ப்பெரு மானே
மறைச்—சார மாகியதேனே—யென்றுஞ்
சலிப்பறப் பொழிவானே—கொண்ட
தனிப்புகழென மணக்கு நந்தனஞ் சார்வளம் புகல்வேனே

இடைவிடா துடிக்குலங்களேயென்னவேய்ந் திடுந் துணர்முல்லை
யிணை யென்று மாதர்தம் பல்லைப் புகழ்
இயல் வலார்க்கு மூக்கில்லை—யென
வியல் மணமிகக் கமழ்ந்து வாய்திறந் திசைத்திடும் வகைச்
சொல்லை

அந்தமொன்றிய கிளை குலாவிய கன்றிடும் பாரிசாதம்
தன்னி லமைந்ததான †வாமோதம் மாந்தர்
அனைவரும் ‡ பிரமோதம் கொள
அட்ட திக்கினு மெட்டியாண்டு மடக்கிடும் பலகாதம்

அந்தமேவிய கந்தநாயகற் கமைந்த பேர்ப்பிரதாபம்
கொட றைந்த பேர்க்குறு பாபம்-போக்கி
யன்பு தேக்கிடு நீபம் தரு
மரியமாமலர் விரியத் தேனுகர்ந்தார்த்திடுங் * கலாலாபம்

மதமுலாவுகை முகவற் கின்னிழல் வதிய நல்கிடு மாட்சி
யுடன்—வணிகமா திருகாட்சி - கொள
மதுரை வந்ததோர் சாட்சி—யின்ன
மகிமை பற்பல கொண்ட வன்னி வயங்கல் கண்டிடிற் காட்சி

மிதமிலாமண மெண்டிசைக் கணும் வீசு செண்பகத்தாரும்
பர்கள்—விளங்கு விண்ணினைச்சாரும்-படி
மிஞ்சிறு தாரு விற்றீரும்-என
விள்ளுவாரஃதுள்ளதோ வெனவிரும்பிப் பார்த்திட னேரும்

† ஆமோதம்—மிகுமணம் ‡ பிரமோதம்—உவகை
* கலாலாபம்—வண்டு

தவள மங்களவாணி செந்திரு சாமளங் கொளானந்தி
யிவர்-தாமொன்றாகப் பொருந்தி—யுற்ற
தன்மை யொத்திடப் பந்தி—கொடு
தயங்கிடுங்கந்த நயங்குலாவிய சந்த நீடு செவ்வந்தி

நவமலிந்தாரும் கவரும் வண்ணமுண்ணசை விளைத்திடும்
புட்ப நாடும் வேலியாம் ராசா—வண்டு [ரோசா
நயந்து மற்றதின் மூசா—வண்ண
நாளுந்தன் மலரீந்துணச் செய்திட்டாளு மற்றவை தேசா

மிஞ்சவெங்கும் படர்ந்து நீள்மனோரஞ்சிதப் பெயர்ச்சந்தம்
விளங்கு பூப்புவிக் கந்தம்—தனை [கொடு
மேவியே விரைந்தந்தம்—பட
விள்ளு மெல்லிதழ் விரலிலள்ளலில் விளங்கல் கண்ணினுக் கந்தம்

மஞ்சுதோய் தருநந்தியா வட்டமருக் கொழுந்து சம்பங்கி
பன்னீர் மாதுளை நாகலிங்கி தும்பை
*வாய்காந்தி யெல், குரங்கி, யாத்தி
மத்தம் வெட்சி செம்பரத்தை யாதிய மணக்கு மெங்கணும் பொங்கி

கண்ணிறைந்து பல்வித மிலங்கிய கடிகமழ் கரவீரம்
மிகு-கவினுலாங் கன்னி காரம்-புட்பக்
கணஞ் செறி செம்மந்தாரம்—என்றுங்
கண்ட பேருளந்துண்டமுங் கொடுகாட்சியா மலங்காரம்

வண்ண மார்பல மல்லிகைத்திரண் மயிலை சாதி பிருந்தை
மண மாசி நீறுகரந்தை-மிகு
வண்டினம் பொலி சந்தை-என
வயங்குகின்ற முற்றியம்பித்தீர்த்திடும் வண்ணமோ நிறை விந்தை (க0)

* காந்தி யெல் குரங்கி - சூரியகாந்தி சந்திரகாந்தி.

## சோலைச் சிறப்பு

(சேந்தின் மாநகரந்தனில் என்ற சந்தம்)

சந்தமா மறையந்தத்தின் மேவிய
சச்சிதானந்த மிப்பூமி—யுள்ளார்
சாற்றிரா மானந்தசாமி—யெனச்
சம்பவங் கொடுவந்து நந்தமு
ளொன்று பந்தம கன்றயும்படி
தண்குலாவிய பாதசரோருகம்
சார்ந்து கலந்திடுமாறே—யருள்
கூர்ந்ததற் கேதுகை மாறே

கந்தசாமி சொலுங்கவி தன்னையுங்
கண்ணியணிந்திடு மையன் - தவப்
புண்ணியர் போற்றிடு மெய்யன்-அன்பிற்
கண்ட தொண்டர் கணங்குலாவு மண்
விண்டலம் புகழ்கின்ற வீறியல்
காமர் நீள்கவு மார மடாலயக்
கானலர்ச் சோலை கொள் வண்ணந் - தனை
யானறை வேன்றேரும் வண்ணம்

கொன்னுலாவிய மின்னவிர் வான்றொடுங்
கோபுரத்தின் புடையோரம் - பெற
வேபுணர் கின்ற மந்தாரம் - மலர்
கொண்டு நீடிடலங்கி மாமலை
கண்டு தேறிட வெண்கணன் மிகு
கும்பலாகிய வன்னவடிவுகள்
கொள்ளலுற்றான் கொலென் றெண்ணும்—படி
வெள்ளை மலர்க்குல நண்ணும்

மின்னுலாம் புகழ் மன்னிய மாறன்
வியந்தணியுந்தகை மன்னும்—மெய்ந
யங் கொள்வகுளம தென்னும்—பெயர்
விண்டிடும்படி கொண்டிடுந்தரு
மண்டிடுந்துணர் மண்டலந்தனில்
வீழ்ந்துலர்ந்திடு காலையு மேவிய
வேன்மணமுன் பெனவூட்டும்—பண்பாற்
றுன் மகிழென்ற பேர் நாட்டும்

வையம் யாவையுஞ் செய்யவொர் தாளிணை
வைத்தளந் திட்டகார் வண்ண—னெடு
ருத்திரனு மந்தி வண்ணன்—றங்க
வண்டயங்கிலை நீழலே தரு
விண்டலங் கொடுலா வியாலது
வாய்ந்த வெங்கையிரா மானந்தப்பெரு
வள்ளலுக்கும் நிழலீயும்-படி
கள்ளலுற்ற தெனத்தோயும்

மையணைந்திடவானுற நீண்மர
மல்லிகைமேனறு நாற்றம்—மிகப்
புல்லிய பூநிறைமேற்றப்—இந்த
மண்டலந்தனையுண்டு மிழ்ந்திடு
கொண்டலென்றொலி கொண்டவிர்ந்திடு
மாதவன்றிருமேனியின் மீதணி
மண்டவிர்ந்தேயுடலங்கும்—சிதர்
கொண்டிடல்போல விளங்கும்

புன்னையாலுடன் கொன்னை கொன்றையினம்
பூத்துப்பொலிந்திடுந் தோற்றம்—மிக
வார்த்துச்சயம் பெறு சீற்றம்—பொலி
புண்கொளாவுடல் கொண்டவலனுயி ரண்டர்கோனறவிண்ட
பொங்கியேநிறைகின்றபொன் மாமணி [பொழுதது
பொத்தியசிரினின்மேலே—கீழி
ரத்தினகம்பலம் போலே

இன்னறீர்த்தருணன்னயச்சங்கரற்
கிச்சைசெயலறிவென்னு—மிதழ்
மெச்சவென்னுளினு மன்னும்—வில்வத்
தின்றனம்புரை யும்பழங்களி ஞென்றிடுங்குறி யன்புகொண்
ஈசுரன்றனகங்கள்கொடின்புட [டுயர்
னெத்தினத்துங்களி மிக்குந்—திட
வைத்த நகக்குறியொக்கும். (செ

---

## இதுவுமது

(திருவுற்றிலகுகங்க என்ற சந்தம்)

அருள்விற்பன நிறைந்த மறையுச்சியிலிலங்கு
மருவப்புரணமென்ற வுண்மையே—மிகு
கருணைப்பொலிவமைந்த தண்மையே—கொடி
வாரவாரவிசால வாரிதியாடைமேவியபாரின் மானிட
ரந்தக்கவியுளாக வண்மையே—இராமா
னந்தப்பிரபுவான வுண்மையே

மருளற்றிடவுணர்ந்து சுகவற்புதமலிந்த
மகிமைக்குருபதங்க ளுடியே—மன
நெகிழத் துதியினங்கள் பாடியே—மிக

மாசில்காயிக மாதியேபுரிவார்கடோய் கவுமாரவாலய
மன்றக்குலவுசோலை நீடியே—திகழ்
வொன்றற்புதமனேக கோடியே

வளமுற்றிலகு தெங்கு முகிலைச் சிரமதன்கண்
மருவப்பெறுதன் மிஞ்சுகோரமே—செய்யு
மருணக்கடவுளென்று வீரமே—நிகழ்
மாசில்வேலனன்மேனிமீதபி டேகமாயிள நீரதாமென
மறையப்புரிய நின்றவாரமே—அன்பு
முறைகைக் கொடுவிளங்கு சாரமே

வளிநற் கடிபொருந்து குலை பெற்றளியினங்கள்
மதுரப்பொலிவுதங்கி ராகமே—செய
மதிதொட்டிலகு கின்ற பூகமே—யலை
வாரிசூழ்புவிமீதியாவையு மோகைசேரமுதியுமேன்மைகொள்
வசநற்சுவை பெயிந்தி ஞகமே—லலை
விசிறிப் பணிசெயுஞ்ச மூகமே

மதுரக்கனிவமைந்து புறமுட்செறிவு கொண்ட
வனசக்கனி யொடந்தண் வாழையே—மிக
மனதைக் கவருகின்ற மாழையே—தரு
மாதராதல மீதும்வானிலு மேகுலாவிய வாசமார்கனி
மசிவுற்றிரசம் விண்டு பீழையே—கொள
மிசை நெற்றிடுமுயர்ந்த * தாழையே

விதுவெட்டிடவுயர்ந்து நிறைவுற்றிடு பலங்கொள்
வியன் மிக்கிலகு சம்புநாவலே—யதி
சய முற்றுடைய தென்றுளாவலே—பெற

* தாழை - தென்னை

மேருமால்வரை மாடுதோய்தரு மானவேரச நீடுமாறென
விரைவிற் புகுமிலஞ்சி கூவலே—புணர்
கரையற்றிட வுறும்பின் வாவலே

சுவணப் பொலிவமைந்த வெலுமிச்சையு மிகுந்த
சுவைபெற்றுள கொழுஞ்சி நாரமே—யிவை
குவைபட்டற வழிந்து சாரமே—யுறல்
சோதிநாட தின்மேவு மாதர்களோகையால்விளை யாடுமாறுகை
தொடுபொற்பிலகு பந்து ஞாலமே—லுற
விடுபட்டடைதல் கொண்டகோலமே

கவடுற்றிலகு திந்திருணிமெய்ப்புகழ் பொருந்து
கவிஞர்க்கிதழ் தருட்புல் சாலவே—புறந்
துவிதத்தொடர்* பகன்ற மேலவே—யென்று
காரணுகரவாதிமாபுரி யான பேரையின் மீதிலேபுகழ்
கருதற்கமைவதின்றி நீடியே—திகழ்
பெருமைத்தகைய மென்று கோடியே

நவமிக்கிலகுசந்த மாமுற்றிலகலித்த
நடலைப்புவியமைந்தயாருமே—கதி
யிடமுற்றினிது தங்கவாருமே—யென
நாளுமேபுகல் சாகராசம ஞதியாடல்கள் காணுவானுடன்
நணுகித்தெரியும் விந்தை நேருமே—விணா
டணுகிப்பொதியையின்று நேருமே

புகலற்கருமையென்ற விவிதத்தருவமைந்து
புலவர்க்கணிமைகொண்டு கூடுமே—யுள
பலவற்புதமு மிஞ்ச நீடுமே—அங்கு

---

* துவிதத்தொடர்பு பிறப்பு இறப்பு என்பன

பூவைசாருநிலாவிவானரமாதரா ரிசை கேள்வியேகொடு
புனிதப்படவிசைந்து பாடுமே—மயி
லினிதத்தகை பொருந்தி யாடுமே

மிகவெப்பமதமைந்த வருணக்கதிர் கொளுந்து
விதனத்தினர் புகுந்தகாலேயே—யுறு
கதிரைக்கொளவிரும்பு சோலையே—திரை
வேலைநாணும பாரபோரு ளோடுபொரிடை மேவியேயருள்
விமலக்குருவிரண்டுகாலேயே—தொழும்
அமலற்கிணையதொன்றும் வாலேயே. (கஉ)

## கனகசபைச் சிறப்பு.

(செந்தூர்வளர் முருகநாதா என்ற சந்தம்.)

சொல்லற்குவமையொன்றுமில்லோன்—துவரனைய
சுந்தரமாமேனிபெற்ற தொல்லோன்—மல
தொந்தமறவேகுவிந்த பந்தவடியார்கள் சிந்தைத்
* தோடக மலர்த்துமொளி யெல்லோ-னிராமானந்தத்
தூயவருணமமொன்று வல்லோன்

நல்லற்புதமுடன் வீற்றிருக்கும்—கனகசபை
நாடிடுதொறுமுவகை பெருக்கும்—கண்டால்
நாகரினம்வாழ்பதியும் மாகரமராவதியும்
நண்ணிடுமெனையொப்பவருக்கும்—உளமிசையி
லெண்ணிடுபோது மருவருக்கும்

விண்ணையணைந்துமிக நீடும்—பொழிலானது
வீறுங்கனகசபை மூடும்—உள்ளே

* தோடகம் - தாமரை

வீங்கியவந்தகார மேங்கியிரிந்துமப
மிக்கசுடர்க்கலசங்கள்கூடும்—கதிரினங்கள்
ஒக்கவேருடனறச்சாடும்

திண்ணியர்கள் சேருமுயர் செப்பம் அடையவிடுஞ்
சேமகரமானவெழிற்றெப்பம்—எனுஞ்
சேவடிதுலங்கு மிறை யோவற விணங்கியுறை
தெய்வசபைகாணு மன்றே வெப்பம்—எந்தவுடற்குஞ்
சேரே னெனவிடுங்கையொப்பம்

எந்தையுலகோர் பயிலப்பூசை—புரியும்பொழு
திசைக்குங்கண்டாமணி கொளோசை—யன்பா
லெட்டு மிருகாதுடைய ருட்டமூவு தீதடைய
வெங்கைக்கியாம் புகுது * மாசை—யெனக்கணத்தி
லேகிடப் பொருந்து மிகவாசை

பந்தமற்றோர் சிந்தையுவமானம்—புகலொளி
பம்பிய சீர்மலிவிமானம்—தன்னிற்
பற்றிடுதண்டுறு சீலம் பெற்றகுருவுயர் கோலம்
பார்த்துருகிக் கண்ணீரினனம்—அமைந்தவர்க்குப்
பார்க்கு மிடத்தாரே சமானம்

ஆதிமத்தியந்த மெனச்சொல்லும்—நிலைகண்மிசை
யற்புதமிகவே கொடுபுல்லும்—அத
னந்தரங்க நிச்சயத்தை † யந்தரங்கநிச்சயத்தை
யடைந்தவரேதெரிய வொல்லும்—புலனடைகொ
ளல்லவர்புத்தியெங்ஙன் செல்லும்

* ஆசை - திசை † அந்தர்அங்கு—உள்ளாகிய அவ்விடத்தில் - அநிச்சை அத்தை - நிராசையாகிய அதனை

வாதியற்று மாயை வலிகடியும்—வளமைபெறு
மாதவத்தரன்பு கொடுபடியும்—சற்று
மாசிலிராமானந்த தேசிகன்மேவானந்த
வாரிதியதாமெனவே படியும்—கனகசபை
வளமைசொலவெர்க்கே முடியும். (௧௩)

---

## வாவிச்சிறப்பு.

(மரகத விகசித என்ற சந்தம்)

வளமிகுசிரவண புரமிசையடியவர்
வனசமென்மலரடிதொழவருள் புரிகவு—மாரன்—மிகு தீரன்
வளர்புகழ் மிகைபெறு கனகசபையினிட
மருவியமகிமை கொள்மணமலிதடவள—மானே-புகல்வேனே
உருவொலி பரிசமி ரசமிகு மணமுட
னுறுபுலன்முழுமையும் வசமுறவியனல— மோவாதினமூவா
கருமைகொள்குவளையு களவனசமுமுறல்
கனிவுறு திரிதமிழ்குறு முனிதெரிசனை—காணும் நிலை
[தோணும்
வனசநலிசையளி செலவறமது விடன்
மனதுவகையினிறைகுலமுடையவர் கொடை—போலு
[மெனக்காலும்
தனதொருகணவனெனிரவியை விழைவொடு
சலசமெ லிலைமிசை புனன்மணி வகைகொடு—சாரும்
[களிகூரும்
நவில்குரு குகள் கயல் கொளவசை வறவுறல்
நயகதிவிழைவினர் குருபரனடிமலர்—நாடும்—படிகூடும்
தவநிகர்தாமுயல் குருகுகண் மிசைகய
றழைகமு குறுகுலை மலிகனி களினிரை—சாயும்—படி
[பாயும். (௧௪)

## கௌமாரசபைச்சிறப்பு

**(மஞ்சுநிகர் குந்தளமின்னே என்ற சந்தம்)**

எல்லை யிலானந்தபோதனே - யெனவுலக - னவரத
மேத்திராமானந்த நாதனே - வள
ரின்பநீள்பர மென்பதாகவு ளன்பிறுடுபு துன்புசாடு
மேற்றமலி யன்பரகல்வாம்-அருணலங்கொள்-பெருமிதங்கள்
சாற்றிவினையாவு மகல்வாம்

சொல்லிலடங்காப்பெருமையே-சிரவணமா-புரமிசையே
தோய்கௌமாரமடத்தருமையே - பெறு
துங்கமேவிய சிங்கமே நிகர் பொங்கமேவினர்தங்குமேன்மை
[கொள்
சுக்கிரவாரங்கொள்சபையே-மிகுதிபெற்ற-மகிமையுற்ற
அக்கிரகண்யப் பிரபையே

தொல்லையகல்பிரமசரியம்-உலகமயல்-விலகியுயர்
தூயபரபோகதுரியம்-பெற்ற
தொண்டரொன்றுபெருஞ்சுகங்களை நன்குதந்திடுமொய்ம்ப
[தென்றது
தோய்ந்தொழுகக் கொண்டமலரே—யெனவறிஞ—ரினமகிழ
வாய்ந்தவத்தை தீர்வர்சிலரே

செல்லின்மிசைதோற்று மின்னலே—புரையவதி—விரைவின்
செய்தியொடனந்த மின்னலே-நிறை
[மறை
சிந்துபின்படுகின்றவஞ்சமிகுந்த வைம்புல வண்டரொன்றிய
தேகமதையே மறந்தவர்—கணவமய—மணவரிய
மோகமறவே துறந்தவர்

இல்லறம் வானப்பிரத்தமே—யெனமறைக—ணுவலலுறு
மேற்றநிலையூடு சித்தமே—திக [புன
மென்றுகண்டும லர்ந்தகஞ்சமி சைந்தபைந்தள மொன்றிடும்
மென்று திகழ்கின்ற மதியே—மருவியுயர்—பருவரள
வின்றியவரென்று மதியே

மல்லல் பொலிகின்ற நாகமே—யபரிமித—விபவமலி
வண்ணவைம்புலன் கொள்போகமே—பெற்று [றென
மங்கிடுந்தர முங்கொள்கின்றதை யன்றியிங்கில தங்குமின்
மாட்சியறிவூடு கண்டவர்—பிறவியுட—னிறவியறு
மோட்ச நிலையாசை கொண்டவர்

மல்லிடுஞ்சமய விரோதம்—கொடுபெரிய—ததுவிதெனும்
வம்பாறியாதவதீதம்—பெற்று
வந்துவாதிடு கின்றவீணர்கள் விண்டகோதில்ம யங்குறுதவர்
வண்ணமதியற்ற பாலரே—யனையரெனும்—நினைவுபெறு
திண்ணமிகவுற்ற சீலரே

வல்லபிரமன் புகல்வேதம்—பிழியிரச—மொழிகொடருள்
வாய்ந்தகவு மாரவிநோதம்—புகல் [சுச
மங்களாகரமொன்றிடாறெனும் வண்கௌமார முளங்கொடே
வண்ணமருவுங்குருபாதம்—மலையனைய—நிலையதென
வெண்ணியுறுவாரருட் போதம். (கரு)

## இதுவுமது

**(கன்னல்சூழ் பழனம்புடைசூழ் என்ற சந்தம்.)**

மீதுலோகர் விழைசுக பேதமே
விட்டுமெய்யருளின் பிரசாதமே—மிக
விரும்பிடுங்கவுமார விநோதமே—யன்பில்

விண்டிடுந்தகை கொண்டிலங்கிட வண்டிடுந்துணையென்றுளன்
விமலராமானந்த குருபாதமே [புற
கமலமீதொன்றினர் சிரதீதமே

சாதுர்வேத சித்தாந்த நற்சண்மத
சமரசசமயாதீதாத்து விதத்—தகை
தழுவியகௌமா ரசபையற்புத—மிகு
சாரசம்பிரதாயநன்குணர் தீரமிஞ்சுகௌமாரர் தம்புகழ்
சாற்றவென்றும்வரும் * பிரமோதமே
தோற்றலின்றியறும் பிரமாதமே

தக்கசீர்ச்சுக்கிரத்திருவாரமே
சாருந்தோறும் வருமுளவாரமே - தழை
சகலருக்கு மெண்ணப்பிரகாரமே - தினந்
தந்திடும்படி நின்றுறுங்கடல்பின்படுந்தயைபொங்குகண்
சற்குருபரன்றனலங்காரமே [பெறு
முற்குறுகினர்க்கீந்திடுமீரமே

மிக்கதாமிலங்கோடு கௌபீனமே
விளங்குகண்மணிப்பூண்கொளதீனமே - மிக
வெள்ளைநீற்றின் முழுகியநானமே—கொடு
வில்லிடும்பவ ளங்கவிழ்ந்திடு துல்லியம்பொலி யுஞ்சுபங்கமழ்
வேற்றண்டோடுவியன்பெறுமோனமே
சாற்றங்கைகண்டிடில் வருஞானமே

இராமானந்தவள் ளல்லடிநாடியே
யெல்லையில்லவன் றன்புகழ்பாடியே - யுறு
மின்பமார்பரானந்தக் கூத்தாடியே - தின

* பிரமோதம் - உவகை.

மிசைவறும்பொறியும்புலன்களு மசைவுறுங்கரணங்க
இராப்பகலறியாவிடங் கூடியே [ளுங்கெட
விராய்ப்பதிந் திருப்பார் சுகமூடியே

அராகந்தீர்தர வாற்றியமுற்றவர்
அருட்சுகத்தினுக்காவன கற்றவர் - அன்பா
லார்க்கு மின்புசெய்கங்கணப்பற்றவ - ரணி
யாடைகொண்டுயர்மாதரம்புவி மாடையென்பவைமீதினெஞ்
வாசையாவன பற்றறவற்றவர் [சக
தேசவாசர்க்கருள் செயவுற்றவர்

வியன்கொள்பொன் கல்லணிகள்வெறுத்தவர்
மிக்ககண்மணிமாலை பொறுத்தவர் - விரை
மிஞ்சுறுங்களபாதி மறுத்தவர் - சதுர்
வேதமாகமமேலதாமென வோதுபூதி நிலாவுமேனியர்
வீரமெய்யருட்சீல நிறுத்தவர்
நேரலர்க்குமிக்கின்ப முறுத்தவர்

நயமலிந்துட் கரைத்திடுகீதமே
நற்கதைப்பெருக்கின் பிரபாதமே - கதி
நம்புமெய்க்கவுமாரர் விநோதமே - யுள
நாடுகின்றதொர்போதில் வண்டருநீடுமென்பொடுகூடிடும்படி
நண்ணுமாசையுளத்திடைமீதமே
பண்ணு மாலவர்நற்புகழோதமே. (கரு)

# குரு துதி.

(பவனகிரியதனுட்டானே என்ற சந்தம்.)

இராமானந்தப்பெருமானே - யருட் - கோனே - மிக
வேழையாமெனையாளுகின்றிலேகோழை நீடுவிகாதநெஞ்சின
னென்றோ - வருளின்றோ

ஆராமானுந்துற்புலனாலே - புவி - மேலே - யலை
யாழியூடுழலோர்துரும்பென வீழிலே சுழல்வேனையின்புற
வாளாய் - துணைத் - தாளாய்

ஓவாப்பெருந்துயரத்தோடே - யுன்றன் - மாடே - மரு
ஆழ்விராவருமா பெருஞ்சுக வாழ்விலே விடுமாறடைந்தன
னுற்றாய் - அருள் - நற்றாய்

நாவாற்சொலும் பலிசைப்பாட்டே, செவி-கேட்டே, யுயர்
நாதமீதுநிலாவுநின்சிறு பாததாமரையே யென்னெஞ்சிடை
நாட்டாய்-சிரஞ்-சூட்டாய்

வேளேவிடுங்கணைகளாலே-மிகு-மாலே-கொடு
வேலைவேலையைமானவென்றகண் வாலைமாதர்களோடு
நெஞ்சனை - மீளாய் - தடுத் - தாளாய்

காளேயவங்கழிவுறாதே-யிது-போதே-பர
ஞானநீடநுபூதிதந்தெனை மோனவானணைமீதுறங்கிட
நல்கா—யரு—ளல்காய்

ஊனுக்கையினின்மோகமீறி—தடு—மாறி— தின
மூணினோடுடையேவிழைந்துள நாணிடாதுழல் வேனுமுய்ந்
தொன்றா-யெனு-ணின்றாய் [திட

வானாட்டமரர்களவாவும்-சித்தி-யாவுந்-தந்து
மாயமாமுடல்கோடிகொண்டுழ றீயபாழ்வினைசாடுநின்பத
வானே—யருள் கோனே. (கள)

## இதுவுமது

(ஆறுமுகவடிவேலவனே என்ற சந்தம்)

அன்பருளத்தில்விரும்பினையாவு
மளித்தருளுந்தருவே—பர
மானந்தமோங்கிராமானந்த நாம
மமையருட்சற்குருவே

வன்பணிவனென்றெனைப் புறந்தள்ளிடின்
மற்றினியார்கதியே—யங்கை
மாறுகொளாதருள்வீறுதவும்படி
வந்ததயாநிதியே

கொங்குபுரியுந்தவந்திரண் டேயுருக்
கொண்டகுருநாதா—ஏழை
கூறுமுறைகொண்டுள்ளாருறவின்பங்
கொடுத்திடலாகாதா

பொங்குதுயரக்கடல் படிந்தேதங்குமென்
புன்கணறியாயோ—யிதைப்
போக்கியுனக்கேயாளாக்கி மெய்யின்பம்
பொருத்தலரிதேயோ

காலவெம்பாசமெனப் புலனுட்கலங்
கச்செய்யுதேசாலம் - இதைக்
கண்டனஞ்செய்தருட்டொண்டரி லென்னைக்
கலந்திடலெக்காலம்

சாலமயக்கும்பொய் மாயைசெய்துன்பஞ்
சகிக்கமுடியாதே—யிந்தச்
சங்கடந்தீர்த்தருட்பங்கயஞ் சேர்ப்பாய்
சளத்திற்படியாதே

காயத்திடையுற்றியான் படுந்துன்பநீ
கண்டறியாததன்றே—யுன்றன்
கள்ளமிலாவருளுள்ள மொத்தச்செயல்
காணினுமெத்த நன்றே

நேயமிக்ககந்தசாமிசொல்பாடல்க
ணோர்ந்தணியுந்தோளா—அருள்
நேமிராமானந்தசாமியேன்ருட்கொ
ணிமலமலர்த் தாளா. (கஅ)

## இதுவுமது.

(வன்னத்தினை மாவைத் தெள்ளியே என்ற சந்தம்)

இராமாநந்தப் பெயர்ப் பண்ணவா—வினை
யின்றியசிற்சுக விண்ணவா—தின
மெண்ணடியாருளக் கண்ணவா—வென
திதயாலயமிசையோர்கண மகலாதுறைதருமாறினை
யேத்தினனீடருட் கண்ணவா—வவ
ணீந்தத்துவிதமெய் பண்ணவா

பராவடியாருளக் கஞ்சமே—குடி
பற்றியமெய்யரு ளஞ்சமே—நிகர்
பண்ணவகின்பத நெஞ்சமே—கொடு

பணிவேனென துளமேவியபிணியாகியபலதீவினை
 பாற்றுகிலா தினம் வஞ்சமே—செயிற்
 பார்மிசையாருளர் தஞ்சமே

ஏழையென்மீதென்ன வன்மமோ—வென
 தீனப்பெருங்கொடுங் கன்மமோ—பூவி
 லின்னமுமெத்தனை சென்மமோ—கொள
லெனவேபலவிதநாடியுண்மெலிவேன்மனமயராவண
 மிவ்வணந்தானெனு மன்மமோ—தியெ
 னின்னலொழித்திலை தன்மமோ

மாழைமலையெனத் தேடியே—பெற்ற
 மைந்தருக்கீவது நாடியே—யுழன்
 மந்தர்கண்முன்னெனை வாடியே—யுடை
வளைவாரிதியுலகூடுறவிடலேனிது களையாயெனின்
 மற்றுனையெவ்வணம் பாடியே—கதி
 வாஞ்சித்திடலன்பு நீடியே

பற்றுபிரமவன் சாயையே—திரைப்
 பவ்வநுகர்ந்திடுந்தீயையே—கெடப்
 பாற்றரிதாங்கொடும் பேயையே—நிகர்
படுமாயை செய்திடுதீவினைகெடுமாறருள் விழியேகொடு
 பார்த்துப்பல்லாயிரந் தாயையே—வென்ற
 பண்ணவபற்றுநின் சேயையே

கற்றுணர்வாரின நிந்தையே—செயுங்
 காசினியோர் பெருஞ் சந்தையே—யெனக்
 காட்டியு மென்கொடுஞ் சிந்தையே—யொரு

கணமாயினும் விலகா திதை நிலையாமெனு நினைவோடுழல்
காதலளித்ததென் விந்தையே—யருட்
கண்ண ளித்தா னென்றன் றந்தையே. (கக)

## புன்மைக் கிரஙகல்.

(பாளைவாய் கமுகில் வந்து என்ற சந்தம்)

வன்பிறவி வேலையிடை துன்புகொடெநாளு மிடை
மந்தனுறு பாதமென்ற தெப்பனே—இராமா
னந்தவருண்மை யொன்று மப்பனே

இன்பிரச மூறுதஞ்ச நின்பிரச பாதகஞ்ச
மெண்ண மனமங்கி மெழுகாகுமே—துயர்
பண்ணும் வினைமங்கி யறவேகுமே

தூயநின்பதங்கள் விட்டுமாய வைம்புலன்க ளொட்டு
தொல்லுலக வாழ்க்கையிது தன்னையே—நச்சி
யொல்லுறுமென் புன்மதிதா னென்னையே

மேயபொருட் சிறப்பின் நேயமானிடப் பிறப்பின்
மேவியும் விலங்குபுள்ளி லோடியே—யூண
வாவியுழன்றேன் மெயுள்ளம் வாடியே

வஞ்சக நிறைந்தனந்த சஞ்சல மிகுந்தபந்த
மார்க்க மிசைசெல்ல மனமோடுதே—யுயர்
சீர்க்கதிகை கொள்ளவெனில் வாடுதே

மிஞ்சுபகை யாயமைந்த நெஞ்சமுடனேபொருந்த
விட்டனையானெவ்விதத்தி லுய்குவேன்—மதி
கெட்டலை நாயேனினியென் செய்குவேன்

குற்றவினங்களைப் பார்க்கும் பற்றமைந்த வருக்கார்க்குங்
கோதில்சுற்றமின்றெனு மிப்பூமியே—யுன்றன்
நீதிலருட் கென்புகல்வேன் சாமியே
முற்றுமறி வற்றவதி யுற்றவெனை முற்றுகதி
முட்டறச்சேர்ப்பதுனக்கே பாரமே—தாய்க்கு
நட்டிசைப்ப தென்னை யுபசாரமே. (உ0)

---

## நெஞ்சுடனோதல்.

(நேமமாப்பணி என்ற சந்தம்.)

மாறுகொண்டுகதி நூறுகொண்டு மிகுவஞ்சமே
தினமுஞ்செய்து நஞ்சமே—யென
மருட்டிமா நிரயத்திருட்டில் வீழ்த்துகெட்டநெஞ்சமே

தூறிநல்லோர்களைச் சீறிக்கடுக்கு நெறிதொட்டனை
அறிவழிந்து—கெட்டனை—கொடுந்
துற்குணமுற்றும்பிடித்து நற்குணங்களை நழுவவிட்டனை

எண்ணு மெய்ப்பொருளை மண்ணின்மீதுபல ரெச்சிலே
யுடலிதுவுந் துச்சிலே—கண்டு
மிச்சை கொண்டலைந்தாய் நச்சுவாய்கொலினிமுச்சிலே

கண்ணிலாக் *கரத்திலெண்ணி லாச்செயல்கள்செய்தனை
யாதுநலத்தைக் கண்டனை—மிகக்
கரியவஞ்ஞானமெனும் பெரியமயக்கமிஞ்சக் கொண்டனை

தெள்ளுபேரறிஞர் நள்ளி ராமானந்த†தேசனை
யடியருள வாசனை—தினந்
தேமலர்கள் சொரிந்து நேமமுடனேபுரிபூசனை

---

*கரம் - கழுதை †தேசனை - சூர்யனை.

கொள்ளைமுத்தமிழும் வள்ளருட்பெருமை கூடுமே
யுளத்துவகை நீடுமே—மிகு
கோட்டமேசெய்வினை யீட்டமியாவு மகன்றோடுமே

ஆனந்தமயவிரா மானந்த வள்ளலரு ணமமே
பிறப்பிறப்பி*ணமமேகெட்டே
யழியப்போக்கியென்றும் வழியத்தேக்குமின்பச் சேமமே

சேனங்கொடியுணும யானந்தனிலிடுமித்தேகமே
நழுவவருஞ்சோகமே—தீர்த்துத்
தித்தித்தென்புமுருக முத்திச் சுகத்திலாக்குமேகமே. (உக

---

## விண்ணப்பமுறை.

(கண்ணுயிரம்படைத்த என்ற சந்தம்)

சேமானந்தப்பரவி ராமானந்தப்பிரபு
செனனமிறப்பெனும் வலையிடைபட்டுழல்பூமியே—யுளார்
திரகதிபெற்றுய வருள்புரிநற்குரு சாமியே

ஏமாறுஞ்சிற்றறிவுபோமாறுன்கட்கருணை
யிது தருணத்தினிலுதவியருட்கழல் சேரையா—உன
தினியபதத்துணையலதொரு நற்றுணையாரையா

அன்போர்சிறிதுமற்றவன்பே நிறைவுபெற்ற
வவமலிதுற்குணனெனினுமினற்பத நம்பினேன்—னிந்த
வவனிமயக்கறு நினைவுபடைத்துளம் வெம்பினேன்

* நாமம் - அச்சம்.

இன்பாமதுக்குலவு நின்பாதநற்கமல
மெனதிதயத்தடமலர் தரநித்தமும் வண்டையே—நிக
ரெனநுகரப்புரியபயகரத்தினைவிண்டையே

விண்ணீரெனவெனிருகண்ணீர் பெருகியுடன்
மிசையுயர்வெற்பருவியினிலு ரத்திடைபொங்கவே—யிரு
வினையறுசிற்சுகவுததியிடத்தின முங்கவே

அண்ணலுனதுபுகழ் பண்ணார்கவிவகைகொ
டபரிமிதப்படமொழியவுளத்தில வாவினேன்—விரைந்
தருளெனநித்தமுமொடியு மனத்தொடுகூவினேன்

சேமச்சுகம் புணர நேமிக்க வின்றுனது
தெருண்மலியுத்தமர்மனவெளியிற் பொலிசேவையேயென்றன்
றிமிருறுகட்புலனைதிரில்வெளிப்படலாவையே

ஆமித்திரனேகந்தசாமிச்சிறியேனன்பி
லணிகவிமுற்றிலுமுனதுபதத் திடைசூடுவாய்—அரு
ளநுபவநிச்சய முறவென்மனத்திடை கூடுவாய். (௨௨)

## வாழிவெண்பா.

வாழிசிரவணவூர் வாழிகவுமாரமடம்
வாழிகணே சன்குமரவள்ளலே—வாழி
யிராமானந்தப் பெருமானின் னடிகளன் பிற்
பராவடியார் நன்மை பதிந்து.

ஸ்ரீ சற்குருநாதன்றுள் சரண்.

குருவேதுணை

# ஸ்ரீலஸ்ரீ-இராமானந்த சுவாமிகள்

# அவதார விழாப்பதிகம்.

**கட்டளைக்கலித்துறை.**

இராமானந்தப்புக ளியாவும்விட் டோடு மிகத்தலைக்கும்
இராமானந்தப்புற மாமெந்தநா ளு மிரிதலற்ற
இராமானந்தப்புண ரிக்கிடைமூழ்குத லெய்திடலாம்
இராமானந்தப்புனி தன்காண்விழவுகண் டேத்தினன்றே.

**எண்சீர்விருத்தங்கள்**

சத்தமிழ்பற்பல பாடை யூடுமுயர் வென்னத்
தழனவநீ தத்திலுள முருக்கி மெய்த்தற் பரமாஞ்
சித்தமிழ்தைக்காட்டியின்பத் திருநாமம் புனைந்து
தெய்வமணங் கமழ்ந்துதனிச் செயல் படைத்திட்டோ
முத்தமிழ்க்கு நாயகமாந் தன்மையதனாலே [ங்கு
முனிக்கரசென் றுலகமெலா மொழிந்திடவெம்போல்வா
கத்தமிழுத்தருள் செயிராமானந்தப் பெருமா
னவதாரவிழாவினைக்கொண் டாடி மகிழ்வோமே. (க)

கொன்மார்க்க மகநிலைபார்ச் சழட்டிபெறு மான்ம
குலங்களெலாம் பெறமறையா கமங்களெலாங் கூறுஞ்
சன்மார்க்கமுதற்ருச மார்க்கமிறு வாயாஞ்
சதுர்விதமாநெறிகளையுந் தணவாமலேற்றே

தன்மார்க்கமாகிடக் கொண் டடிவணங்கு மன்பர்
தந்தகுதிக் கேற்றநிலை தந்தருளிப் பவந்தோ
யன்மார்க்க நீக்கு மிராமானந்தப்பெருமா
னவதாரவிழாவினைக் கொண்டாடி மகிழ்வோமே. (உ)

சித்திகள்கைவரப் பெறலு முலகினரைவெருட்டித்
திருத்தியுற்றுப் புனிதமுத்திச் சீரைவிரும் பாரு
முத்திநிலை நத்தியுல குய்ந்திடலாமார்க்க
முற்று மறந்தடைவாரு முறையறியாதாரே
நித்தியமெய்ப்பாமுத்தி பெற முனருட் சித்தி
நிலமுயச்செய்துயர்கதிசேர் நின்மல மாதவரே
யத்தியனுரெனக்கொளிராமானந்தப் பெருமா
னவதாரவிழாவினைக்கொண் டாடிம கிழ்வோமே. (ந)

பாரியலும் பவக்கடலைக் கடந்தவிர்தன் றணைத்தாட்
பரவெளியிற்கலக்கவுனும் பக்குவர்கண்டியவே
சூரியனுமவிர்மதிச்சே கரனு மவனுகந்
தோய்தருசத்தியுமரியுந் தும்பிமுகத்தாசும்
வீரியவேலேந்துவரை நாடகச்சண்முகனும்
விரவுதனதங்கமதா விளங்கிடுசீர்காட்டு
மாரியனுவுற்றவிராமானந்தப் பெருமா
னவதாரவிழாவினைக்கொண்டாடி மகிழ்வோமே. (ச)

பெருநெறியான்பிடித்துளதே யென்றகந்தை மார்க்கம்
பேசுமதத்தினர்தமுளப் பிணக்க மற்றுலன்றிக்
கருநெறியெங்ஙனமவர்கள் கடந்துயர்நாதாந்தக்
கரையெனுமெய்க்கதிநிலையங் கண்டுபொருந்திடலே

குருநெறியேமேலெனக்கொண் டெம் மதத்துஞ்சார்ந்த
கோதனைத்து நீக்கியுறு குணமனைத்துங்கொள்ள
லருநெறியென்றோது மிராமானந்தப் பெருமா
னவதாரவிழாவினைக்கொண் டாடிமகிழ்வோமே. (ரு)

கொங்குசெவிப்புலங்கொண்டு காணலன்றுமேன்மைக்
கொங்கதைநும்புலநாடிகொண் டறியப்போமின்
னங்குபொருந்தும்பழைய பாடமறவாதே
நவின்றவிச்சையெம்மதென நாணுகிலீரெனலா
லெங்குமுளார்களும்புகுந்து கண்டிறும்பூதிதுபோ
லெங்கணுநாங் கண்டதில்லை யெனவெவரும்விதப்பா
னங்குலவச்செய்யுமிராமானந்தப் பெருமா
னவதாரவிழாவினைக்கொண்டாடிமகிழ்வோமே. (சு)

உருவேமெய்யென்றுமுடித் தோதும் வழக்கினரு
மோங்கருவேயென்றுரைத்துச் சாங்கதிமேவுநரும்
பெருவேதாமுன்பகர்வே தாந்த நிலைகாணுப்
பெற்றியினரென்றுணர்ந்து மற்றவரைப்பிரிந்து
குருவேதான்மெய்ப்பரமென் றுணர்ந்தகவு மாரர்
கூட்டமடைந்தின்புருவாம் வீட்டடைதியென்று
ளருவேதானனவிராமானந்தப் பெருமா
னவதாரவிழாவினைக் கொண் டாடிமகிழ்வோமே. (எ)

மசகமுதலுயிரையுங்கொல் லாவிரத முலகர்
மருவமுயறவத்தண்ட பாணிதிருப் புகழோ
னிசமுருகதாசனருட் பெருக்கதனைிகழ்த்து
நிகமாந்தகவுமார நிச்சய மிச்சகத்தே

வசமனங்கொண்டடிபணியு மாதவக் கௌமாரர்
வானவருநரரு மொப்ப மருவியுளங் களிப்பா
னசலவிளக் கெனச் செயிராமானந்தப் பெருமா
னவதார விழாவினைக்கொண் டாடி மகிழ்வோமே. (௮)

இமைத்தறியா விழியினரு மாதவர் தங்கணமு
மிதுநாண்மட்டறியாத விறும்பூதுற்றிலகு
மமைத்தகை பூரணத்தகைகொ ளவநிநிலை யினையு
மைம்பூதமுயக்குறு மாதித்தனியல் பினையுந்
தமைத்தெரியாதுழன்றிடுமெம் போலியரும் விரைந்தே
தக்கவண்ணந்தேரவருண் மெய்க்கரத்தாற்படமா
வமைத்தருளெஞ் சற்குருராமானந்தப்பெருமா
னவதாரவிழாவினைக்கொண் டாடி மகிழ்வோமே. (௯)

பிறவிநிலை யிறவிநிலை யித்தகைத் தென்றுணராப்
பேயருடன் கூடியுளம் பிணங்கியுழன்றவமே
பறவைவிருகாதியென வருந்தல்பொருந்தலிலே
பற்றமைந்திங்குழல்வேமை முற்றறிவுற்றவர்தோய்
துறவறமா நெறியினிடை புகுத்திருள்வல்வினைவேர்
சுடுநீறு மணியணியுஞ் சூடிடவும் பணித்தா
ளறவரரசானவிரா மானந்தப் பெருமா
னவதாரவிழாவினைக்கொண் டாடிமகிழ் வோமே. (௧௦)

செந்துவர்வாய்க்கலைமடந்தை வாக்கிடை நின்றிடவுந்
திருமகள்கண்ணருள்பெருகிச் செல்வமலிந்திடவுங்
கொந்துறுபூங்குழற்பரைமெஞ் ஞானம் வழங்கிடவுங்
கொலைபுலை நித்தமும் புரிவார் குழுவையடர்த்திடவும்

வந்து பிறந்திருந் திறந்து வருந்து மிருவினைதீர்
வண்கதியிற்கலந்திடவு மாதவப் பேராசா
யைந்துபுலங்கடந்த விராமானந்தப் பெருமா
னவதாரவிழாவினைக்கொண் டாடி மகிழ்வோமே. (கக)

வருகலிநாலாயிரத் தொள் ளாயிரத்திலறுபான்
வளர்காளயுத்தியினில் வாய்ந்தபுரட்டாசி
மருவுவிசாகத்திலிரா மானந்தப்பெருமான்
வந்தவவதாரவிழா வாண்டுதொறும் போற்றும்
பெருமனக்கௌமாரரெலாந் தம் மனத்திச்சித்த
பேறெவையுமவனருளப் பெற்றுமகிழ்வடைந்தே
கருநெறிதீர்வீடுபுகும் வண்ணமவனிருதாட்
கமலமுளத்திடைபதித்துக்கருதிவணங்குதுமே. (கஉ)

அருள்வளமைதிகழுமிராமானந்தப் பெருமா
னவதாரவிழாவினைக்கொண் டாடிமகிழ்வோமென்
றிருளறுமன்னவன்கருணைக் குரிய கந்தசாமி
யிசைத்துளபாப் பன்னிரண்டு மின்புடனேத்தெடுக்குந்
தெருள்பெறுமன்பினர் சமையாதீதசவுமார
சேகரராய்ச்சித்தியெலாஞ் செய்துலகைத்திருத்தும்
பொருள்பெறுநற்குமாரர்களாய்ப்பிறவியிலாவீட்டிற்
புகுந்திரண்டற்றமைவரெனல் பொய்தவிர்மெய்ம்
மொழியே. (கங)

முற்றிற்று.

ஸ்ரீ சற்குருநாதன் திருவடிகளே சரணம்.

உ

குருவே துணை.

# இராமானந்தப்பிரதாபச்சிந்து

இஃது

மஹான் வண்ணச்சரபம்

ஸ்ரீலஸ்ரீ தண்டபாணி சுவாமிகள் குமாரரும்

மாணாக்கருமான

தி-மூ-செந்திணையகம் பிள்ளை

இயற்றியது.

கோயமுத்தூருக்கடுத்த கிரநத்தம்

ந. இரங்கசாமிக்கவுண்டரவர்கள்

பொருளுதவிகொண்டு கௌமார சபையாரால்

சென்னை

"கேசரி" அச்சுக்கூடத்தில்

பதிக்கப்பெற்றது.

அக்ஷய ஹு மேடாவி

குருவே துணை

# சாத்து கவிகள்.

சிரவணபுரம் கௌமாரமடாலயம்

அடியவர்களிலொருவராகிய

## ஸ்ரீமத்-கந்தசாமி சுவாமிகளியற்றியன.

### எழுசீர் விருத்தங்கள்

நிற்குணவமல சச்சிதானந்த நிறைபரிபூரணாகாரமாய்த், துற்குணமுடைய வெனக்கும்விண்வடிவாந் தூயமெய்ச் சொருபமுற்றமைந்த, சிற்குணத்தினர்க்கு மாதவப்பெருக் காற் செம் பொருளறிதரத்துவக்குஞ், சற்குணத்தினர்க்கும் வேண்ட கத்தியனாத் தழைக்கு மெங்குருபரனானோன். (க)

வந்தகாரணமுந் தந்தைதாய்தவமு மணிவரைமருவு வேற்றடக்கைக், கந்தநாயகனன் னவர்கண்முற்றோன்றிக் கருணையோடஞ்சலிர்நமக்கெஞ், சந்தனப்பொதியை முனிவனை மகவாத் தருதுமென்றருளித்ததுமவண, மைந்தன்வந்துதித் துக் காண்பவர்தங்கண் மனங்கவராடல்செய்ததுவும். (உ)

பள்ளியிற்குருவா மாடியாற்றன்பாற் பைந்தமிழ்கண்டு ணர்ந்ததுவுங், கள்ளிணர்த்திரளாற் றெய்வபூசனைச்சீர் காட்ட லுங்கனியுமன்பினர்க, ளுள்ளியவாறே தெய்வம் வந்தாடலு னுற்றிடுமெனவநுபவச்சீர், தெள்ளிதின்மற்றோர்க் குணர்த் தியன்னவர்தஞ் சிந்தையைத்தெளித்திடுஞ்சீரும். (ங)

சைவம்வைணவமென் றிடலுருநாமச் சழக்கதே யிவைக்கெலாந் தலைமைத், தெய்வமொன்றெனத்தான் கண்டுணர்த்தி யதுந் திகழுமத்தெரிசனம்பெற்றோர்க், குய்வகைபுரியுந்தெய்வமெய்ப்பத்தி யுளத்துறக்கிளத்தலுங்கோலினர், பொய்வழியொழித்து மெய்வழிமருவப் பொருந்துபதேசஞ்செய்புணர்ப்பும். (ச)

அருந்தவத்தந்தை தாய்விரும்பியவா றவநியின்வாழ்க்கையிற்சிலநாள், பருந்தியனீழல் போலமர்பண்பும் பழனிமாமலைத்தலத்திடையே, பொருந்தியற்குருப ரதத்துவநடைதோய் புனிதசற்குருபாற்போற்றித், திருந்தியற்கொடுதன் சிரவணபுரத்திற் சேர்ந்தொரு தனியிடத்துறலும். (ரு)

பத்தர்களுளத்துஞ் சிரவணபுரத்தும் பற்பலவாந்தலத்தூடும், வித்தகப்பெரியோ ருவக்கவாழ்ந்ததும்பின் மேதகுமன்பினர்விரும்ப, வைத்தவேற்காக்கந் தநாதற்குஞ் சித்திமகோற்கட்டற்குந் தளியியற்றி, நித்தநைமித்தி கம்பொலிதரநன் னிபந்தமேற்படுத்தவந்நீரும். (சு)

கோயிலுக்கருகா மடத்திடையமைத்த குகையினுள்ளமைந்ததுமங்க, ணுயிரஞ்சுருங்கக் கண்டவற்புதமுமைந்து பூதப்படத்தமைப்பு, மேயியல்காலை யிகமயலகன்ற மெய்யடியார்கள்வந்ததுவுங், காயிகமாமற் றவர்க்கொடுமடமுங் காவுநந்தனமுமாக்கியதும். (எ)

சந்தவான்கிரிவாழ் முனியபேதமெனுந் தன்மைகாட்டிட்டதுந்தனிவேற்,கந்தநாயகனோர் குழவியாயண்ட கடாகமுங்கிண்டபேருருவஞ், சொந்தமார்விழிமுற் காட்டியேகுழவிச்

சொருபமுந் தோற்றியவியல்புஞ், சந்தமார்பழனித் தலத்தி லன்பருக்குத் தரிசனந்தந்துமீண்டதுவும். (அ)

உருவிராமானந் தணந்தவத்துலகத் துழலுவீரும்மதூ னுடலந், தருவிராமானந் தருந்தவப்பெரியோர் தாம்பிறப் பிறப்புடனகல, மருவிராமானந் தந்தருவனெனு வழுத்தி யாண்டருள்பவன்வாய்ந்த, திருவிராமானந் தப்பெயர்கொண் டு திகழ்பலபொருட்பெருஞ்சிறப்பும். (கூ)

விக்கிரகாரா தனைவழியொன்றே மேதகுநலமெலா மளி க்கு, மக்கிரகண்ணி யத்தகைத்ததனி லருட்குருபானுருவ மதே, வக்கிரமாயை யறுத்துருவெளியாம் வண்ணமாக்கிடு மெனுமுராங்கொள், சுக்கிரவாரப் பெருங்கவுமாரத் தூயமாதவ ரினந்துதைய. (க0)

சாற்றுயர்சாதுர் வேதசித்தாந்த சண்மதாதீதவத்து வித, மேற்றுயர்கௌமா ரச்சபைகாண்போ ரின்புறவாற்றிய விபல்பு, மாற்றுயர்கனக சபையமர்ந்தொருதன் மலர்க்கழற் றுணைதொழுமன்பர், பாற்றுயரடையா வணமவர்நெஞ்சப் பதுமமீதமைந்தபேரருளும். (கக)

சிந்தியற்பரப்பற் றெழுதிரத்தமது சிந்தையுட்டன்னடித் துணைகள், சிந்தியற்படுத்தோர் பால்விளையாடுந் திறங்களுந் தெண்டிரைப்பெருக்கார், சிந்தியற்பட்ட போலவை செப்புந் திறத்துடனெழுந்தவிந்நூலைச், சிந்தியற்கவிகளாலமைத்திட் டான் றிருவருட்டுணைகொடுமாதோ. (கஉ)

ஆயநன்னலஞ்சேர் தூயமாதவனிங் காரெனிலறைகுவ னறிமின், றேயமாமுகினேர் மேனிகொளிராமன் றெண்டு

கொண்டருந்தவம்புரிய, மேயவானினங்க ளுள்விரும்பியவாவி றற்றுணைமருப்புறவளித்த, தூயசீரபிரா மேசன்வாழ்கோமா துருபுரவாழ்வெனத்துதைந்தோன். (௧௩)

வெள்ளைநீறக்கங் காவிகௌபீனம் விரிசிகைகுறடுதண் டணிந்து, கள்ளவானகத்தா ரமுதினைப்பாகைக் கண்டினைக் கடுத்திடுங்கனிவார், கொள்ளைமுத்தமிழ்ப்பாக் கொழித்து மெய்யடியர் குறையொழித்தாள்பவனருணைக், கிள்ளையேயெ னப்பே ரறிஞரேத்தெடுக்குங் கீர்த்தியோன்கிருபையங் கடலோன். (௧௪)

தறைவிளங்கிடுவா னுதித்தருள்வண்ணச் சரபநாயகனவ னருளா, னிறைவிளங்கியல்சேர் சுந்தரத்தாய்பா னேயமார் மைந்ஞுபன்ஞேன், மறைவிளங்கிடக்காட்டியு மவற்றிடையே மற்றவரறிதராதமைந்த, மறைவிளங்கிடச்சொன் மழை பொழிந்துமதான் *மைப்பெயர்க்கிருபொருள் வாய்ப்போன்.

மரணமூன்றின்பா ருறப்புரிந்தன்பர் மனம்பெறுவாஞ் சைமுற் றுகவி, யரணமூன்றினையு மட்டவனிகர்சீ ரருட்டிருப்புகழினன் பணிக்கே,காரணமூன்றினையும் விடுத்தஞேனுபய கமலநாண்மலரெனக்கவின்ற, சரணமூன்றிடத்தன் சென்னியிற்றவஞ்செய் தக்கவன்பெருமையின்மிக்கோன்.

நண்ணவான்சரணந் தருமெமிராமா னந்ததேசிகனை யுமருப்பை, யண்ணவான்சரணம் புகுந்திருவாமாத் தூர்த் திருவாலபத்தமர்ந்த, வண்ணவான்சரபன் றனையுமொன் றெனத்தன் மனத்தநுபூதியிற் கண்ட, திண்ணவான் சரசுவதிகொள்வெண்கஞ்சத் திருமலர்போலுநாத் திறத்தோன்.

*மை = அஞ்சனம், மேகம்,

சீரணைந்தியன்மா தையிற்கவுமாரத் திருச்சபையிடை மதிதொறுஞ்சார், நாரணைமனக்கெள மாரர்கேட்டுவப்ப நற் பிரசங்கமாமழையைப், பூரணைநாளிற் றிருப்புகழின்பப் புணரியின்முகந்தெழுந்திட்டுக், காரணையுருமி னுைதயிற் றொனித்துக் கண்டெனப் பொழிந்திடுங் கனத்தோன். (கஅ)

யான்புகுஞ்சமய மேயுயர்வேணை யிழிந்ததென்றிகழ்ந் திடுந்தொழில்சே, ருன்புகுஞ்சமய வாதர்தம்முரையை யொருபொருளாக்கருதாதோன், வேன்புகுங்குரவற் றொழு ங்கவுமார வித்தகர்விரும்புயிரனையான், றேன்புகுந்தென வென் சிந்தையுள்ளின்பந் தேக்குசீர்ச்செந்திணயகனே. (கக)

இலகுசீரிராமா னந்ததேசிகன்ற னிசைப்பெருஞ்சிந்து நூலிதனைச், சலசநேரவன்ரு ளன்புசான்மருதா சலத்த வன்சாற்றுசொற்கொண்டு, குலவுசீர்க்கீர நத்தம்வாழ் வேளாண் குலம்வருமிரங்கசாமிப்பேர், நிலவினனச்சிட் டுல கினுக்குதவி நிறைபுகழேய்ந்தனன்றவமே.

## சந்தக்கவி.

தனனதாரு தந்தத்தனதான—தந்தத்தனரு

கருமைமானேர் சந்தத்திருமார்பன்
வரியராமீ தின்பத்துயின்மேவு
கடலின்மேலா கும்புத்தமுதோடு
கண்டுக்கினிதே
கடின*பாடா ணம்பிற்படுமாறு
ளுருகிடாநீ டுந்துற்குணமேய
கயவராவோர் கண்டெட்டரிதான
பண்புற்றதுவே

* பாடாணம்—கல்

இருமைநீர்தேர் முந்தைதத்தவசீல
மருவுமேலோர் சிந்தைக்கனிவோடு
மிருகண்டீதே கொண்டொற்றிடலான
வண்பெற்றுளதே

இணையிலாசா னன்றிக்கதியீய
வுபரும்வானா மங்கட்டையோடு
மியலுமோர்தே வென்றொப்பறியாமை
பொன்றச்சுடுமே

தருமமாறா வண்பொற்றிருமாதை
நகரினூடே சந்தக்கவிபாடு
சரபமானோ னொன்றுற்றசமாதி
நன்றைக்கொடுநீள்

தளியின்மாடே யன்பிற்சரிதாதி
புரியிலானா வின்பக்கடன்மூழ்கு
தனிமைஞானா னந்தப்பெருவாழ்வு
வந்தெட்டுமெனோர்

தெருளினோடே கண்டிட்டவனோது
கவியொடேதா னுந்துத்தியமாதி
தினம்விள்சீரார் செந்திற்பதிநாய
கன்சொற்றமைமா

செழுமையோவா நண்புத்திருவோண
புரியின்வாழ்வா கும்பொற்சபைமேய
திருவிராமா னந்தப்பிரதாப
சிந்துக்கவியே. (உக)

சிரவணபுரம் கௌமாரமடாலயம்
அடியவர்களிலொருவராகிய
## ஸ்ரீமத் - சுந்தரசுவாமிகள்
இயற்றியன.

### எண் சீர்த்தாழிசைகள்.

மைந்தற்றிடு புலவோர்சிலர் சிந்துக்கவியெனவே
வம்பைப்பெறு பலபாடல்வ ரைந்திட்டன ரிந்நாள்
செந்திற்பெயரொடுநாயக பிள்ளைப்பெயர் கொள்ளுஞ்
சீலன்பகர் சிந்துத்தொடை யவைபோலல மிகவுஞ்
சந்தச்சுவை யுடனேசையு மோனைத்தொடர் பமையத்
தக்கோர்கள்வி யக்கும்படி தான் சொற்றனனம்மா
பந்தத்தொடர் பறுமேலவர் சிந்தைக்கினிமைதரும்
பண்புற்றது நயனுற்றது பயன்மிக்கது மாதோ. (க)

சொந்தப்புலமையினோர்புகழ் கொங்கிற்பொலி பெரியோர்
தொழுதுய்ந்திட வுருவாவரு குருமாமணி யிசையி
லெந்தப்பிழை யாரோதினு மந்தக்கடையவரென்
றியாரும்புகல்வாரன்னதை யானும்பகர் வானேன்
சிந்திப்பொடு சிந்தைப்பக ரறிஞர்க்கது தானே
செல்வப்பொலி வொடுகல்வி சிறப்பைத்தரு ஞான
முந்தித்தவ முயலாதவ ரெனினும்புரப்பானம்
முருகன்செயல் சிறிதோவிவண்மொழிவீர்புல வீரே.

தந்தக்கரி யினையோரடி யதனலடி சிங்கந்
தனையட்டிடு சரபந்தரு தக்கோன்பெறுபுலமை
கந்தக்கடவுளையன்பொடு நெஞ்சிற்கொளு மவரே
காணுந்தரத்தினதென்றிடல் கையாமல கமதே

மந்தப்பக டுடையோனக ரடையானிவன் மலரோன்
மற்றோருடல் படையாநெறி மாண்போடடைவானென்
றிந்தப்படி வரைகின்றது மென்றன் செயலன்றென்
றெளியேனுமு ரைத்திட்டமை யீசன்செயலாமே. (ந)

---

சிரவணபுரம் கௌமாரமடாலயம்
அடியவர்களிலொருவராகிய

## ஸ்ரீ இரங்கமுத்துஐயா அவர்கள்

இயற்றியன

### எழுசீர் விருத்தங்கள்.

கொங்குநாட் டிடையே திருவவதாரங் கொண்டுயிர்க் கொலை புலையொழித்திட், டெங்கண்மும்மலப்பே ரிருளறவுள் ளத்தெல்லையில் கருணையொடமர்ந்தே, பங்கமின்முத்தி யளித் தருள் செய்யும் பரமசற்குருபரனிசையைப், பொங்குசீர்ச் சிந்துக் கவிகளாப்புகன்றான் பொருவிலெஞ்செந்திநாயகனே. ()

சிந்தையிற்றெளிவை யடையவேண்டினருஞ் செவ்வமிக் கெய்த வேண்டினருஞ், சிந்தையேபாரா யணமுறக்கொண்டு செப்பிடிலிச்சைகளெய்திப், பந்தவெம்பிணிகண் முற்றொழித் தொழியாப் பரசுகக்கடலிடைமூழ்கி, விந்தைதோயிராமா னந்தசற்குரவன் மெய்ப்பதம் பெறுவதுமெய்யே. (உ)

---

## சென்னை
## ஸ்ரீமான்-த. மு. கந்தசாமி செட்டியாரவர்கள்
## இயற்றியது.

அறுசீர்விருத்தம்.

சீர்மலிந் திலகுசோலைச் சிரவண புரத்தில் வாழு
மேர்மலி யிராமானந்த வெழின்முனிவரன்றன் கீர்த்தி
கார்மலிந் திலகுமாதைக் கவின்மடா லயத்திற் றெண்டி
ஞர்மலிந் திலகுசெந்தி ஞயக னிசைத்தான் சிந்தே.

---

இந்நூலாசிரியர் குமாரர்

## முருகதாச பிள்ளை இயற்றியது.

மஞ்சுநிகர் குந்தள மின்னே—என்ற சந்தம்.)

செந்தமிழ் மணங்கமழ்ந்திடும்—கனகநகர்—மருவுபல
தேவவர மாதர்தங்கிடும்—வளஞ் [புவி
சேர்ந்திடும்பொதி யாசலந்தனில் வாழ்ந்திடுங்குறு மாதவன்
செய்தவப்பே றுகவாதவன்—புரையும்ராமா னந்தனெனச்
செப்புபெயருற்ற மாதவன்

செஞ்சொலஞ்சு கங்கண்மிஞ்சியே—கமுகுமுத—லியதருவிற்
சேர்ந்திருந்தன் பாகக்கொஞ்கியே—திகழ் [ணப்பதி
செறிபொழிற்கிடை மயினடித்திடு—மினிமைபெற்றுயர் சிரவ
சேர்ந்துதங்க மன்றில்வாழ்ந்துளா—னவனொருதண்
டவிர்தருங்கைத்—தேசிகன்ற னன்பிலாழ்ந்துளான்

சீவர்கள்மே லன்புகொண்டுளார்—தனைமருவி—யடிபரவச்
செங்கையில்வ யங்கொர்தண்டுளான்—புகழ்
சிந்தினீரெனமிஞ்சியோர்முடி—வுங்கொளாதுவிரிந்தவாறுதெ
ரிந்ததற்கி சைந்ததாகவே—யுரியபெய—ரமைதரவே
செய்தனனவன் ப்ரதாபமே

இலங்குசிங்கெதனு மொழிந்துளா—னறிவுமுதிர்—பெரியர்
தின்பமுறவே பொழிந்துளா—னிவ [மகிழ்ந்
னெந்தையாவரு செந்திலுயகன்—விண்டசீர் திகழ் சிந்தின்
யானுரைக்கை ஞாயமாகுமோ—அரவரசு [மேன்மையை
மொருசிறிதி—யம்பினுன் முடிந்து போகுமோ

மொழிபுகழ் சிறந்தருணையில்—வயங்குகிளி—யோர் தண்ட
முனிவனென வந்த கருணை—மலி [பாணி
முருகதாசன் வண்ணக்கவித்திரள் பெருகவோதுதிருப்
முத்தமிழ்ச் சரபமென்னவே—யுலகிலன்பர் [புகழ்த்தவன்
நலமுறமொ—ழிந்தனர்பன்னும மன்னவே

மாரியிற்கவிகள் கூறியே—வருமொர்தினத்—தினின்மிகவும்
வந்திடும்வை ராகமீறியே—திரு
மலையிலேறியு ருண்டுமோர்சிறி தளவுமூனமடைந்திடாதெழு
மாதவனுளத்திலுன்னிடும் தொண்டரினங்கண்மண்டிடும்புகழ்
மாதைநகர்க் கோயின் மன்னிடும்

சற்குரவன் மைந்தனென்னவே—யுலகில்வரு—மிவனவனைத்
தந்தையென்ன நெஞ்சிலுன்னலே—யின்றித்
தந்தைதாய்குரு தெய்வமாமென வின்பநீடிட வுள்ளமூடிச
தாவவன்புகழை யெண்ணியே—யினியகவி—கொடுதுதியி
சைத்துளானுளன்பு நண்ணியே

ஏத்தியுமவன்றனுருவே—கருதிநிதம்—வழிபடுந
லேற்றமதமைந்து குருவே—பர
மென்றுசொல்கவுமார நிச்சய மொன்றியுள்ளவனுலிவற்கிணை
யென்னனுர் சொலிற்றவறுமோ—வெனினுமொரு—சிறிது
வெண்ணினு முடிவுபெறுமோ. [சொல

குருபாதமேகதி.

உ

குருவேதுணை.

# இராமானந்தப்பிரதாபச்சிந்து.

## பாயிரம்.

### சிந்துக்கவிகள்.

செங்கதிர் சங்கர னம்பிகை மாலைந்து
செங்கைக் கரிருக னென்ன—மறை
செப்புமறுவகைத் தெய்வமு மாநிகழ்
தேசிகன் றாள்பணி வாமே
திருவார்தரு கவுமாரர்கள் பதவாரிச முதிர்தாதுகளை
சென்னியிற் கொண்டணி வாமே. (க)

தொண்டர் பெருமை சொலமுடியா தெனுந்
தூயமொழியது கண்டும்—தவத்
துங்கமலிராமா னந்தனருட்கதை
சொல்லத்துணிதல் நான் றானே
சொல்லற்கரு நல்லற்புத மல்கித்திகழ் செல்வக்குரு
சொந்தத்திருச் செய றானே. (உ)

முற்று முரைத்துமு டிக்குந்திறமையென்
மூடமதிக்கில்லை மெய்யே—அதில்
முக்கியமானப குப்பினைச் செந்தமிழ்
முறையிற் சொல்லுத லாமே
முன்னாண்முதலிந்நாள்வரையன்னானிசைசொன்னார்சில
முத்தர்களீதுபின் னாமே. (ந)

பாயிர முற்றிற்று.

உ

குருவே துணை.

# இராமானந்தப்பிரதாபச்சிந்து.

---

## நூல்.

### பூருவ நிலை.

பூமலி சோலைவ ளந்திகழ்கின்ற
பொதியை வரைத்தலை மீதே—மிகு
புண்ணிய மாதவர் சூழ விளங்கு
புகழ்க்குறு மாமுனி தானே
புரைதீர்தரு கதிர்வேலணி முருகோனெதிர் தொழுதேபல
போதனை கேட்டிருந் தானே. (க)

சரியை கிரியை நல் யோக மெஞ்ஞானமுஞ்
சாலோக சாமீப மேலும்—திகழ்
சாரூபசாயுச் சியம் முதலானவுஞ்
சாற்றியிருந்தனன் வேலோன்
தரைமீதினின் மடவார்மண மதுசேர்பவ ரருள்வாழ்விடை
சார்வதரி தென மேலோன். (உ)

சண்முகனை யிந்த வாறு நவின்றதென்
சாற்றியருளென வேண்டி—யிந்தத்
தாரணியிற்றுறந் தார்முதன் மூவர்க்குந்
தாரக மில்வாழ்வா னன்றோ
தணவாதெழின் மகமாதிய செயலாலம ரர்களாதியர்
தன்மை நிலைத்திடு மென்றான். (ங)

அந்த மொழியினை விக்குகன் கேள்வ
னறைந்த வுரைபிச காளாய்—மனம்
அன்புறு பெண்ணெனி லாயிரம் பெண்க
ளமையினுந் தீமையின் றுமே
அணுகாமறு மொழி பேசிடும் வினையாளொரு மனையாயினும்
அல்லல் நரகமென்றனே. (ச)

அப்படியாயி னமரர்முனிவ
ரானரி வேதன்முன் னோர்—களும்
அன்பி னொழுக்க மனைவி பெற்றேசுக
மார்ந்தா ரென்றான் முனி நாதன்
அது கண்டெழின் முருகன்றிரு வருள்கொண்டவ னறியும்படி
யாஞ்ஞை சொன்னன் முழு நீதன். (ரு)

உன்றனக்குப்புவி மாயையின்றீமை
யொருசிறிதுந்தெரி யாதால்—இவ்வா
றேதத்துணிந்தனை நீமைப் பெருங்கட
லூடுற்றிடும்புவி மீதே
யொண்கொண்டகுடும்பந்தனின்மைந்தன்படிவங்கொண்டுழல்
வுற்றுமனை மக்கள்தீதே. (சு)

கண்டுவருந்திவெ றுத்துன்றன் மெய்நிலை
கைக்கொள்க வென்றசொற் கேட்டே—யுடன்
காயம் நடுங்கி மனம் பதைத் தென்றன்
கதித்துணையாமுரு கேசா
கருணாநிதி புவிமீதினி லொருசேயென வருவேனெனில்
கப்பிடுமாயைகு கேசா. (எ)

யானறியாமையி னாலுன்றன் வாய்மொழி
யிற்றடுத்தோதினன் வீணே—அதை
யின்னமுதூட்டுநல் லன்னையை நேருன்
னெழிற்றிருவுள்ளம்பொ றுதே
யிவ்வாறொரு சொல்லோதினை யையோபுவி யில்வாதனை
யிற்கடையேன் சுழல்போதே. (அ)

எப்படியான் கடைத் தேறக்கொள்வாயென்
றியம்பியகத்தியன் போற்ற—மயில்
ஏறுமறுமுக நாதன்கருணை
யிசைந்து தயையுடன் சொல்வான்
எனதுத்தம மதலைக்கிணை யுனைவிட்டொரு கணமுற்றிட
வெண்ணுவனோ வெனப்புல்வான். (கூ)

என்றனருண கிரியாங்கிளிபுவி
யிற்கவுமாரத்தை நாட்டிக்—கொலை
யில்லாவிரதம் பலர்க்குபதேசித்
திடமுருகத்தாச னென்றே
யெழிலார்தரு முழுநீறொடு தடிகிள்சிகை கவுபீனமி
லங்கத்தலம்பல சென்றே. (கO)

தென்பழனிக்கிரி யிற்றண்டபாணி
திருச்சந்நிதானத்தில் வந்தே—யுன்றன்
செய்கையறிந்துப தேசமுரைத்தருள்
செய்வானென்றன்கலை யுன்பாற்
சேரும்பல பேர்வந்தனை யேகொண்டருள் வாழ்வொன்றியுன்
சீர்பெறுவாயென்றானன்பால். (கக)

இந்தவகைகந்த வேளுமையாளுக்
கியம்பியசோதிட நூலின்—இடை
யெண்ணில் பல்லாண்டின்முன் கண்ணியச் செந்தமி
ழிற்கவியாயுள தானே
யிதையேயெம தெதிர்காணநல் கிடுவானருண் மிகுசோதிட
னெந்தங்கவேற்புலவோனே. (க௨)

தலவிசேடம்.

கந்தனுரைபெற் றகத்தியன்றன்னோர்
கலைபுவியூடுதித் தற்கா—கிய
காலங்கருதி யிருந்தனன் ஞாலங்
கருதுநலம்பெறு மாறே
கவினார்தரு தமிழ்நாடதி லுயர்பூழியனெடுசோழனு
கந்தநன்னாட்டின்மேற்கூறே. (க௩)

என்று விளங்கிடு சேரனன்னாட்டி
னிரும்புகழ்யார்சொல்ல வல்லார்—அன்பி
னேற்றமுறுஞ்சேர மான்றன்சமுகத்
தினிற் பரமன்றன்கை யாலே
யெழுதுந்திருமுகமொன்றுகொடுயர்பொன்பணிகலைதந்திசை
யேய்ந்தவநாட்டின்கீழ்பாலே. (கச)

கொங்குநன்னாட்டிற் றிருப்பேரையூரின்
குணக்கிற்சிரவண மென்னும்—தொழில்
கொண்டுபலகவு மாரர் மெஞ்ஞானங்
கொளுமெதிர்காலப்பண் பாலே [பெயர்
குளிர்பொழில்செறி கவின்மலிதரு சிரவணபுர மெனவொரு
கொண்டுளநற்பதிமேலே. (க௫)

எம்மதத்தோர்க்கும் குருவடிவாகி
யிலங்குருகுகப்பெரு மானே—அரு
ளேய்ந்திடுசண்முக காந்திகுலாவ
விரத்தினசைலத்திற் றங்கும்
இணை தீரருள் வளமோடலை யெறிவாவிகள் பலசூழவி
லங்கிப்புகழ்வகை பொங்கும். (கசு)

## தந்தைதாயர்தவம்.

வந்திரக்கின்றவர் பற்பலபேறு
மகிழ்விற்பெறக்கொடுத் தாளும்—பசு
மஞ்ஞையுடைக்கும ரேசனடித்துணை
வந்தனைசெய்திடு சீலன்
மாவுத்தம குணமேவிவி சாலப்புவி யுழவேபுரி
வண்மைத்தொழிற்கநு கூலன். (கஎ)

ஈகைமலியும்வே ளாளர்குலத்தி
லிசைந்தவன் வேலப்ப னென்னும்—பெய
ரெங்கும் விளங்கவாண் டாளேனும் பத்தினி
யில்லறத்தின்றுணை யாக
இனிதாயற வகைபேணிடு தினமோர்சிசு விலையேயென
வேங்கித்தவித்துளம்வேக. (கஅ)

இல்லறத்தின்பய னுத்தமமக்க
ளிசையப்பெறுதலென் றோதும்—மொழி
யின்றுவரைநமக் குப்பலியாம
லிருப்பதென்னென்றுநி னைந்தார்
எதுநத்தினு முதவற்கறு முகனுற்றன னெனுநிச்சய
மெய்தித்தவத்திலி சைந்தார். (கக)

கார்த்திகைசட்டி விசாகநற்பூசங்
கவின்மலிசுக்கிர வாரம்—அதி
காலையின்மூழ்கி யிரத்தினமாகிரிக்
கந்தனடியிணை போற்றி
கள்ளார்மலர் வில்வாதிகள்கொய்தேதொடை செய்தேயவன்
கண்முன்குறையினைச்சாற்றி. (உ0)

கோயில்வலம்புரிந் தன்புடன்வீட்டிற்
குறுகியடியவர்க் கன்னம்—மனக்
குற்றமின்றிப்படைத் துண்டுமுருகன்
குளிர்கதைகேட்டுறு வாரே
குகவேளரு ளிவர்மீதினின் மிகவீசிடு தினமானது
கூடிவரம்பெறு வாரே. (உக)

தையெனுமாதத்திற் பூரணமாமதி
சார்ந்தநற்பூசத்தி னத்தில்—மிகு
சத்தியபுத்தியி னுன்மணிமால்வரை
சார்ந்துவணங்கிடும் போது
தவவேடமெய் தொருதேசிக வடிவாயறு முகவேளிவர்
தம்மிடஞ்சாற்றுவா னீது. (உஉ)

உங்கள்விருப்பப் படிகுகனுண்சிசு
வுற்பவிக்கத்தயை செய்வான்—நிச
மோங்குபொதியையில் வாய்ந்தவகத்திய
னுக்கிணையாமெனப் பூதி
யுவகைப்பொலி வொடுகைத்தல மதனிற்றரு நிமிடத்தினி
லோடிமறைந்தன னுதி. (உங)

போனபின்றேடி வருந்தியுங்கண்டிலர்
புண்ணியவேலவன் ருனே—நந்தம்
புந்திவிருப்ப மளித்தருளற்கிப்
புனிதவுருக்கொண்டா னென்ருர்
புதைபூமியி லுளமாநிதி பெறுவோரென மகிழ்சீரொடு
பொன்மலிதன்மனை சென்ருர். (உச)

அன்றுமுதற்றிகழ் வேலப்பன்றன்மனை
யாகியறத்திறம் பூணும்—ஆண்டா
ளம்மைவயிற்றிடை விம்முகருப்ப
மமைந்துவளர்ந்ததி லேகும்
ஐந்தீர்மதி யுங்கேளிர்வ ளைந்தேமகிழ் சிங்காரவி
ழாவின்சீரார்சொல்ல லாகும். (உரு)

அப்படியாகிய காலத்திலேநல்
லகத்தியன்றன்கலை யொன்றைத்—திகழ்
ஆண்டாள்வயிற்றிற் கருவிடைசேர
வனுப்பினனக்கணம் பொன்னுர்
அமராதியர் மலர்தூவின ரினிமாதவ முயர்வாமென
ஆண்மைகுலைந்தது தென்னுர். (உசு)

## அவதாரம்.

இக்கலிநாலா யிரத்துத்தொள்ளாயிர
மேய்ந்தவறுபதென் றெண்ணும்—புகழ்
எய்தியகாளயுத் திப்புரட்டாசி
யிருபத்தாறில்வார மாதி
யிசைபூர்வச துர்த்தித்திதி யில்விசாகமு மொத்துற்றிடு
மித்தினத்தேயுத யாதி. (உஎ)

பன்னிருநாழிகை யோடுவிநாடிநாற்
பத்தொன்றின்மேலவ தாரம்—புரி
பண்பினைநோக்கிற் சதுர்த்திவிநாயகன்
பைஞ்சிகிவேலன்வி சாரகம்
பரிவாமிரு வருமோர்பொரு ளெனவேயடி யவர்தேர்வுறு
பாங்கிலுதித்தன னுகம். (உஅ)

## பாலச்சடங்கு.

தண்டபாணிக்குரு மேகம்பொழியுந்
தணிக்கவுமாரத்தின் சாரப்—பெருஞ்
சாத்திரமாமழை வெள்ளமுழுதுந்
தனுட்கொளுமோர்கட லென்ன
சந்தக்கும ரன்பத்தர்வி ரும்புற்றப யன்பெற்றிடு
தன்மையுலகினின் மன்ன. (உகூ)

பாலனுருக்கொடு வந்தவிதந்தனைப்
பார்த்துவேலப்பனுந் தந்தை—மனப்
பத்தியுடன்றட முற்றுமுழுகிப்
பதியும்வெண்ணீறணிந் தப்பால் [மும்
பலவாடைபொ னடைகாய்குளம் விதைசோறுமு னுள தான
பண்ணினன்சிந்தையுவப்பால். (௩0)

நன்மைகொள்சோதிட வன்மையரானமெய்
நாவினர்தம்மை யழைத்தே—யிந்த
ஞானவடிவக் குழந்தையின்சாதகம்
நாடிக்கணித்திடச் செய்தான்
நலியாதறு முகவேளருள் பெறுதேசிக மணியீதென
நாட்டினர்பொன்மழைபெய்தான். (௩க)

அன்பினர் தந்துதி கேட்டுமகிழும்
அணிச்செவிப்பூணிடல் பின்னும்—திகழ்
அன்னப்பிராசன மக்கரமோதுத
லாதியபாலச்ச டங்கும்
அதிசீருட னுளகேளிர்கள் மகிழ்வாகிடும் வணமேசெய
லாயினன்பூவுல கெங்கும். (௩௨)

கீர்த்திபரவ விளங்குமிச்சேய்க்குக்
கிளர்ந்ததிருப்பெயர் சூட்டும்—தினம்
கேடறவேராம குட்டியென் றெண்ணிக்
கிளத்தினர் தந்தைமுன் னோர்
கேதங்கெட ராமன்றனை நேரும்புகழ் மேவும்படி
கிட்டியதென்றனர் வானோர். (௩௩)

விளையாடல்

கண்ணன்றவழ்ந்து நடந்துதிரிந்த
கணக்கெனவேயிந்தப் பாலன்—பல
கான்முளைக்கூட்டத்திற் முன்முதிராடல்கள்
காட்டிக்களித்திருந் தாலும்
கதிசேர்வழி யிடையோர்நினை வசையாதுறும் வகையாலுயர்
கந்தனைநாடுமக் காலும். (௩௪)

பார்த்தும்பணிந்தும் புகழ்ந்துமகிழ்ந்தும்
பயனடைந்தார்பலர் தாமே—சிறு
பாலனென்றெண்ணி யிருந்தனர்பற்பலர்
பள்ளியிலுள்ள நற்சேயர்
பலர்தம்பினு ளிவன்முன்னென மிகுமுன்னத கலைபன்னுதல்
பார்த்துவியந்தனர் தூயர். (௩௫)

நீளியசென்மத் தொடர்பினுக்கான
நெறியமையும்மென வேதம்—சொலு
நிச்சயத்தின்படி பச்சைமயிற்குக
னேயம்விளைந்தது நெஞ்சில்
நிகழொன்பது வயதுஞ்செல வதின் மிஞ்சிய வயதென்றிட
நேருமீரஞ்சுமுே வஞ்சில். (௩௬)

தந்தைமுதற்பலர் தாமுமதிக்குந்
தகுதியமைந்துவி ளங்கி—வளஞ்
சாலும்பயிர்த்தொழி லாதியயாவுந்
தனக்கிணையின்றிந டாத்தி
சலியாதுயர் கணநாதனை யயில்வேளொடு வழிபாடுகள்
சந்ததமும்புரிந் தேத்தி. (௩௭)

## சோப்பனக்காக்ஷி

கொன்றையறுகுமந் தாரையலரிமுற்
கோதில்பலவகை கொண்டு—மறை
கூறியருச்சனை யாதிபுரிந்து
குலாவிடுமெப்பரு வத்தே
குறியாமென வெகுதேவரு மவர்வாழ்புவ னமுநாவலர்
கூறுபுராணமுகத்தே. (௩௮)

சொல்லியவரவர்க் கேற்றபெருமை
துலங்கப்பகர்வதைக் கேட்டே—யந்தத்
தூயபுவனங்கள் கண்டுகளித்திடத்
தோன்றுமொ ராசைகொண்டானே
துங்கக்கண பதியோர்கன வின்கட்களி றெனவேவரு
தோற்றமமையக்கண் டானே. (௩௯)

நிற்குமிவனைத்து திக்கையினுலற
நீதியிற்றாக்கியவ் வானை—மலை
நேர்தன்பிடர்மிசை யேகொண்டமரர்க
ணீடுஞ்சுவர்க்கமுன் னுக
நிகழும்புய னரிசங்கா னுலகெண்டிசை யினர்தங்கு
நிலைப்புவனங்கட்கு மேக. (௪௰)

அங்கங்குளவியன் யாவுமறிந்தன
னம்புவிமீதுவி டுத்தே—திக
ழைங்கரனென்னும்வி ளக்குமுங்காட்டி
யகன்றதுநெஞ்சம யர்ந்தான்
அரிதாகிய பலலோகமு மினிதாயனு கினம்யாமெனு
மற்புதமெய்தியுயர்ந்தான். (௪க)

ஆறுமுகக்குக வேளுலகத்தை
யடைந்திலமென்னநி னைந்தே—மனத்
தாகுலமுற்றுவி ளங்குதருணத்
தவிர்மணிதப்படி வாகி
யதியன்புட னுயரந்தா தவிசொன்றினின் முருகன்றிக
ழற்புதங்கண்டணித் தேகி. (௪உ)

என்னையிவ்வாறகி லத்தின்மயங்கவிட்
டிட்டனையீதழ கேயோ—வென
வேங்கித்துதித்தனன் கந்தன்கைநீட்டி
யிவன்சிகைபற்றித்தன் பாங்கே
யிலகக்கொடு பலவுத்தம மறைமெய்ப்பொருள் சொலுமத்தி
யிற்சிலமாணிட ராங்கே (௪௩)

வந்துலவக்கண் டிவரெதிர்நாயிம்
மணிதவுருக்கொளில் வீணே—பல
வார்த்தைவிளைப்பரென் ருேர்புலியாகி
வயங்கினன்கந்தனப் போதே
மகனுமிவன் முகநாடலு மிவனோர்புலி வடிவாகி
மகிழ்ந்திடச்செய்தத லாதே. (சச)

மேனிலையாமுப தேசமனேகம்
விளம்பிமனந்தனைத் தேற்றி—யிது
வேலவன்றன்னரு ளென்னுஞ்சரதம்
விளக்கியருளிம றைந்தான்
வினைதீர்தரு பரஞானமெய் நிலையேகுக னுலகாமெனும்
வேட்கைமனத்தொடு றைந்தான். (சரு)

அந்தக்கனவு மறைந்துநனவுதித்
தானந்தமுள்ளினி றைந்தும்—வெளி
யப்பனுரைப்படி யிப்புவியிற்பயி
ராதிநடத்தியி ருந்தான்
அறியாமைகொ ளுலகோர்மொழி நடையாதிய சிறிதேனு
மகத்திலமையப்பொ ருந்தான். (சசா)

## கனவிற்கருடசம்பாஷணை

அத்தகைநாளினில் விண்டுவுஞ்சம்புவு
மந்நியமென்றிடும் வாதம்—பல
ராடித்தலைதடு மாறித்திரியும்
அசட்டுத்தனத்தினைக் கண்டான்
அதுகீழென விதுமேலென விருவாதரு முரையாடினர்
ஆர்சொன்மெய்யென்றையங் கொண்டான். (சஎ)

சிந்தையிலேயுற லாயினவேளையிற்
சேர்கனவொன்றுகண் டானே—யந்தச்
சீர்த்தியினைச்சொலற் காயிரநாவுடைச்
சேடனுநாணுறு வானே
திகழ்வானிடை யிருபேரொளி செவியூடடி படலாலிதைத்
தேர்வனென்றேயெழுந் தானே. (சஅ)

கண்ணினொளிகொடு நோக்கிடில்வானிடை
காவததூரத்துக் கப்பால்—மிரு
கார்நிறமுள்ளதொர் புள்ளியென்றெண்ணக்
கவின்றததிலிந் த வோசை
காணுற்றதெ னுநிச்சய மாகத்தெரி போதப்பொறி
காற்றினெருங்கலி னுசை. (சகூ)

மட்டறக்கொண்டொரு நோக்காயிருந்தனன்
வந்தவப்புள்ளிவி ரிந்தே—யொரு
மானிடனென்ன நெருங்கிக்கருட
வயினதேயன்வடி வாகி
மகிழ்வோடிவ னெதிரேயருண் மிருசேவைநல் கிடலாலிவன்
வாழ்த்திவணங்கியன் பாகி. (ருO)

என்றன்சிறுமை யறிந்துமிரங்கி
யெழுந்தருளிச்சேவை நல்கும்—உனக்
கென்னகைம்மாறடி யேன்செய்யவல்லனென்
றேத்திடலாயினன் வேறே
யிணையற்றிடு கருடப்படி வுடனுற்றவ னருண்மிக்குட
னீந்தனன்வெண்டிரு நீறே. (ருக)

நாரணன்றன்னடித் தொண்டுடையோனென
ஞாலமுற்றோருனைச் சொல்வார்—அதை
நம்பியிந்நாள்வரை நானுமிருந்தன
னற்சிவன்றன்றிரு நீற்றை
நல்வந்தனை செய்யும்பொழு தைதெதன்கையி னல்குந்தகை
நன்கறியச்சொலவ் வாற்றை. (ருஉ)

என்னவிவன்றொழு தேவினவும்பொழு
திற்கருடன்பதிற் சொல்வான்—பர
மேசனென்றுந்திரு நாரணனென்று
மிரண்டுபொருளொன்று மின்றே
யெண்ணும்படி முன்வந்தருள் பண்ணுந்தயை துன்னும்பரம்
என்றென்றுமுள்ளதஃ தொன்றே. (ருங)

சிந்தைத்தெளிவில் சிறியவர்தம்மைத்
தெருட்டுதற்காகமுன் வேதந்—தனைச்
செய்தவரோதிய தவ்வவர்பக்குவச்
சீரெனக்கைக்கொளு மாறே
சிலகாலலே பவுராணிக முறையால்வழி படிலோர்பொருள்
தெய்வமென்றோர்குவ ரீறே. (ருச)

தன்னதுரிமைக் கடவுளைநாடிச்
சரியைகிரியைகள் செய்து—பொறை
சத்தியமாதி நியமங்கள்கொண்டு
தவம்புரியாமலி ருந்தே
சண்டைத்தொழில் கொண்டிப்புவியின்கட்சுழல்சண்டித்தகை
சார்ந்தவர்தம்மைப்பொ ருந்தேல். (ருரு)

பூவின்மணமு நெருப்பினிற்சூடுந்தும்
போலச்சிவனரி யென்ன—மறை
போற்றுஞ்சிவம்சத்தி யென்றுகுணியும்
பொருந்துகுணமுமென் றோரார்
புண்பட்டுளம் வெம்பித்திரி யும்பித்தர்கு ரங்குத்தகை
புத்தியுள்ளோர்தம்முட் சேரார். (ருசு)

நீருநெருப்பு மெனத்திருமாலு
நிகழ்சிவன்றானுமி ருந்தே—புகழ்
நீடுமுலகத் தொழிலைநடத்து
நிசம்பலநூல்சொலன் மெய்யே [கொடு
நிதம்வேறென விகல்வோரிரு பொருளுமொரு பொருளே
நிற்பர்களோவிது பொய்யே. (ருஎ)

என்றுபன்னூய மியம்பினன்கையி
னிடம்பதுமம்புரை யுஞ்சீர்—கொளும்
ஏரொளியொன்றுவைத் துற்றனன்கண்டிவ
னென்னெனக்கேட்டன னன்னோன்
இதுதானுடு வடிவாமுன தகமூடுள குறைதீர
வெடுத்துவந்தேனெனச் சொன்னான். (ருஅ)

சந்திரசூரிய ரன்றியுடுக்களின்
றன்மையமைந்தெதவ் வாறே—வெனச்
சார்ந்தவொரைய மிவன்மனத்தூடு
தழைத்திருந்திட்டத னாலே
சந்தேகம றக்கையிடை கொண்டோதிவி ளக்கிவ்வித
சத்தியமேலெனு நூலே. (ருகூ)

மெய்த்தெய்வமேகுரு வாகியறிவில்
விளக்குமெனத்தனி வேதம்—தவ
மேலவரைக்குறித் தோதியதிங்கு
வெளிப்படக்கண்டன மின்றே
விதியேவலி தெனநாடுபு மதிகோணியி வுலகூடுழல்
வீணருக்கெய்துவ தன்றே. (சூ0)

## திருமணம்

அத்தருணத்திரு பத்துவயதுற
வப்பனுவந்தவே லப்பன்—றன
தாசைமகன்றனக் குக்கலியாண
மதுசெயுமாறுமு யன்றான்
அடிநாள்பொதி யையில்வேலவன் மொழிவாசக மதுபூவி
லமைந்ததனுலொப்பி நின்றான். (சூக)

அப்படியான திருக்கலியாணத்
ததிசயமாவன வெல்லாம்—எடுத்
தற்புதமாகவு ரைத்திடற்கிந்நா
லமைந்ததன்றாதலில் விட்டேன்
அவிர்தாமரை யிலைநீரென மனைவாழ்வினி லமிழாம
லமைந்தனன்மேற்சொல நட்டேன். (சூஉ)

இல்லறந்தன்னி லிருந்துந்துறவி
லிணங்கிநிராசையின் றன்மை—மிக
வேறிவரவவன் றந்தைமகன்றன்
னியற்கையறிந்துக டுத்தான்
இணைதீர்பயி ருழவாதிய விவகாரமும் விரிவாகி
யிருந்தும்புரிந்துதொ டுத்தான். (சூங)

## யாத்திரை

உத்தமநூல்கள் சரியைமுன்னுக
வுரைத்திடுசாதன நான்கால்—மிக
வோதுபயன்களெல் லாம்வருமென்ற
வுறுதியைக்கேட்டுமவ் வாறே
யொருசிந்தையின் முயலுந்தகை யமைகின்றில தகிலந்தனி
லுற்றனமென்றுபல் வாறே. (கூச)

சிந்தைவருந்தி யுணர்ச்சிமறந்து
தெளிந்துதுயின்றதோர் நாளில்—அருள்
சேர்தன்சிரவண மாநகரூடு
திகழ்சிவரூபக்க ணேசன்
திருவார்தளி யெதிர்நீள்கன விடையேபணி வுறும்வேளை
தெரிந்ததோர்காட்சியவ் வீசன். (கூரு)

நாலுபுயங்களு மற்புதக்கோலமு
நன்குதுலங்கவக் கோயிற்—கண
நாதப்பெயர்கொ ளிலிங்கமதூடு
நயந்துவெளியினில் வந்தே
நலமாரிவ னிருதோளிருகரமேகொடு தழுவாதரம்
நாதன்றுலக்கியு வந்தே. (கூசு)

ஏனிந்தவாறு மனங்கலங்குற்றனை
யென்னகுறையுனக் கென்றே—யெதை
யெண்ணினுமண்ணிடை புண்ணியச்செந்திலி
லீவன்வருகவென் றுனே
யிவணுந்திகழ் கனவின்பய னதுகொண்டுதன் மனசஞ்சல
மேகிக்களித்தனன் றுனே. (கூஎ)

எந்தவிதத்துந் திருச்செந்தின்மாநக
    ரேகிக்குகன்றனைப் போற்றி—யரு
ளெய்துதல்வேண்டுமென்றுன் னுமுழுத்துணி
    வேறித்தனிவழி சென்றே
யேற்றம்பெறு பாண்டித்திரு நாட்டின்றலை யாம்பொற்பதி
    யென்னுமதுரையி னின்றே. (சுஅ)

அங்கயற்கண்ணி யடியிணைபோற்றி
    யணிப்பரங்குன்றினை யெய்தித்—திகழ்
ஆறுமுகப்பெரு மானைப்பரவி
    யருட்டிருநெல்லையடைந்தே
யவிர்காந்திம தியைமுங்கிலினிழல்சேர்ந்துள பெருமான்றனை
    யன்பொடுபோற்றிந டந்தே. (சுகூ)

செந்தினகர்க்கரு கெய்திடும்பாதையிற்
    சென்றிடும்வேளையின் மாலை—யிருள்
சேர்ந்திடுமென்ன விரைந்திடலாயினன்
    சேந்தனெர்வேதிய னென்ன
திருமேனிகொ டடுகிமெ யுறவாடிநி னுடன்யா னுளன்
    சிந்தையஞ்சேலென்று துன்ன. (எ0)

சஞ்சலமற்றுரை கூறிடும்போதிலென்
    றன்றிருநாமஞ்சுப் பையன்—என்றன்
றங்கையில்லங்குள தின்றிரவம்மனை
    தங்கிடுவோமெனச் சாற்ற
சாதம்பெரு கியசெந்திலி லணையும்பெரு மகிழ்வந்தணா
    தந்துணையாணிறை வேற்ற. (எக)

நீரின்முழுகிவெண் ணீறுதரித்து
நியமங்களியாவையுஞ் செய்து—பசு
நீலமயிற்குமரேசன்றன்கோயிலி
னேர்ந்துபணிந்தருச் சித்து
நிகரற்றிலை பொதிநீறுடன்மிகுமுக்கனி பிரசாதமு
நேரிலடைந்துசெ ழித்து. (எஉ)

சுப்பையன்றங்கை மனையினிற்சென்று
சுவைக்கனிபாலமு துண்டு—மிகத்
தூயமொழிபல பேசியன்னோனுந்
துணையுறவேதுயில் கூர்ந்தான்
சொலுமாவிருள்செறிவாநடுவிரவூடிவ னனவாயுடன்
றுஞ்சுமன்னுனின்றென் றோர்ந்தான். (எந)

வைகறையாகி விடிந்ததுமம்மனை
வாய்ந்தவர்தம்மைவி னவ—அவர்
வந்தவன்போனவி தந்தெரியோமென
வாய்கொடுகூறினர் தாமே
மயில்வாகன னலைவாயுறை முருகோனருள் விளையாடலிவ்
வாறுசெய்தானிச மாமே. (எச)

பின்சிலநாளவண் வைகியிருந்து
பெருமயிற்சேவகன் பாதம்—தினம்
பேணிவணங்கி யிருந்தனனோர்தினம்
பேரன்புடன்கட லாடி
பீடேற்றிடு நாழிக்கிணறுடித்திரு நீறிட்டுயர்
பேரருள்வேலன்முன் னோடி. (எரு)

என்னையிவ்வாறுல கூடுவிடுத்துள
மேங்கிமயங்குறக் கண்டா—யினி
யெத்தருணத்தி லருட்கடலிற்றுளி
யென்மிசைதோயத்தெ றிப்பாய்
இணைதீருன தடிவாரிச மறவாமன முறுமேலவ
ரீட்டத்துள்வைக்கக்கு றிப்பாய். (எசு)

பாவியுலக மயலிலழுந்திப்
பதைத்ததிம்மட்டிற்போ தாதோ—வுன்றன்
பக்கலடையப் புரியெனக்கண்புனல்
பாயத்துதித்தன னன்பால்
படிமீதடி யதிராவிதம் வலமுவிசை வரும்வேளையோர்
பன்னிருகைக்குகன்றென்பால். (எஎ)

ஆவரணத்தினிற் சைவவேளாள
ரருங்குடிப்பாலக னென்ன—வுரு
வாகிவெண்ணீறு முருத்திரர்கண்மணி
யாரமும்வெண்கலைச் சீரும்
அதிகப்பட வுரிமைக்குணம் வதனத்தில கிடவுற்றுரை
யாடினனென்றனக் காரும். (எஅ)

இங்குதெரிந்தவ ரில்லையெனையு
மெவருக்குமேதெரி யாதால்—என்மீ
திச்சைமிகுந்து நெருங்கிடுநீயெங்
கிருப்பவனென்றிவன் விள்ள
எனைநீயறி கிலையோவுனை யனுநேரமும் விலகாதுள
னென்பெயர்சுப்பைய பிள்ளை. (எகூ)

இந்தவிடத்தினி லென்றுமிருப்பவ
னென்றுரைகூறிம றைந்தான்—உடன்
இப்படிவந்து மொளித்தனன்கந்தனென்
றேங்கித்தெளிந்துசென் றங்கே
யிலகும்பல ரையுமன்பொடுவினவும்பொழு தறிகின்றில
மென்றனர்யாருமொ ருங்கே. (அ௦)

செந்திற்குமரன் றிருவுளப்பாங்கு
தெரிந்துபுகழ்ந்துபணிந்து—நெஞ்சிற்
சிந்தனைசெய்து வசித்திடுநாளிற்
சிரவணமாபுரத் துள்ளார்
தேகப்பிது ராகித்திகழ் வேலப்பன தேவற்படி
தேடிவந்தார்பிழை யில்லார். (அக)

உன்னைப்பெறுந்தந்தை தாயர்க்கிப்பூமியி
லுன்னைவிடக்கதி யுண்டோ—ஔவை
ஓங்குமன்னைபிதா முன்னறிதெய்வமென்
றோதுதனீயறி யாயோ
வுருகும்பரி வுறுமன்னவர் மனநொந்திடி லெதுபுண்ணிய
முற்றிடுநீகுறி யாயோ. (அ௨)

தந்தைசொன்மிக்கதோர் மந்திரந்தன்னொடு
தாயிற்சிறந்தொரு கோயில்—எங்கும்
சாற்றுதற்கின்றென்று தந்தைதாய்ப்பேணனும்
சத்தியநீமறுப் பாயோ
தனியேபல விதமாயலைவுறலா லுட லிடைநோய்வரிற்
றுங்கியதைப்பொறுப் பாயோ. (அ௩)

இந்தமுருகனம் மூரிலிருந்துநன்
கெண்ணிடிற்காத்தரு ளாறே—நாங்கள்
இன்றுசொ லுஞ்சொ லிகழ்ந்துதள்ளாமலுள்
ளேற்றுடன்வந்திடு கென்றார்
இருளார்பல பவமூடுசெய் வினையாவையு முருவாகி
யெதிர்ந்ததுபோல்வந்து நின்றார். (அச)

அன்னவர்சொன்ன வுரைத்திரள்யாவு
மமைவுடன்கேட்டிவன் சிந்தை—யிடை
யன்புடனென்றனைத் தேடிவந்தாருக்
கழைத்திடுகின்றது நன்றே
அனைதாய்முன மறிதேவென மறைகூறிய மொழிஞாய
மறிந்தனன்யான்சொல்வ னென்றே. (அரு)

கல்விகற்குஞ்சிறு பாலகர்க்கோதுங்
கருத்தினைக்கொண்டுநீர் சொன்னீர்—கறுங்
காலனெதிர்வரிற் றாய்தந்தைமுன்னின்று
காத்திடவல்லவர் தாமோ
கடிதேதலை மிசைமோதியு மழுதேபிற கிடுகாடுறு
கன்மமியற்றுந ராமோ. (அசு)

எத்தனைசென்மத்தி லெத்தனைதாய்தந்தை
யெந்தத்தாய்தந்தைநீர் சொற்றீர்—என்று
மேந்திப்புரந்திடு தந்தையுந்தாயு
மெழிற்குருவுந்தெய்வந் தானும்
இணைதீர்புக ழலைவாயுறை முருகோனல திலையீதுமெ
யென்றறிந்தேனினி யானும். (அஎ)

தந்தைசொன்மெய்யென்று தாய்தலைகொய்து
தவப்பயன்பெற்றவன் ருனும்—தெய்வாந்
தான்வலிதென்று தன் றந்தையின்காலைத்
தடிந்துமெய்ப்பேறுபெற் ருேரும்
சகமீதுள ரதனுன்முடி யினிலேயறி தருதேவிது
சத்தியநீருற்றுப் பாரும். (அஅ)

தந்தையுந்தாயு மெனமறைகூறிய
சத்தியநீரறி வீரோ—அருட்
சற்குருநாதன் கடைக்கணருட்டுளி
சார்ந்தவர்க்கேவெளி யாகும்
தசைதோல்பொதி யுடல்நாமெனு முலகாயத நெறிபேணு
சழக்கர்க்கிஃதோ திலுள் வேகும். (அகூ)

என்றுகுறுமுனி யின்கலையாவரு
மிந்தப்பெரியவன் கூற—அவண்
ஏய்ந்தவரொன்று மியம்புதற்கின்றி
யிருந்தனர்வேலனுட் சொல்வான்
இதுகாலவ ருடனேகுதி பழனுபுரி யிடைநீடரு
ளீகுவமென்றனன் செல்வான். (கூ0)

வந்தவர்தம்முடன் கூடிச்சிரவண
மாநகரெய்தியி ருந்தான்—உள்ளம்
வாடியிருந்தவே லப்பனுண்டாளு
மனக்களிப்பெய்தினர் சின்னுள்
வடிவேலவ னெருதேசிக வடிவாவர லெதுகாலென
மாழ்கியிருந்திவன் பின்னுள். (கூக)

வண்மைப்பழனி மலையினுக்கேகி
வயங்குசரவணப் பொய்கை—பெரு
வைகாபுரித்தடம் சண்முகமாநதி
வாய்ந்தநற்றீர்த்தங்க ளாடி
மகிழ்வாயுயர் திருநீறணி பெறமாமலை வலமாகி
வணங்கிக்கணேசனைப் பாடி. (கூ௨)

## பாதச்சுவடுகோணல்.

தண்டமணிந்து விளங்குகுகன்றிருச்
சந்நிதிசேர்ந்துவ ணங்கி—மனச்
சஞ்சலம்விண்டுவ ருந்திடும்வேளையிற்
றுளிணையின்சுவ டங்கே
தருமண்டப முறு திண்சிலை மிசைவண்புகை நிறமொன்றிய
சார்பிடமெங்குமொ ருங்கே. (கூ௩)

கண்டுமகிழ்ந்து வலம்புரிந்தோர்புறங்
கன்றிக்குருவடி வாய்நீ—திருக்
காட்சிதந்தாலன்றி நீட்சிகொண்டிங்கு
கணந்தரியேனென வீரம்
கரையின்றியெய் துபுதிண்கிரி மிசைநின்றுரு ளுறநெஞ்சு
கருதலும்வேளுப காரம். (கூ௪)

## அசரீரிகேட்டல்.

இத்தருணத்தில் விரைந்திடல்விட்டுன்
னிருப்பிடஞ்சென்றுசில் காலம்—இருந்
தெய்திடிலின்னருள் செய்திடல்கூடுமென்
றேயசரீரியாய்ச் சொன்னான்
இதுநன்றென மனநம்புதல் கொடுதன்பதி யிடைசென்றுள
வில்லறத்துற்றன னின்னான். (கூ௫)

## தண்டபாணி சுவாமிகள் வரலாறு.

தென்னருணைப்பதி யூடுபிறந்து
திருப்புகழ்கந்தனந் தாதி—முதற்
செப்பியவ்வூரிற் பிரபுடதேவத்
திருப்பெயர்மன்னனும் பார்க்க
திகழ்வேலவ னொருதூணிடை மயின்மேலெதிர் வருமாறு
திருவருளாற்செய்து தீர்க்க. (கூசு)

அன்னவன்கந்தன் வடிவத்தொளிகண்
டமையாதிழந்தகண் ணல்கித்—தனை
ஆணவத்தாலிகழ்ந் தோதுஞ்சமண
னவசெயமெய்தவும் பண்ணி
அவிர்கோபுர மிசையேதன துடன்மேவுற வொருமாகிளி
யாகமதுட்புகுந் தெண்ணி. (கூஎ)

தேவுலகெய்தி யமரர்தலைவன்
றிருமுடியிற்பதஞ் சூட்டி—அவன்
செப்புபசாரத் தினைப்பொருளாகத்
திருவுளத்திற்கரு தாதே
திருவாரமிழ் துணவேகொடு தருவூடுள தொருபூவொடு
சீரருணைத்தல மீதே. (கூஅ)

வந்தரசற்கதை நல்கிச்சமணன்
மடிந்தொழியுந்திறங் கண்டு—குகன்
வாழ்கந்தமாதன மீதொன்றுகோயில்
வணங்கிக்குகனெதிர் சென்று
வளர்ஞானந லநுபூதிசொ லியபோதினில் வடிவேலன்
வலப்புயத்திற்கொள வன்று. (கூகூ)

தங்கியிருந்த வருணகிரிப்பெயர்ச்
சற்குணபூடணன் றன்னை—அந்தச்
சண்முகநாதன் கடைக்கட்கருணைச்
சலதியிலாட்டிமுன் னோளே
தவமானிட வடிவாயுறு தினமோர்மக னுனதாசை
தழைத்துமிகவுநொந் தாளே. (௱)

அன்னவளுன்றனக் காகவுலகி
லவதரிக்கச்செய்வம் யாமே—அவ
ளாற்றுதவம்நிறை வேற்றுவதன்றி
யருட்கவுமாரத்தின் றன்மை
யவிர்பூவுல கிடையேபல ரறியாதுபல் விதமாக
வலைந்துதிண்டாடிடுந் தின்மை. (௱க)

இன்றியொழிந்து சமயத்தின்பத்தி
யெழிற்சரியைமுத லாகப்—பகர்
ஈரிருபாதத்தை மூவிருபாகத்
திசைத்துக்கௌமாரவி னோதம்
இலகும்படி சொலிவன்கொலை புலையிஞ்சையி லதுதொண்டி
விசையும்படிபலர் பாதம். (௱உ)

போற்றிவணங்க வவர்க்குபதேசம்
புகன்றுதியானநன் மார்க்கம்—தனைப்
புந்தியமைத்தனந் தங்கவிமாரி
பொழிந்துலகெங்குமு லாவி
பொருவாநம தறுமாமுகமெனுமூவிரு மதவாணர்
பொதுக்குருவென்றிட மேவி. (௱ங)

என்னுருவுன்னுரு வாகவிளங்கு
　　மிணைதவிர்ஞானச மாதி—நிலை
யேய்ந்துநம்பால்வந்து தோய்ந்திடுகென்ன
　　வியம்பிவிடுத்தனன் பூவில்
இலகுங்கழை வனமென்பதியினிலன்புறு மொருதொண்ட
　　னிருந்தவச்சேயென நாவில். (௯௪)

வாணிமின்னுளக லாதுகளித்து
　　வதிந்திடக்கொண்டுபி றந்தே—யுடல்
வந்தவெட்டாம்வய திற்கவிமாலை
　　வழுத்தத்துவக்கியு மேலோர்
மனமாரும்வி யப்புற்றிடமுருகோனடி பற்றித்தொழு
　　மாட்சியுங்கொண்டுவிண் பாலோர். (௯௫)

கண்டுபயந்திட வேள்விக்கொலையுங்
　　கடும்பிழையென்றுமு ழங்கி—யொரு
கையிற்றடியொடு மெய்யிற்பொடியுங்
　　கழுத்தினிற்கண்டியும் பூண்டு
கவினுருமு ருகதாசனெ னொருபேர்புவி முழுதோதிடு
　　கண்ணியத்துற்றன னுண்டு. (௯௬)

பற்பலநாட்டினும் பற்பலதொண்டர்
　　பணிந்துதொடர்ந்திடச் சென்று—பல
பாவலர்வாத மடக்கியனந்தம்
　　பனுவல்கள்பாடிப் பகர்ந்து
பதினறுக லையின்மாமதி நிகராமொளி யுறவீறு
　　படைத்தசிம்புட்கு நிகர்ந்து. (௯௭)

வேணுவனப்பதி யிற்றிகழ்ந்தன்பு
விளங்கவுருமலைக் கோயில்—வடி
வேலவனுக்குவண் ணக்கவியாதி
விளம்பியிருந்தன னேசன்
மேதக்கந லுணர்வோனுயர் சாமக்குள நகர்மேயவன்
வெங்கடராமண தாசன். (௯அ)

கல்விச்சிறப்பொடு சொல்விற்பனத்தின்
கனமும் பொருந்திய சீலன்—மிகு
காதலுடன்பல தேயமுஞ்சென்று
கவின்றிருநெல்லையி லேகி
கண்கொண்டசி கிச்சேவக ணெண்கொண்டத மிழ்ப்பாவலர்
காவலன்றன்னெதி ராகி (௯௯)

பற்பலனுாயம் விளம்பவுணர்ந்து
பதிந்தமெய்யன்புவி ராவி—அவன்
பாடுதியாறுநூ தியின்புத்தகம்
பத்தியிற்பெற்றும கிழ்ந்து
பழிதீர்விடை கொடுநீள்பல தலசேவைசெய் தெழிலார்தரு
பாண்டிநன்னுடுக டந்து. (௱)

சீர்மலிகொங்குநன் னாட்டையடைந்து
சிரவணநன்னக ரெய்தி—அருட்
டேசிகன்றன்வர வெண்ணியிருக்குமித்
தெள்ளியன்றன்னிடஞ் சேர்ந்து
சென்றிட்டத லங்கட்கிடை கண்டிட்டவி யன்பற்பல
செப்பியுற்றுன்களி கூர்ந்து. (௱௧)

## குருப்பிரதாபம் வினவல்

மூங்கிலிலீச னிலிங்கமதாகி
முளைத்ததிருநெல்லை யூரில்—ஒரு
முக்கியமானசி றப்பினைக்கண்டு
முழுமகிழ்வெய்தினன் யானே
முருகன்றிரு வருள்கொண்டொருபெரியன்றிரு வுருவொன்றி
முளைத்துவிளங்குகின் றானே. (௱௰௨)

அன்னவன்றன்புகழ் கூறுதற்கென்னி
லனந்தனுச்கும்மடங் காதே—அரு
ளற்புதமிக்கத மிழ்க்கவிதைத்திர
ளாயிரத்தின்றொகை மேலே
அணிமாமுத லியபேறுகள் பலமேவியி வுலகூடுப
லற்பர்கொலைத்தொழி லாலே. (௱௰௩)

கொன்றபிணத்தசை தின்றுவெறிப்புனல்
கொண்டுமசத்திய வாதே—தினங்
கூறிப்பிழைவகை மீறித்திரியுங்
கொடுமையில்லாதற நீக்கி
குருவாவரு பலர்வாய்மொழி யதனால்வினை வனவாமத
கோடிக்கொர்தேவெனத் தாக்கி. (௱௰௪)

இந்தவுலகத் தினர்பலர்தாமு
மிவனொருதெய்வமென் றோதும்—புக
ழெய்தியவர்குறை யாவுநல்கிப்பி
னிருங்கதிசேர்வனென் பானே
யிணைதீர்தரு மொருவேல்கையி லுறநாண்மலர் பலதூவி
யிறைஞ்சுந்தொழிற்குரி யானே. (௱௰௫

பாதாதிகேசமட் டுத்தூளமாகப்
பரந்தவெண்ணீறுடை யானே—அருட்
பண்பவிர்காவியந் தானையிடையிற்
படிந்திடச்சுற்றியுள் ளானே
பரமேசனல் விழிமாமணி வடமார்கள முடனேவிரி
பான்மைச்சிகையுடை யானே. (௱௰௬)

வெண்கவுபீனமுங் கீளுந்தரித்து
விளங்குந்திருவரை யானே—கையில்
வித்தகத்தண்டு புனைந்தருட்பாதுகை
மென்பதத்திற்புனை வானே
வெற்பின்றலை யிற்சென்றுரு ளுற்றுங்குக னற்பண்பு
விளங்கப்பிழைத்தெழுந் தோனே. (௱௰௭)

தண்டபாணிப்பெய ரொன்றுமுருகன்றன்
றூசனெனும்பெய ரொன்று—பெருந்
தன்மைத்திருப்புகழ்ச் சாமியென்றுத்தமர்
சாற்றுந்திருப்பெய ரொன்று
தகுமுப்பெயர் தழுவித்திகழ் தருமெய்த்தவ முனிசத்திய
சாதனச்சீர்க்கள வின்று. (௱௰௮)

சுந்தரமென்று துலங்குமொர்பத்தினி
சூழ்ந்துபணிவிடை செய்யப்—பல
தொண்டர்புகழ்ந்து மகிழ்ந்துநெகிழ்ந்து
தொழுதுபிழைக்கநின் றூனே
தொடுதாமரை யிலைநீரென வதிலேதொடர் பிலதாறு
துணையெழுத்தோதுநன் றூனே. (௱௰௯)

சண்மதமுங்குகன் றன்முகமாமெனச்
சாற்றுமுழுத்தெளி வோனே—யெனைச்
சாரமுறுந்தமிழ் வாரியிலாட்டிப்பு
தன்மயமாக்கியுள் ளானே
தணவாதவ னடிபேணுநர் குறைதீர்தரு பாவீடுறல்
சத்தியனானறி வேனே. (௯௨0)

அந்தமுனிவ னுரைத்தபன்னூலி
னரசாந்தியானுநு பூதி—யெனும்
அற்புதப்புத்தக வித்தகவேத
மளித்திடப்பெற்றன னென்றே
அன்போடுமொ ழிந்தானது செந்தேன்மழை யென்றேயிவ
னூர்வம் பெருகின னன்றே. (௯௨௧)

கண்டுனல்சிந்த லென்புநெகிழ்ந்து
கழறிடுநாத்தடு மாறி—மிகு
காயமுரோமம் பொடிப்பவிரண்டு
கரந்தலைமீதுற நீதி
கதிர்சேர்வழி தருமாமறை முடிவாகிய பொருளோது
கவின்செய்தியானுநு பூதி. (௯௨௨)

வாங்கியதன்கவி முப்பத்துமூன்றையும்
வாய்ந்தநற்பாயிரத் தோடு—நன்கு
வாசித்ததன்பொரு ளாசித்துநெஞ்சின்
மகிழ்ச்சிசிறந்து பணிந்தான்
மாசற்றவ நூலைப்பகர் வானைக்குரு வாகப்பெற
வாஞ்சைகொண்டுள்ளந் துணிந்தான். (௯௨௩)

வெங்கடாரமண தாசனெனும்பெயர்
வேதியன்றன்னிட மிந்தத்—தவ
மேலவனப்பெரி யன்பழனிப்பதி
மேவிடுங்காலுரை யென்றான்
மிகுமாவலொ டுருகிப்பல தரமோதிட வவனத்தனை
வேட்கைக்கிணங்குபு சென்றான். (ஈஉச)

சிற்சிலகால முடற்றொடர்பாளர்
திருக்குகளாற்றடை யுண்டு—மனந்
தீவிரமுற்று வருந்தியுழன்று
திருவருளுடியுற் றானே
திருவார்கழை வனமூடுள பெரியோனடி யவர்தீவினை
தீர்க்குங்கருணைவற் றானே. (ஈஉரு)

நெல்லைவிடுத்துத் திருப்பரங்குன்று
நிறைமதுராபுரி போற்றித்—தவ
நேர்ந்திடுசோழவந் தானெனுமூரி
னிகழ்கந்தசாமியைக் கண்டு
நிலையாமுற வுடனேர்சில தினமேவிய னவன்வாய்மொழி
நேரிற்பெற்றேவழி கொண்டு. (ஈஉசு)

தொண்டர்பரவ வரும்வழியூடு
துமிசம்பட்டிப்பெய ரூரி—லொரு
துட்டனொடு தனைக்கொலுமாறு
துவக்கிடல்கண்டு விலக்கி
துணையாமவன் மகன்மேவிய பிணிதீர வொர்கவியோதுபு
சொல்லின்பெருமை துலக்கி. (ஈஉஎ)

அந்தப்பலிகொளும் பேயினோர்கோயி
லழிந்திடச்செய்துபின் செவ்வேள்—அர
சாளும்பழனியின் மூளும்பெருவிருப்
பாகியவணடைந் தானே
அன்பாளர்தெ ரிந்தேயெதிர் கொண்டேபணி சந்தோட
மமைந்துவந்தேயமர்ந் தானே. (௩உஅ)

கந்தன்திருவடி கண்டுபழனிக்
கவித்திருவாயிரம் பாடிப்—பல
காரணங்கொண்டு வசித்தனன்மாதவக்
காட்சித்திருநெல்லை யானே
காதற்பெறு சாமக்குள வாசப்பெரி யோன்முத்தமிழ்
கற்றவர்மெச்சுநல் லோனே. (௩உ௯)

இந்தவிவரங்கள் யாவுந்தெரிந்திவ
னின்சமுகத்தினி லெய்தித்—தவ
மேறுதிருப்புகழ் மாமுனிநாத
னெழிற்பழனுபுரி யின்பால்
இலகுங்கழைவனம்விட்டருள்பொழியுஞ்சினைமுகிலொத்துந
வின்பினுற்றனென்றுள் ளன்பால். (௩௩0)

சொல்லினன்கேட்டுப் பசியுடையோன்சட்
சுவைக்கறியன்னமுன்காணப்—பெறு
தோற்றமெனக்களி யேற்றமனத்துடன்
சூழ்ந்துபழனியிற் சென்று
துன்னற்கரு மெய்த்தேசுறு வண்ணச்சர பத்தேசிகன்
றூயசமுகத்தி னின்று. (௩௩௧)

சென்னியுறப்புவி யிற்பணிந்தன்பொடு
செங்கைதலைமிசை சேர்த்து—நின்று
தீபகுணச்சிறி யேனையுலகிற்
றிகைத்துழலப்பல வாறு
செய்திட்டது போதுந்தயை பெய்யத்தகி யீதென்று
சிறக்கத்துதித்தன னீறு. (௱௯உ)

செங்கையினாலெடுத் தன்னவன்றந்து
திருக்கடைக்கண்கொடு நோக்கி—இவன்
சிந்தைத்தெளிவு முயிர்ப்பரிசுத்தமுந்
தேர்ந்துனக்கெத்தெய்வ மீது
சேரும்பிரி யந்தங்கிய தோதென்றன னங்கன்பொடு
செப்பின னுண்மையப் போது. (௱௯௩)

உபதேசம்.

சற்குருவாவரு சண்முகநாதன்
றனதெழுத்தாறையுஞ் சாற்றி—மனஞ்
சஞ்சரியாம லொடுங்குறற்கான
சகலவினோதமுங்காட்டி
தன்கைத்தல மொன்றிற்றிகழ் தண்டத்தினு டன்சிற்குறி
தன்னைவிளக்கினன் கூட்டி. (௱௯ச)

யாமுனக்குச்சொல் சடாக்கரந்தன்னை
யெளியதென்றெண்ணிவி டாதே—சொலு
மெந்தப்பயன்களு மிந்தவெழுத்துரைத்
தெய்தத்தகுந்தவை தாமே
யிதையேபக விரவோதிந முருநாடிடு தொழிலேதவ
மென்பதுசத்திய மாமே. (௱௯௫)

கந்தக்கடவுண் முகங்களோராறு
கழறிடுசாத்திர மாறு—நெஞ்சுட்
காணுமாதாரங்க ளாறுவெளியிற்
கவினுந்திசைளோ ராறு
கமலாசன னுவல்வேதம தனிலோதிய நெறியாறு
கலந்ததிவ்வாறெழுத் தாறு. (௱௩௬)

மந்திரம்யாவுமிவ் வாறெழுத்துக்குள்
வயங்குதன்மேலவ ரோர்வார்—முன்னில்
வாய்ந்தபிரணவ நிட்களத்தன்மை
வளர்ந்திடக்கொண்டுள தாமே
வாதத்தொழி லோவித்தவ மேவித்தம தாவிககிடர்
மாற்றிக்கதிபெற லாமே. (௱௩௭)

கொல்லுங்கொலைதசை தின்னும்புலையிடர்
கொள்ளப்புரிந்திடு மிஞ்சை—யெனக்
கூறுமிம்மூன்றுந் தவமுடையோர்கள்
குறித்துவிலக்குவ வாமே
கோதொன்றுபொய் காமங்களி வீண்வம்புகள் பேசும்பிழை
கூடுதலுந்தவ றாமே. (௱௩௮)

எந்தவுயிருந்தன் சொந்தவுயிரென
வெண்ணுங்கருணைமுன் வேண்டும்—தனை
யேசிப்பலரெதிர் தூசித்திடினு
மிகழ்ந்துரையாப்பொறை வேண்டும்
எதுவுந்திரு வருளின்செய லலதிங்கொ ருவர்சுதந்தர
மின்றெனத்தேர்ந்திடல் வேண்டும். (௱௩௯)

தன்னுயிரொன்று பிழைத்திடவெண்ணித்
　　தவித்திடும்புன்குணமின்றி—யிந்தத்
தாரணியிற்பலர் தாமுநன்னீதி
　　தலைக்கொளச்செய்துபின் னாலே
தருமேனிலை யெனும்வீடதி யுறலேயுயர் வெனுமாசை
　　தழைத்திடக்கொண்டிடன் மேலே. (௱சo)

சண்மதக்கூட்டிற்கௌமாரமுமொன்றெனச்
　　சாற்றல்பௌராணிகச் சார்பாம்—அவை
தாமுமல்லாத வகாதவிகாதச்
　　சமயங்கட்குங்குரு வாகி
தரைமீதுள பலவாமுயிர் வகையாமணி தர்கள்பூர்வ
　　தவத்தளவாநெறி யேகி. (௱சக)

பக்குவமெய்திடு மட்டுந்தனது
　　பரத்துவத்தாற்றலை நின்று—திருப்
பாதமதிற்புகு மாறுகொள்சுத்தப்
　　பரம்பொருளாகுமதொன்றே
பதிவாமன நிலைபோலுரு வுறலானச களமேயுயர்
　　பண்பின்குமாரனு மென்றே. (௱சஉ)

கொண்டுபரத்தின் கருணைச்சகளக்
　　குமாரனைநாடு மார்க்கம்—இவண்
கூறுகௌமார மிதன்புகழ்யாவருங்
　　கூறுவதற்கமை யாதே
குருவாகிமுன் வருமானிட வுருவானது மருவாமது
　　கொண்டகருணையின் றேதே. (௱சங)

நிட்களமாயமை யிற்பரமாமுரு
　　நேரிற்குமாரனென் றுகும்—தவ
நீதியுரைக்குங் குருவுங்குமார
　　நிலைப்பரமென்னவுள் வாரே
நிறையும்பர மவனென்றிடும் வடிவங்கொடு திகழும்படி
　　நேர்தருகாட்சிகொள் வாரே. (ாசச)

முன்வருமானிட தூலக்குருவை
　　முதற்பரமென்று துணிந்தே—அதின்
முள்செயல்யாவும் பரத்தின்குமாரன்
　　முதுவிளையாடலென் றெண்ணி
முற்றும்பொறு மைப்பண்புப டைத்தென்றுமி யற்றுந்தவ
　　முத்தியினூடுறப் பண்ணி. (ாசரு)

மற்றொருதாய்வயிற் றிற்புகுதாதற
　　மாற்றுமென்றுத்தமர் சொல்வா—ரதை
மாயையென்றோதித் தமைப்பரமென்று
　　மதித்துத்திரிகுவர் சில்லோர்
வம்பிற்றின முண்டிட்டுடல் தம்பித்திட வெம்பித்துயில்
　　வந்துமயங்கிடு பொல்லோர். (ாசசு)

சற்பம்புலியர சன்றனிச்சேவகன்
　　றம்மைநெருங்கிற் பயந்தே—மனந்
தத்தளித்தேங்குவர் தேகப்பிணியது
　　சாரினும் வாடுவர் தாமே
தலமீதினின் மிருதீதுறு கலிவாதனை வரின்மாயை
　　தனைமதியோமென்னு ராமே. (ாசஎ)

தம்மதுடலின் றெழில்பலவுஞ்சடஞ்
சார்விவகாரமென் றோதி—அதிற்
றங்கிய தம்மை விகாரமற்றுள்ள
தனிப்பரமென்றுசொல் வாரே
சடமாமதை யொருமானிட னிடரேசெயில் வெகுகோப
சழக்கர்களாய்க்கெடு வாரே. (ஙசஅ)

அன்னவர்பொய்ம்மொழி நம்மவர்காதி
லணுவளவும்புகல் தீதே—அவர்
ஆதரித்துப்பல நூல்படித்துப்பக
ரந்தப்பரோட்சத்தி னாலே
அணுவாயினு நலமேவிட முடியாதநு பவமாக
வடைந்திடிலற்புத மேலே. (ஙசகூ)

ஐந்துவிதம்படு பூதங்களாகி
யலரிமதியொடு சீவத்—திர
ளாகிப்பவுதிக மாகித்திகழு
மகண்டப்பிரமந்தா னென்னில்
அறையும்பல பொருளுந்தம துருவென்றுல கறியும்பல
ஆடல்விளைந்திடு முன்னில். (ஙருo)

எந்தவிதத்தினுஞ் சேதமுறும
லிலங்கும்பிரணவ தேகங்—கொளும்
ஏற்றமுறத்தவ னோற்றகௌமாரத்
திருந்தகுமாரனென் போனே
யிந்தப்புகழ் கொண்டிப்புவி யின்கட்பலி ருஞ்சித்திக
ளெய்திக்கதியடை வானே. (ஙருக)

கண்ணனிராமனல் லுக்கிரன்காழிக்
கவுணியன்சங்கரன் பின்னும்—பலர்
கண்டிடவாளினிற் றுண்டுபடாவுடல்
காட்டியவல்லம னன்னூர்
காணும்பர நாமெனன்றிட லாகுந்தசை தோலென்பு
கனத்தவுடம்புறுமின்னூர். (௫௨)

சொல்லுதனுடக சாலையில்வேடந்
துலக்குநன்சிந்தனை வேறு—சபை
துன்னுநர்முன்புகல் சொற்றிரள்வேறெனுந்
தொன்மையொக்குந்தெரி வாயே
தொடருந்தவ மதுநன்றுற நிறையுந்தின மவணந்திகழ்
துங்கமெய்தும்பெரி தாயே. (௫௩)

சொற்பனத்துந்தவ நிட்டையினூடுந்
துலங்கும்பலபெருங் காட்சி—அவை
சூழ்சற்சகுணமென் றெண்ணுவதன்றிச்
சுதந்தரமென்றுகொள் ளாதே
சுடரோன்முத லினர்காணுற நனவூடெதிர் வருமாறு
துணிந்துறின்மாயைதுள் ளாதே. (௫௪)

விக்கிரகங்களை வெற்பிடம்போற்றி
விளங்கலுலோககௌ மாரம்—அருள்
மேருவின்மேற்றிசை வாழ்பவனென்ன
விளம்பன்மகாவிர தந்தான்
வெகுதேவரு மடிபேணிடு முருகோனொரு தலைவோனென
மெச்சுதல்மெய்த்துவி தந்தான். (௫௫

குமாரனன்றிப்பொருள் வேறிலையென்றுமெய்
கூறுதலத்துவி தந்தான்—நரர்
கொன்றுணன்மாற்றுங் குமாரனென்போர்நலங்
கொண்டசமரசத்தோரே
குறைதீர்திரு வருளாடல்செய் பவனேபர மகுமாரனென்
கொள்கையதீதர்சொல் வாரே. (ாருகூ)

இந்தவிதம்புக லங்கமொராறு
மிசைந்திடுமங்கியொன் றுண்டே—அதை
யென்னெனின்மன்னு முபாசகனெஞ்சத்
திலங்குங்குமாரனென் போனே
யிதனீளமெ னுன்முற்பகர் கவுமாரவி னோதத்தி
லிலங்கப்பிரித்துரைத் தேனே. (ாருஎ)

என்றுரைத்தக்க மணியும்வெண்ணீறு
மிசைக்குந்தியானுநு பூதிப்—பெய
ரேய்ந்தநல்வேதமு மீந்துசகத்தி
னிதுபல்லோருனைச் சார்ந்தே
யெந்நாளினு மெய்ம்மாதவ நன்னீதியின் மும்மாசற
வேற்றமெய்திக்களி கூர்ந்தே. (ாருஅ)

வாழையின்கன்று வழிவழியாக
வளர்ந்துகிளர்ந்திட லென்னக்—கவு
மாரநெறிப்புகழ் மாநிலமுற்றும்
வளர்த்திடநீகுரு வாகி
மன்னுற்றெனை யொருபோதினு முன்னற்றெருழிலகலாதுமெய்
வாழ்விற்செல்வாய் பரிபாகி. (ாருகூ)

என்றுபுகன்று விடுத்தனனுகை
விராமகுட்டித்திரு நாமம்—சுமந்
திங்குதுலங்கும கத்தியன்றன்முடி
யிப்புவிமீதுறத் தாழ்ந்தே
யிணையற்றிடு கருணைநிதி யுனையித்தின மெதிர்காணுறு
மென்றவனன்றெனச் சூழ்ந்தே. (௱௬௰)

தேசிகனுத்தர வின்படிமீண்டு
சிரவணநன்னக ரெய்திப்—பல
தெய்வமுமொன்றென மெய்வளர்சிந்தை
சிறக்கச்செபதவஞ் செய்தான்
சிவனார்பணி குருவாகிய பழனிபுரி முருகோனுருச்
சித்திரத்தேமலர் பெய்தான். (௱௬௧)

## வழிபாடு

பானுவுதிப்பதற் கைங்கடிகைக்குமுன்
பள்ளிவிடுத்தெழுந் தேகிப்—புனற்
பைந்தடமூழ்கிநல் லாடைவெண்ணீறு
பயன்றருமக்கநன் மாலை
பரிவிற்புனை குபுசற்குரு சரணத்துணை கருதித்தவப்
பண்பினிலைத்திடும் வேலை. (௱௬௨)

நித்தமுமன்பொடி யற்றிமுடித்து
நிலத்தினிடம்பயிர்வேலை—முதல்
நேருமுலகநி கழ்ச்சியுந்தாமரை
நீரெனநின்றுசெய் தானே
நேருற்றிடு முடலின்பிது ராகித்திகழ் பவனன்பறு
நெஞ்சினனுயிருந் தானே. (௱௬௩)

மாடுகன்றுமனை வீடுபெண்டுபிள்ளை
வாழ்க்கையுடல்பொரு ளாதி—என்றும்
வாய்ந்தசெல்வமெனவீழ்ந்து தொல்லைகொடு
மாய்ந்திடுவார்பலர் பூவில்
மகனுத்தம நெறிமேவிநல் விரதத்திடை செலலாலுளம்
வாடினன்றந்தைவிர் தாவில். (ராகசு)

ஆண்டாளெனும்பெயர் பூண்டாளுடற்பெறு
மன்னையுள்ளன்பொடு பேணி—மிக
ஆதரித்துத்தவ நேமமுற்றத்துணை
யாகியுற்றாள்சில நாளே
அப்பக்குவமுறுபோதிரு பத்தெட்டெனும் வயதாகி
யதன்பினடந்தது கோளே. (ககரு)

தந்தையுந்தாயு மிவன்மனையாய்வந்த
தையன்மகப்பெற லாதி—சுப
சம்பவமும்பல கண்டுமகிழ்தனர்
தண்பொதியைத்தலை வேலன்
சாற்றும்பயன் வாய்க்கும்படி தோற்றுஞ்சில மாற்றங்கொடு
சஞ்சலமெய்தியிப் பாலன். (ககசு)

மறுமணம்

உற்றனனுக வுடற்றந்தைதாய்நன்
குறுத்திமறுகலி யாணம்—செய
லுற்றனரெத்தனைபுத்தியுரைத்து
முகந்திலராய்மடித் தாரே
யொருபெண்கொடி தனையின்புட னமரும்படி கொடுவந்தணி
யோங்குமணமுடித் தாரே. (ககஎ)

வேண்டாமென்றெள்ளி விலக்கினும்வந்து
விளைந்ததுபந்தமென் றூலும்—அவை
வேறெனத்தள்ளி விலகியிருந்து
மிதமுறவேயமைந் தானே
மிளிருந்தவமுறுதொண்டரைவினையென்செயுமிருள்செஞ்சுடர்
மீதெதிர்த்தென்செயுந் தானே. (ககூஅ)

சீரங்கமடைதல்

நற்பழனித்தல மீதினுறுங்குரு
நாதன்றமிழ்த்தண்ட பாணி—சில
நாள்கழித்துத்திருக் காவிரியாற்றி
னடுத்திகழ்சீரங்கஞ் சென்றே
நாராயணன் மீதோதிய பாவாயிர மாநூலை
நவின்றரங்கேற்றிடற் கென்றே. (ககூகூ)

பத்திரிகைச்சகி தக்கடிதம்பல
பத்தர்கட்குஞ்செலவுய்த்தான்—அது
பண்பின்சிரவண நன்னகர்க்கெய்திடப்
பாக்கியமென்றிவன் கொண்டான்
பாட்டின்சுவை கேட்டுங்குரு நாட்டங்கொள வேட்டுந்திகழ்
பத்தியிற்சீரங்கங் கண்டான். (கள0)

கண்டுகுரவன் றிருச்சமுகத்திற்
கரங்குவித்தேத்தி வணங்கிப்—பல
காரணங்கேட்க நுவன்றுவசித்துக்
கருமுகில்வண்ணன்றன் முன்பில்
கவிகூறிந லுரையோதிடும் வியனுனது மதியாவல்
கலந்திடக்கேட்டன னன்பில் (களக)

அவ்வணங்கேட்டு வருமொருநாளிலோ
ரந்தணனுமரி பத்தன்—மக
ளாஞ்சிறுமிக்கு விடப்பயமெய்தி
யதிதுயரானதென் றூரே
அதுதன்செவி யுறலுங்கவி நுவலுந்தவமுனி சிந்தை
யழன்றுதன்வாய்நவின் றூனே. (கஎ௨)

இந்தவிடப்பிணி தீர்ந்திடினன்றி
யிதைப்படித்துப்பொரு ளோதேன்—என
யாவருங்கேட்க வுரைத்துச்சபைவிட்
டெழுந்துகருடன்முன் சென்றே
யினிதாகவ விடநோய்தணி வுறுமாறரு ளெனவோர்கவி
யேத்திவெண்ணீறளித்தன்றே. (கஎ௩)

நனவிற்கருட சம்பாஷணே

தன்னதிருப்பிடஞ் சென்றிடும்வேளை
தனதடியார்பலர் கூடித்—தொடர்
தன்மையிலேகின னத்தருணத்திற்
றனிக்கருடன்வரு நேமம்
தவவேதிய வடிவாயணி யுடைதாமரை மணியாதி
தரித்துத்துவாதச நாமம். (கஎ௪)

தாங்கியடியார் குழாத்துட்புகுந்திவன்
றன்னிடமுன்செலு மன்னோன்—பெயர்
சாற்றுகெனப்பர தேசியென்றிந்தத்
தனிப்பெரியன்சொல லானன்
தவமார்வே தியனென்பெயர் கெருடாசா ரியெனுஞ்சொல்
சபைத்தலைவன் கொளலானன். (கஎ௫)

சிந்தையிலெண்ணுங் கருடன்வெளியிற்
றிகழ்ந்தனனென்றுகை கூப்பி—யவன்
சீருருநோக்கியப் பெண்ணின்கொடுவிடந்
தீர்க்கவுன்பாற்கவி சொற்றேன்
றீரும்படி பாரென்றனன் மாரங்கனு ளானென்று
சிறக்கச்சொலிமறை வுற்றான். (௧௭௬)

இந்தவருட்பெருங் காட்சியின்மேன்மை
யெவருந்தெரிந்து வியந்தார்—விட
மின்றியப்பெண்சுக மெய்தினள்பின்ன
ரிசைப்பிரபந்தங்கள் சொற்றே
யிலகுஞ்சுவை மலியும்பொரு ளறையும்பயன் முடிவொன்றி
யெழிற்குருவின்விடை பெற்றே. (௧௭௭)

செல்வம்பெருகுஞ் சிரவணநன்னகர்
சேர்ந்துவசித்திருந் தானே—மிகு
சீர்த்தியுடன்றவ மேற்றிவணங்கு
சிறப்புமலிந்தது சிந்தை
சிறிதும்பல சுகமுண்டிட விழைவின்றியவ் விடையங்கள்
செறிந்திடவுற்றது விந்தை. (௧௭௮)

சிற்சிலகாலங் கடந்துவேலப்பத்
திருப்பெயர்த்தாதையைப் பொன்னூர்—வளர்
தேவர்தங்கோன்றன தூர்க்கழைத்தேகினன்
செய்தவப்பேறெனும் பாலன்
செல்லும்பிது ரதுகாரிய மெள்ளின்புனல் பெயலாதி
சிறப்பச்செய்தான்நு கூலன். (௧௭௯)

அன்றுவயதுமுப் பானுடனைந்துசென்
றுயதுபின்மனைக் கார்யம்—தனக்
காகியதுள்ள நிலைபிசகாம
லனைத்துநடத்தின னன்றே
அஞ்சாமன சஞ்சாரம றுஞ்சாதனை யுஞ்சாரந
லற்புதப்பாடன வின்றே. (க௮0)

## தனிவாசம்

உற்றதினத்தின் மனைவியர்மக்க
ளுடற்பெறுதாய்முத லானோர்—தன
துண்மைநிலைக்கிடை யூறுறுஞாய
முறுற்றுதலாயினர் நீசம்
ஒருதன்சிர வணமாநக ரமதன்குட திசையோரிட
மோதிவிரண்டுகு ரோசம். (க௮க)

சின்னவேடன்பட்டி யின்குணதிக்கிற்
செறியிரண்டெல்லையில் வாசம்—கொளச்
சிந்தையிலெண்ணி யொருசிறுசாலையுஞ்
செய்துதனிவசிப் பாகி
தினமேகுரு பரனுதடி மறவாமன மொடுபூசனை
செய்தனனிச்சிவ யோகி. (க௮௨)

சிற்சிலதொண்டர் தெரிந்துவணங்குபு
செப்புமிவன்பணி செய்தார்—இவன்
சேய்மனைதாய்முத லோரோவ்வொர்வேளையிற்
சென்றுகண்டேயுடன் மீள்வார்
தெளிவாமநு பவவாழ்விடை மகிழ்வாயரு கடைவார்வினை
தீர்த்திடலாலன்பின் மூள்வார். (க௮௩)

நீறுபடர்ந்து மறைத்திடவுள்ளி
ணிகழுநெருப்பது போலத்—தவ
நிச்சயமோன வருட்செயலிந்த
நிலத்தினர்காண வொண்ணுதே
நிறையும்பல பலவிந்தைகட டெரியும்பிரி விணையன்பர்க
ணேரிற்சொலற்கு மெண்ணுதே. (கஅச)

பாடல்களாகப் பகர்ந்துவைத்தான்சில
பக்குவர்கேட்கவுஞ் சொன்னன்—அவை
பாரின்மயலி லழுந்தியசிந்தை
படைத்தவர்க்கெய்தரி தாமே
பத்தித்துறை பற்றித்திகழ் சித்தத்தின ருக்குச்சில்
பலிப்புறக்கண்டனர் தாமே. (கஅரு)

அப்பரிசாகி விளங்கிடுநாளி
லரங்கநகர்க்கிடை வாழும்—குரு
வானதிருப்புகழ் மாமுனிபற்ப
லருட்டலசேவைசெய் பாதை
அற்புற்ற பசுக்கட்குவி ருப்புற்ற மருப்பைத்தரும்
ஆண்டபிரான்றிரு மாதை. (கஅசு)

என்னுந்திருத்தலந் தன்னையடைந்தினி
யெத்தலத்துக்குஞ்செல் லேனென்—றமைந்
தீடறுபொற்புறு கோவினநித்தமு
மீனர்வதைத்திடு கோரம்
இல்லாதற நல்வாழ்வருள் செய்தாளென வவ்வூரி
லிலங்கழகேசன்முன் சாரம். (கஅஎ)

கொண்டகவித்திர ளாயிரமான
குணிப்புறப்பாடித்து தித்து—நலங்
கூடுமவ்வூரின் புராணந்தமிழ்க்கவி
கூறிப்புலவர் புராணம்
குற்றமிலாப் புகழ்மேவிய சத்தியசூத் திரம்வாசகங்
கூறிமறைப்பிர மாணம். (க௮௮)

மெய்த்தவநேச முளோர்க்குதவும்படி
மேதகுசீர்க்கலை வாணி—உடன்
மேவியுரைத்தரு ளித்தனதாற்றல்
விளக்குமொலியலந் தாதி
மிகுசற்குரு விசயப்பெயர் புனையுத்தம மறையிற்செறி
மேன்மையெடுத்தினி தோதி. (க௮௯)

பூர்த்திசெயற்காதி சேடனும்வாய்கள்
புதைத்திடுவான்மன நாணி—மிகு
பொற்பின்சிரவண நற்பதிவாழும்
புனிதனிதுசெய லோர்ந்தே
புனிதத்துணை யொருபத்தனு மிணையக்குரு பரனற்கழல்
போற்றினன்மாதையிற் சேர்ந்தே. (க௯0)

வந்தவழியிற்செங் கோடெனுமூரில்
வருந்திப்பகலுண வின்றிச்—சிறு
மாலைப்பொழுதிலவ் வூர்த்திருக்கோயில்
மறையவன்றந்தநல் லன்னம்
வாங்கித்துணை யாம்பத்தனு மோங்கப்பசி நீங்கித்தெளி
வண்ணம்புசித்துப்ர சன்னம். (க௯க)

கண்டவொருண்மை யினுற்பெரியோனகை
காட்டினனென்னென மற்றேன்—அது
காரணமீதென நம்மிடஞ்சென்றபின்
காணுதியென்றனன் முன்னேன்
காதற்றிரு மாதைக்குரு நாதற்கினி தோதற்புதக்
காட்சிப்பதிகஞ்சொற் றன்னேன். (ககூஉ)

பற்பலஞாயம் வினவப்பகர்ந்து
பழுதறுநல்லுரை பெற்றே—யிடை
பற்றுதலம்பல சுற்றிவிரைந்து
பதிந்திடுதன்னிடஞ் சேர்ந்தான்
பழிதீர்மொழி யுறுவார்சில ரவண்மேவின ரிடமேவரு
பத்தன்வினவுத னேர்ந்தான். (ககூங)

அன்னவன்சொல்லிக் குறித்ததினத்தி
னதிசயந்தன்னைவிள் வாரே—நாங்க
ளாசையுடன்குகன் பூசைமுடித்திட்
டருமொழிபேசிடும் போதே
யன்பின்பெரி யவனுமிவன் வந்தெங்கள்க ணெதிராயின
னப்புறங்கண்டில மீதே. (ககூச)

நங்குருநாதன் றிருவிளையாட்டென
நம்பிவணங்கின மென்ன—அவர்
நன்குவிளம்பினர் கண்டுவியந்து
நகைத்தவிதந்தெரிந் தானே
நன்றுற்றவர் தங்கட்கும றைந்திப்பெரி யன்பொற்பத
நாண்மலரிற்பணிந் தானே. (ககூரு)

தொண்டுசெயுத்தமர் வந்துபகர்ந்திடு
சொற்படியேநடந் தின்பாய்—நிகழ்
தோற்றமுங்கண்டு பலரும்வணங்கித்
துதிக்கப்பரார்த்தம தாக
துகளற்றிடு சரியைத்திர மொடுநற்கிரி யையுமுற்றிடு
சொந்தத்தினிற்றுணிந் தேக. (கசுகூ)

## ஆலயப் பிரதிட்டை.

சித்திமகோர்க்கடப் பேர்கொள்கணேசன்
றிருமலி தண்டமும் வேலும்—கையிற்
சேரக்கொளுங்கும ரேசனெனுமிரு
சீருருவஞ்சிலை யாலே
சிற்பக்கவி யிற்சொற்றக ணக்கிற்செய் தவைக்குற்ற
திருத்தகுகோயில்கண் மேலே. (ககூஎ)

அற்புதமாக வமைத்துமறைப்படி
யானகும்பப்புன லாட்டி—மிகு
மற்பொடுபுட்ப வகைத்திரள்பற்றி
யருச்சனைதன்கையி னூற்றி
அடியார்குழு வினின்மேன்மைகொள் சிலர்பூசனை செயவேவி
யருந்தவநிட்டைதான் போற்றி. (ககூஅ)

வாழ்ந்திருந் தானதுகாலநடந்த
வளமைகள்பற்பல வாமே—அவை
வாய்கொடுகூறிடில் வாரிதிநீரை
மடுத்திடவெண்ணுதல் போலும்
வந்தார்வினை சந்தேகமொ ழிந்தேமகி ழுஞ்சீர்புரி
மாட்சிபெற்றுனிவன் மேலும். (ககூகூ)

பூமியினுட்குகை யேசெய்ததிற்பல
போதுநிலேத்த தியானம்—புரி
பொற்பையவன்ற னுடற்பெறுமன்னே
பொருதுவருந்தின ளானுள்
பொருவாவுமை மடிமீதிவ னுறவேகொடென் மகவாமிது
புந்தினையேலென்று போனுள். (உ௱)

அத்திருக்காட்சியை யாண்டாளெனும்பெய
ராண்டாளடைந்துளந் தேறி—நம
தாசைமகனெனு மாசையகற்றி
யமைந்தனண்மற்ெருரு நாளில்
ஆசற்றிடு பூசைத்தொழில் சேர்பத்தன்மு னேதற்கரு
மற்புதக்காட்சிசெவ் வேளில். (உ௦க)

இந்தப்புனிதன் றிருவுருநேரி
லிலங்குசதுர்ப்புய மோலி—முத
லெண்ணில்வனப்பு மொளித்தகைதோய
விலங்கியியற்கைபி ஞனென்
ஈனந்தவி ரானந்தம தாய்நங்குரு நாதன்புக
ழீதென்றவன்ெருழ லானுன். (உ௦உ)

இவ்வணம்பற்ப விருஞ்செயல்காட்டி
யிருந்திடுகாலெழின் மாதைப்—பதி
யெய்திவசித்ததொர் தெய்வவுருக்குரு
விப்புவியிற்கொளு மேனி
யெய்யாதருள் செவ்வேளரு ளுல்லாசநன் மெய்வாழ்வி
லிசைந்துகரந்தன ளுனி. (உ௦௩)

மாதமதிற்றிரு வோணநன்னாளில்
மயிலவன்றன்புய மீதே—யவன்
வாய்மொழிகொண்டு வசித்துளன்கிள்ளை
வடிவுபொருந்தியின் பாலே
மலரொத்திடு மவனற்கழல் விரவுற்றன னெனவுத்தமர்
வாழ்த்தினர்சிந்தையன் பாலே. (உ0ச)

சற்குருபூசையிற் றெய்வவாராதனை
தன்னையுறக்கொளு மார்க்கம்—எனச்
சாற்றுகௌமாரம் பரம்பரையாகத்
தழைத்திடஞான சமாதி
தனிலேயுட லுறவாணிடை புகலாயின னிதுநீதி
தனைத்தெரிவார்பிர மாதி. (உ0ரு)

மூவர்கடேவர்கண் முத்தர்கள் சித்தர்கண்
மூதறிவுற்றநல் லோரே—மன
மூடமிகுத்துட லாசையிடத்தின்
முழுகிடுவோர்தெரி யாரே
மோசம்பட வேமன்பொரு காலந்தனி லாளுங்கதி
மூலமென்றூர்பெரி யாரே. (உ0சு)

அந்தவருட்டிரு மேனியமைந்த
வருந்தலத்திற்சிவ லிங்கத்—திரு
வாக்கியமைத்து வணங்கிநல்லன்ப
ரனந்தபயன்பெற லானார்
அதிதீவிர நிலைசேர்சிர வணமாபுரம் வளர்தூயவன்
அச்சரிதந்தெரி வானன். (உ0எ)

உள்ளினிறைந்த பரம்பொருளென்னு
முண்ணர்ச்சியமைந்திருந் தாலும்—புறத்
துற்றபழக்க மனத்தைவருத்தி
யுடற்றவுலைந்தனன் சீலன்
ஒருவாறு தெளிந்தேதிரு மலிமாதை யடைந்தேபணி
வுற்றனன்சொற்பரிபாலன். (உ0அ)

சிற்சிலநாளங் கிருந்துபணிந்து
சிரவணமாபுரஞ் சேர்ந்து—குரு
சேவடிநாடுந் தவத்தொழில்செய்து
சிறப்பில்வசித்திருந் தானே
செனியாதுமெ யுறுவீடருள் தவவேடமெய் திடுமாறு
திருவுளத்தெண்ணமுந் தானே. (உ0௯)

## திருவேடம்பேறல்.

சற்குருநாதன் றிருச்சந்நிதானந்
தனிலருட்காயியந் தானே—யுறச்
சாத்தியருச்சனை யாற்றியெடுத்துத்
தரித்து வெண்ணீறு புனைந்தே
தனைநேர்குரு பாணுதடி புனைசீருறு தலைமீது
தழைத்தசிகையை விரிந்தே. (உ௧0)

தொங்கவிடுத்திலங் கோடுகௌபீனம்
துணையடிப்பாதுகை தண்டு—தவந்
துன்னுமுருத்திரர் கண்மணிமாலை
சொலிக்கக்கழுத்தினிற் றுங்கி
துகடீர்தரு செபமாலைகை மிசையேதிகழ் வுறுமாறு
துலங்கருட்காட்சியி லோங்கி. (உ௧௧)

சாற்றருமெய்த்தவ நோற்றிருந்தானித்
தபோநிதியின்றிரு நோக்கம்—பெறத்
தம்மதுபுண்ணிய நண்ணியிழுக்கத்
தனித்துவங்தெய்தினர் சில்லோர்
தள்ளாளென வுள்ளாசையொ டில்லாண்முத லுள்ளாரொடு
தாம்பணிந்தேகுநர் பல்லோர் (உகஉ)

கொல்லல்புலாலினை யுண்ணல்பொய்வாசகங்
கூறன்முதற்றொழி னீங்கிப்—பிறர்
கொண்டவருத்தந் தனதெனநாடிக்
குலைந்துதவிர்த்திடுந் தன்மை
கொண்டிட்டது மன்றிக்குரா வன்சொற்படி தங்கைக்கிடை
கொள்கயிற்றின்குறி நன்மை. (உக௩)

தாங்கியிருந்து தவம்புரியுங்குண
சாதனர்பற்பல ராமே—அந்தச்
சத்தியக்காதைகள் பற்பலயானிதிற்
சாற்றவடங்குவ வன்றே
தன்னைத்தொட ருண்மைத்தவ மன்னுற்றவர் மும்மைப்பிணி
சாரவொட்டானிவ னின்றே. (உகச)

## இயற்றிய நூல்கள்.

சண்முகமாலை தயாநிதிக்கண்ணி
தனிக்கணநாதன்றன் காதல்—விதி
சாற்றுகுறளுந்தி பெண்கள்சிறுமையுஞ்
சார்விந்தின் மேன்மையுஞ் சாற்றி
தனியாம்விடு கவிநீதிகள் சமயோசித முறவேபல
சாற்றிப்பல்கீர்த்தனை போற்றி. (உகரு)

சந்தப்பதிகமு மாத்துமராம
சரித்திரமுங்குரு நாதன்—பதந்
தன்னிலடைக்கலம் பன்னும்பதிகமுஞ்
சற்குருவந்தாதி நூலும்
தகுமன்புறு பதிகங்களு நுவலும்புல மையின்முந்திய
சாந்தனித்தூயன்முக் காலும். (உகசு)

## அநுபூதிவிளக்கம்.

ஓர்தினத்துற்ற தியான நிட்டைக்க
ணொளிர்ந்ததொர்காட்சியம் மேன்மை—எனை
யொத்தவர்செப்பிடு தற்கடங்காதெனி
னும்புகல்வேனிதன் மீதே
யோதிற்றவ மேன்மைப்பெரி யாரொப்புவர் பாவப்பொலி
வுற்றவருக்கினி யாதே. (உகஎ)

அண்டமெலாநிறை யும்பெருவாளொளி
யாகிவிளங்கிடக் கண்டே—தொழும்
அத்தருணத்த வொளித்தகைமுற்று
மடுத்தொர்திரட்சிய தாகி
அவிர்வுற்றத னிடைசற்குரு பரன்மெய்த்திரு வுருவுற்றிடு
மற்புதங்கண்டிவ்வி வேகி. (உகஅ)

தாங்கருமானந்த மெய்திவணங்குந்
ததியின் மறைந்து பல் பேதம்—படச்
சாற்றுஞ்சராசர மாம்பிரபஞ்ச
சமூகமதாய்ப்பரவுற்றே
சதுமாமறை முடிவோர்பர முலகூடுபல் பொருளாமெனுஞ்
சத்தியத்தைத்துலக் கிற்றே. (உகக)

இத்தகையாமநு பூதியடைந்த
விவன்மனத்திற்பலர் பேசுங்-கதை
யேசியதட்டும் விகாதமதப்பிரி
வெள்ளளவும்புகு மேயோ
இவன்மெய்த்திரு வடிபற்றிடு மவரைத்தொழு மடியர்க்கு
மிலங்குமெஞ்ஞானமன் றேயோ. (உஉ0)

ஆதலினுற்றெய்வ பூசைபுரிந்தின்
படைவதினும்பெரி யோர்தாள்-பணிந்
தன்னவர்தம்முரை பெற்றவரைப்பர
மாக்கொடுபாசித்தன் மேலே
அதுநீதியின் முறையாமிது கருணைமய வடிவாமென
ஆதரிக்கும்பெரு நூலே. (உஉக)

மற்றொருநாட்டவ நிட்டையிற்கந்தன்
மறையவன்றன்னுரு வாகி-யெதிர்
வந்துசுகந்த மலர்த்திருமாலையிம்
மாதவன்றன்புயஞ் சூட்டி
வகைசேர்நவ மணியாலிழை புதுமாமுடி யிவனேர்சிரம்
வாய்ப்பத்தரித்தருளாட்டி. (உஉஉ)

மாதவமெய்த்துற வோரரசென்னு
மகிமைதுலங்கிடச் செய்தான்-பின்னும்
வந்தொருநாள்பசுந் தோகைமயிற்பரி
வாய்ந்திடச்செய்திவன் கோலம்
வளர்தன்னது வடிவென்னவு மிலகுன்னத நிலைதுன்னிட
வைத்தனனற்குது கூலம். (உஉங)

கொண்டுபணிந்துமி குந்ததவம்புரி
　　கொள்கையுற்றுனன்றி நெஞ்சில்-உயர்
குன்றிணையொத்த திருத்தியின் மூழ்கிலன்
　　கூரறிவுற்றகௌ மாரம்
குருநாதன துரையேமறை யெனநாடுதெ லெனும்வாய்மை
　　குலவக்கொண்டானந்தத் தீரம். (உஉச)

சொப்பனக்காட்சியு நிட்டையிற்காட்சியுஞ்
　　சூழ்சகுனம்புவி யூடே-யெதிர்
தோற்றிடப்பெற்றிட லேபயனென்று
　　துலக்கிய சொற்றன தூடே
துன்னக்கொள லாலத்திற மிம்முத்தன்வி டாமற்பல
　　தூயவர்க்காக்குமெய் வீடே. (உஉரு)

தன்னதுநிட்டையிற் கண்டவநுபவச்
　　சத்தியக்காட்சிக ளெல்லாம்-பல
சற்சனரானவு பாசகர்தேர்ந்து
　　தழைத்திடவேண்டுமென் றெண்ணி
தகுதூரிய மதனூலுயர் மடலூடெழு தியுமாதவ
　　சாலையிற்றுபனம் பண்ணி. (உஉசு)

பக்குவங்கண்டு பலர்க்கெடுத்தோதிப்
　　படத்தினைக்காட்டியு மென்போல்-வரு
பாமரர்தாமுஞ் சிறிதுதெரிந்துபின்
　　பற்றிடுமாறுசெய் தானே
படிமாயையி லுழல்வோரையும் விழியாலருள் செறிபார்வை
　　பரப்பித்தெளித்தன்மெய் தானே. (உஉஎ)

## பஞ்சபூத அண்டபேதப் படம் வரைதல்.

சூரியன்றோன்றி விளங்கியொடுங்குறுஞ்
சூழ்ச்சியுஞ்சந்திரன் றேய்ந்து-கலை
துன்னிவளர்ந்துபல் பேதவடிவிற்
றுலங்குதலும்பஞ்ச பூதம்
தோயும்பல வண்டங்களு மாதங்கள்வ ரும்பண்பொடு
சொல்லுமயனத்தின் பேதம். (உஉஅ)

மேலுறுஞ்சுத்த வெளியும்புவன
விளக்கத்தின்பாகமுஞ் சீவர்-பலர்
மேவுமவத்தைக ளாந்திலிருட்புற
மிக்கவொளிப்புற பேதம்
மீதுற்றது கீழிற்செலல் கீழுற்றது மேலிற்புகல்
வேறுநன்னீ தவி னேதம். (உஉகூ)

உச்சமுமத்தம னத்தொடுதோன்று
முதயமுமின்றியெக் காலும்-இருந்
தோர்படியாகி யசைவிலதாகி
யொருதனிச்சத்தியி னாலே
யுலகம்பல வமையும்படி யழியும்படி யவிருஞ்சுடர்
ஒன்றிரண்டற்றுற மேலே. (உ௩0)

என்றவிவரம்பல் காலந்தவஞ்செய்
திருந்தவர்க்குந்தெரி யாதே-அவ்வா
றெய்தும்விளக்கத் தினைப்பலர்தாமு
மினிதுகொள்ளப்புரிந் தானே
யிவனுதியின் மலையாசல மிசைவாழ்குறு முனியாதலி
விப்பெருமைதெரிந் தானே. (உ௩க)

## திருநாமச்சிறப்பு.

இந்தவுடற்பெறு தந்தைவிளம்பு
    மிராமகுட்டித்திரு நாமந்—தனி
லேய்ந்தபிற்பாதி மறைந்திராமானந்த
    னென்றுவிளங்கிய தெங்கும்
இதுகாரண மறிவார்பல பெரியோரெனை யனையார்சொலி
    டிற்றெரிவார்களி தங்கும். (உருஉ)

இராமனுக்கானந்தம் யாவருநன்னெறி
    யேற்றுவிளங்குத லாமே—யிவ
னெல்லவர்க்கும்பவ மில்வழிகூறி
    யிருக்குமானந்தத்தி னானே
யிதனாலிவ னொருபோது பொருளாயில கிடநீடு
    மிராமானந்தன்னென்றார் தானே. (உருரு)

இராவிணையொத்தபொய் மாலழியத்தகு
    மேற்றமுறுஞ்சிவ ஞானத்—திடை
யின்னலறத்தின நன்னர்வசித்திடு
    மிப்பெருங்காரணத் தாலே
இராமானந்தன் றுனெனு மோர்பேரெங் கும்பேசு
    மியற்கையுண்டாயது மேலே. (உருச)

அராவென்சொற்பாதி யுமாவென்சொற்பாதி
    யணைந்தசொல்ராமாவென் றாகும்—அவை
யாயிற்சிவஞ்சத்தி யாகும்ரவிமதி
    யந்தக்கலையிரண் டொன்றாய்
அமையுஞ்சுழி முனையாமதி னிலவுஞ்சுக முறலாலிவ
    னுமிராமானந்த னென்றே. (உருரு)

இராமனனந்தம் பிறப்பினுஞ்செய்தநன்
றிப்புவியோர்க்கிக வாழ்வே—யிவ
னெவ்வுலகத்தின் விருப்புமிலாம
லிலங்கநுபூதிமெய் வாழ்வே
யேத்தும்பலர் வாய்க்கும்படி யூட்டுந்தகை யாற்றுங்க
விராமானந்தப்பெயர் வீழ்வே. (உருசு)

இராமனெனும்பெயர் முன்கொண்டனந்த
னெனக்கலைத்தேர்ச்சியுள் ளோனுப்—பலர்க்
கேற்றவுரைத்திரந் தோற்ற விளங்கலி
னுலிவற்குத்திரு நாமம்
இனியெங்கெவர் களுநம்பிட மிளிருங்குரு பதநம்பு
மிராமானந்தன்னென னேமம். (உருஎ)

இராவினிற்றோன்றி யிருள்கெடுக்குஞ்சசி
யிற்செறிமானமைந் தந்தம்—பெறு
மேற்றமென்னச்சிறி யோர்க்கிருண்மாற்றி
யிகத்தினர்போலுள னுமே
யிதனுலிவ னுலகோருட னொருமானிட னெனன்மூட
மிராமான்ஆந்தன்என லாமே. (உருஅ)

அநுக்கிரகமுறை

இந்தப்பெரியன் விளாங்குறிச்சிப்பதி
யிற்பிறந்தோரொரு நால்வர்—தமை
யேற்றகடைக்கண்ணி னேக்கம்வைத்தன்பி
னிசையத்தடுத்தினி தாண்டே
யிகவாழ்வினி லமிழாதமெய் வழிகூறுபு துறவாநெறி
யிற்புகக்கூட்டினன் மூண்டே. (உருகூ)

அப்பனற்சம்பந்தன் சுந்தரன்மாணிக்க
மாம்பெயர்சூடிட நல்கித்—தன
தன்பர்கணத்தின் மிகுந்துவிளங்க
வமைத்தனன்முன்னிரு வோரும்
அணியார்சரி யையின்மேன்மைசெய் நலமேவுபு குகனூர்புக
லாயினர்பின்னிரு வோருள். (உசo)

பின்னையவன்பல நாள்கிரியைத்தொழில்
பேணியருட்குரு நாதன்—புகழ்
பேசியுபாசனை செய்கவுமாரப்
பிடிநழுவிப்பல வாறே
பிழைதீர்பல தலசேவைசெய் துலகோர்புகழ் தருபேரை
பிறங்குமடத்தினில் வீறே. (உசக)

கொண்டருட்சாந்தலிங் கக்குரவன்றிருக்
கோயிற்கினியவை செய்து—பலர்
கூடிவருஞ்சபை யாதிபுரிந்து
குலாவினன்சுந்தரப் பேரோன்
கோதற்றமெய் வாழ்விற்றவ மேநத்தியு பாசித்தருள்
கொண்டுவிளங்குநன் னீரோன். (உசஉ)

சற்குரவன்பத மல்லதுவேறொரு
தஞ்சமின்றென் றுணர் மேலோன்—தவச்
சாதனத்தொண்டர் தமக்குறு தித்தகை
சார்ந்திடத்தக்கமெய் சொல்வோன்
தன்னைத்தொடர் பவர்யாவரு முண்மைத்தவ முறவேவிழை
சத்தியச்செந்நெறி செல்வோன். (உசங)

தன்னதகத்தும் புறத்துங்குரவன்
றனதுருக்காட்சிகண் டங்கே—மிகச்
சாற்றநுபூதிகள் பற்பலகண்டு
சலிப்பறமெய்த்தவ நோற்போன்
சகவாழ்வினி லுழல்வோர்மன மெழுகாயுரு கிடமேனிலை
சாற்றுங்குணநல மேற்போன். (உசச)

தன்குருகாதை யிராமானந்தப்பிர
தாபமெனும்பெரு நூலை—வெகு
சாரமுறக்கவி யாற்பதின்மூன்று
சருக்கமுறச்சொலுந் தூயன்
சந்தக்கயி லாயத்தினி னந்திப்பெரு மானுற்றிடு
தன்மையின்மேவுமு பாயன். (உசரு)

திருமடாலயப்பணி.

இன்னவனுதிய தொண்டர்பலோருக்
கினியகுருத்துவந் தாங்கித்—திக
ழெங்கடுணைவ னிராமானந்தன்றன்
னிருபதஞ்சென்னியிற் சேர்த்தே
யினிதாயொரு மடமேசெய வமைவாம்வித முரைகூறுதி
யென்றனர்தொண்டர்க ளார்த்தே. (உசகு)

அப்பொழுதன்னவன் சொற்குறிப்பின்படி
யற்புதமாமடஞ் செய்தே—பெயர்
ஆனகௌமார மடாலயமென்றிட்
டதிற்புகுந்தார் சுபமாயே
அளியுண்டிடுமலர் நந்தன முகில்வந்தடை தருபைம்பொழி
லாதிசெய்தார் விரைவாயே. (உசஎ)

செய்திடுநந்தவ னத்தொடுசோலையின்
சீரெவர்சொல்லவல் லாரே—யந்தத்
தேவுலகத்தி லுறுந்தருவுஞ்சமஞ்
செப்புதற்கொவ்வரி தாமே
செறிபோகமெய் விழைவாளர்வை கிடமாமது தவசீலர்
சிறந்திடவுள்ளதி தாமே. (உசஅ)

இங்குசமைந்திடு காய்கனிபூவிலை
யாவுமருட்கட லாகித்—திக
ழெங்கள்கணேச னுடன்குகனுக்கென்
றியற்றுமாராதனைக் காமே
யிமையோருல கிடைதோய்தரு மலராதிய புலவாதை
யினர்க்குதவுற்றன வாமே. (உசகூ)

தேவுலகெய்துந ரைம்புலச்சேட்டை
செழித்தலைந்துண்டிழப் பாரே—யிங்கு
சேர்ந்திடுதொண்டர் நிராசையின்செல்வஞ்
செழித்தருட்போகங்கொள் வாரே
தேகம்பல வாறங்கவ ரேகொண்டுழல் வாரிங்கிவர்
சீர்க்கதியெய்திடு வாரே. (உருO)

இவ்வணஞ்செய்யுந் திருப்பணியாவு
மியற்றிருவுள்ளமகிழ்ந்தே—நனி
யேற்றுவசிக்குமந் நாளருண்மாதை
யினிற்குருநாதன்ச மாதி
யெய்துந்தல மிசையேதளி செய்யும்பிரி யமுமேவி
யெனையழைத்தோதினன் சேதி. (உருக)

## குருபணி விடை.

நங்குரவன்சொற் றிருப்புகழ்த்தேசிகன்
ஞானசமாதியின் கோயிற்—பணி
நன்குமுடித்துக் குறையறப்பூசை
நடத்திடல்வேண்டுமென் றோதி
நலமிக்கப லடியர்க்கிடை பழனிப்பெயர் பெறுமுத்தம
னற்றுணைசேரவி பூதி. (உருஉ)

நல்கியனுப்பி யரும்பொருளீந்து
நலம்பெறுமாலயஞ் செய்தே—யொரு
நற்றினங்கொண்டு சிரவணமாபுர
நன்மடம்விட்டுயர் மாதை [யுங்குரு
நகரந்தனில் வெகுதொண்டரொ டிவன்வந்துளின் மொழி
நாதனுரைத்தனி யோதை. (உருங)

செவ்வையுறப்பெற லாற்றண்டமேந்துந்
திருத்தண்டபாணியின் கோலம்—உயர்
சிற்பவிதிப்படி நற்சிலையிற்செய்து
செம்பொனில்யந்திரம் பீடம்
திகழப்பிர பலவற்புத பிரதிட்டைசெய் தினமத்தம்வி
சேடச்சாதாரண மேடம். (உருச)

கும்பநன்னீரபி டேகமுஞ்செய்து
குலவுநற்பூசையி யற்றிப்—பலர்
கூட்டமுமுண்ண வமுதளித்தென்றுங்
குறைவின்றிப்பூசனை செல்வான்
குளிர்பூநிதி முதலாவன வுறுமாறுசெய் தெனையேமுறை
கூறியழைத்திவை சொல்வான். (உருரு)

இந்தவருட்குரு நாதன்றளியி
    னிடைசரியைத்தொழில் செய்தே—நல
மேற்றகிரியையும் யோகமுஞ்செய்பி
    லிணையின்மெஞ்ஞானமும் வீடும்
எளிதாகவெய் திடலாமிது நிசமாமென வுபதேச
    மியம்பித்தன்னூர்சென்று கூடும். (உருசு)

அத்தவன்சொற்படி முற்றுநடக்கு
    மறிவெனக்கில்லையென் றுலும்—சிறி
தானமட்டுஞ்செயு நேமம்வைத்தெங்கு
    மதேயெனக்கண்டுள ளுமே
அறிவானது நிலையாவண மிருண்மாயைசெய் திடுகோர
    மறைந்திடுதற்கரி தாமே. (உருஎ)

என்றனகத்தில் விளங்கியருட்டுளி
    யீந்ததிருப்புகழ் நாதன்—வடி
விங்கிவன்மெய்ப்படி வென்றுமிவ்வுத்தம
    னின்பவுருத்தகை தானே
யினிதாமவ னுருவாகவும் எனதூடுபல் விசைகாணு
    மியற்கையறிகுவன் யானே. (உருஅ)

எங்கள்கௌமார விராமானந்தன்று
    னெழிற்பொதியாசலத் தெய்தித்—தவத்
தேற்றமதாற்பாவ நாசப்பதியினி
    லென்றதொருகவி விண்டான்
எழிலார்தன தொருபூருவ நிலையானது தெரிவாதலி
    னிந்தக்குறிப்பெவர் கண்டார். (உருகூ)

## சாத்திரத்தாபனம்.

வண்ணச்சரபன் றமிழ்த்தண்டபாணி
வயங்குதிருப்புகழ்க் காரன்—கவி
மாரிபெய்முரு கன்றனித்தாசனென்
வண்மைக்குருபரன் சாற்றும்
மற்றநூன்முடி வுறுநூல்வகை பலவாவுள வவையாவையும்
வாய்ந்தவுள்ளன்பினு லேற்றும். (உகு0)

தன்னதுகைகளி னற்புத்தகத்தினிற்
றப்பறவேபொறித் தின்னும்—வரு
சாதகர்போதகர்க் கோருபகாரத்
தருமமுறப்பதித் தானே
சகலவிளக் கமுமார்தரு குருபரதத்துவ வேதம
னைத்தலையாத்துதித் தானே. (உகுக)

## கௌமாரசபைத்தாபனம்.

தன்னுடலின்பி னுதித்துவிளங்கிய
சற்குணன்வெங்கட சாமி—மனை
தன்வயிற்றிற்சுத னைப்பிறந்த
தவச்சுதனுங்கந்த சாமி
சாரும்புவி வாழ்வின்றலை யோர்கொஞ்சமு மாலின்றிய
சத்தியபத்திய நேமி. (உகுஉ)

தந்ததாயாவானுஞ் சார்கதியாவானுஞ்
சற்குருவேயென நம்பி—அவன்
றனிணைபோற்று மடியவர்கூட்டந்
தனிற்புகுந்தேபணி செய்தான்
சந்தேகமும் விபரீதமு மென்றேவிளை மனவாதனை
தானொழித்தேவினை கொய்தான். (உகுரு)

பாடசாலைக்கிடை கற்றறியாத
        பலபலஞாயங்க ளெல்லாம்—குரு
பாதம்வணங்கிடு நீதியிலெய்திப்
        பசுந்தமிழ்ப்பாடல்கள் பாடி
பகையோடுற வறுஞான நிலையேபெற முயல்சிறுறு
        பாலகனென்றிட நீடி.                (உ௬௪)

உற்றனனப்பரு வத்தினிலிக்குரு
        வுத்தமர்பற்பலர் தாமும்—கதை
யோங்குமதப்பிரி வாலுழலாம
        லுயர்கவுமாரநன் னீதி
யுணரப்புகர் தினநற்சபை குழுமிப்பல பனுவற்பொரு
        ளோதுபிரசங்க மாதி.                (உ௬௫)

செய்துவிளங்கு சிறப்பினைநாட்டித்
        திகழ்ந்தன னச்சபை யூடே—வரு
சீரியர்தம்பெரு மைக்கிணைகூறுதல்
        சிற்றறிவாளர்தம் பண்பாம்
தேகத்தபி மானத்திடை மூழ்கிப்பல போகப்பொருள்
        தேடுகில்லார்பலர் நண்பாம்.                (உ௬௬)

திருக்கூட்டச்சிறப்பு.

உண்ணலுடுத்த லுறங்கல் கறங்கென
        வுள்ளஞ்சுழன்றிட வெங்கும்—தின
மோடித்திரிதர லேசத்தியமென
        வோதும்பொய்வாதரைச் சேரார்
ஒருமைப்பட வருள்சற்குரு சரணத்துணை கருதித்தயை
        யுண்மைபொறையன்பிற் பேரார்.                (உ௬௭)

வெண்டிருநீறு புனைந்தக்கமாலை
　　மிலைந்துகொலைபுலை யிஞ்சை—சற்று
மேவுகிலோமெனும் பான்மைதுலக்கி
　　விளங்குகையிற்கயிற் றூலே
மிளிர்கங்கண மணியுந்துணி வுடனும்பர்த முலகும்புவி
　　மேன்மையிற்றூழ்வத னாலே. (உசுஅ)

வேள்விக்கொலைசெய்து தேவர்க்குளபத
　　மேவக்கருதுநர் கீழோர்—அவர்
வீணிற்பலவித வாசைத்துயர்கோடு
　　மேடப்பிறவிபின் னுவார்
வினைதீர்தவ முயன்மேலவர் குழுமேவுத லுயர்மானிட
　　மேனிப்பயனெனு நாவார். (உசுக)

வேதங்களாயிரத் துங்குருவாய்மொழி
　　மேலெனுஞ்சத்தியந் தேர்ந்தோர்—தலை
மீதடிபார்பதத் தூளிதரித்து
　　வெயிற்சுடர்முன்றொழு மேலோர்
வெளிகாலனல் புனல்பாரென நவில்பூதபௌ திகம்யாவும்
　　வியன்குருவேயெனு நூலோர். (உஎ0)

## கனகசபைப் பிரதிட்டை.

ஆயபுகழ்க்கவு மாரர்பலர்க்குமொ
　　ரன்னையெனத்திகழ் சீலன்—தவ
மானதொழிற்றனி வாசமுறத்தன
　　தாள்கைமடத்தினோர் சாரே
அவிரற்புத கனகச்சபை பலவுத்தமர் பணியைக்கொ
　　டபாரமுறச்செயுஞ் சீரே. (உஎக)

எத்தகைச்செல்வமு ளோர்க்குநடப்பரி
தென்றிரவும்பக லாகப்—பணி
யெய்தநடத்தி யருட்குருநாத
னியம்புதினம்பிர திட்டை
யியலப்புரி தருபத்திமை யுலகத்தரி தரிதுத்தம
மென்றெனர்தேவர்மெய் நிட்டை. (உஎஉ)

எய்துதற்கான தினங்கலியையா
யிரத்திருபானிரண் டென்னுந்—தொகை
யேற்றரவுத்திரி யாவணியைந்தி
லிலங்கிடுசுக்கிர வாரம்
இசைசத்தமி யொர்சுவாதியு மமைவுற்றிடு தினகாலை
யிராமானந்தன்பரி வாரம். (உஎந)

ஆயிரந்தொண்ட ரரவொலிசெய்ய
வருட்குருபாதுகை சென்னி—மிசை
யாகவெடுத்து வியாபகசுத்த
வதீதபரத்துவ ஞானம்
அமையுந்தன திதயந்தனின் முதன்மந்திர முறைவிண்டுந
லாதரவிற்றவ மோனம். (உஎச)

பற்றிநடந்துந லுத்தமர்தொண்டு
பரித்திருபங்கினு மேவ—வுயர்
பான்மைச்சபையினு ளேகித்தவிசிடை
பாலித்தருள்குரு பாதம்
பரிவிற்பதி வுறவைத்தவ னுருவப்பட மமைவித்தொளி
பாங்குறச்சுற்றிப்ர சாதம். (உஎரு)

வந்தவர்பெற்றிய நாடிக்குருபரன்
வாய்மலர்ந்தோதிய சத்யத்—திரு
வாசகஞ்சத்திய சூத்திரந்தன்னுடன்
வாய்ந்திடுபுத்தக நீதி
வாசித்ததி லுளமாபொரு ணேசித்தனை வருமேனிலே
வாய்க்கவென்றீந்தனன் பூதி. (உஎசு)

பின்பச்சபையி னிலைத்தருணிட்டை
பெருக்கியிருந்துதை மாதந்—தொறும்
பேணுபவுரணைப் பூசமதிற்புகழ்
பெற்றநற்காவடிக் காட்சி
பெருகுஞ்சிர வணமாபுர மெனவண்பெறு திருமாதை
பிறங்கருட்டேசிகன் மாட்சி. (உஎஎ)

தங்கியகோயிலிற் றொண்டர்கள்செய்திடத்
தக்கபொற்காவடி நல்கி—அருட்
சற்குரவன்ற னுருப்பொலிவெண்பொனிற்
சத்தியசிந்தையி னாலே
தருசிற்பநல் விதியிற்புரி தனிவிக்கிர கமெனச்செய்
தவப்பெரியன்பரி வாலே. (உஎஅ)

தேசிகன்செங்கை பரித்ததொர்தண்டுந்
திருவுருவும்பிர திட்டை—அன்பிற்
செய்துமலர்த்திரள் பெய்துவழுத்திடு
செல்வமதிற்களி கூர்வான்
திருவார்பொழின் மலிகோள முனமேகியந் நகர்வாணர்
செயிர்க்கொலையூனுண வீர்வான். (உஎகூ)

சங்கரனுஞ்சிவை யுங்கனவூடு
　　தளர்ந்தவயோதிக ராகி—யிவன்
றங்குமிடத்திற் பணிசெயல்கண்டு
　　தடுத்துநீர்யாரெனக் கேட்டான்
தருவிர்த்தகி ரியிலுற்றன முனெழிற்பணி செயுமுத்தர்
　　தவம்பெரிதென்றருக் காட்டான். (உஅo)

இப்படிக்காணும் பலவிதக்காட்சி
　　யியம்பிடுதற்கடங் காவாம்—பணி
யேய்ந்ததவச்சுத னுங்கந்தசாமி
　　யெனும்புனிதக்குண வானே
யெங்கும்புகழ் தங்குங்குரு வின்செங்கதை சந்தங்கொ
　　ளெழில்வண்ணக்கோவைசெய் தானே. (உஅக)

இந்தப்பெரிய னியம்புபல்பாவு
　　மிராமானந்தத்திரட் டென்னப்—பெய
ரிட்டடுக்கிப்பின்பு சுந்தரமாமுனி
　　யேத்துகுருப்பிர தாபம்
இசைகந்தச் சாமிவழுத் தியசந்தக் கோவையுமச்
　　சேற்றிடுமாறறு தாபம். (உஅஉ)

சீரநத்தப்பதி யூடுபிறந்து
　　கிளர்மருதாசலப் பேரோன்—பலர்
கேடறுமேல்வழி கூடநன்னீதி
　　கிளத்துகுணத்தெளி வாளன்
கெருடப்பக வனதுத்தம மறைசித்திசெய் துளபத்தி
　　கிடைத்தவன்மிக்கத யாளன். (உஅங)

இக்குரவன்ற னடித்துணைநம்பி
யியற்றுதவம்பெறு சீலன்—மிகுந்
தேத்தியருட்குர வன்றிருவாயுரை
யெய்திடப்பெற்றபின் றன்பா [வாய்நிறை
விணைதொண்டின ரிருவோர்பொரு ளதுகொண்டதி விரை
வேற்றியுய்த்தான்மனத் தன்பால். (உஅச)

பழனிக்கெழுந்தருளல்.

தெய்வப்பழனியி லெய்தித்திருவருள்
செய்யத்தகுகும ரேசன்—அதி
செவ்வைப்படமன துள்ளிற்கருதிடு
செய்கைத்தவமத னாலே
செகமானிடர் பலதீவினை புரியாதற வழியேகொடு
செல்லப்புரிகுதன் மேலே. (உஅரு)

என்றுகுறித்திரா மானந்ததேசிக
னேற்றசுபதினம் பார்த்தே—அரு
ளேறுதிருப்பழ னுபுரியெய்தி
யிசைந்ததொர்சாலை யடைந்தான்
எவ்வேளையுமவ்வேளடி யுள்ளேகொளு மெய்வாழ்வி
லிருந்தனன்சிந்தை யுடைந்தான். (உஅசு)

பற்பலமாந்தர் செயுங்கொடுஞ்செய்கைகள்
பார்க்கமுடிந்தில வையா—வுன்றன்
பாரத்திருவுள நாடிச்சிறிதருள்
பாலித்திடின்முரு கையா
பசுவாதிய வுயிர்கோறல்செய் திழியூனுணு மவர்வேரறல்
பாரிற்புரிகுவன் மெய்யா. (உஅஎ)

தெய்வமின்றென்பவர் மெய்வழிகண்டு
திருந்தப்பலாடல்கள் செய்வேன்—செக
சீவபரந்தமை யன்றியின்றென்னுந்
திருட்டரைவாதினில் வெல்வேன் [தொழு
செங்கோன்முறை கொண்டாள்கைசெ யுங்காவலர் கண்டே
தேவெனநீதிகள் சொல்வேன். (உஅஅ)

இத்தருணத்தினி னித்திரையொக்க
விருப்பதுனக்கழ காமோ—மயி
லேறிவலம்புவி சூழுமிருஞ்செய
லேகியதென்றிட லாமோ
என்றேசிக னென்றேவரு கந்தாவுமை மைந்தாவென
வேத்தினனுண்மைபொய் போமோ. (உஅகூ)

கந்தன்மணவெளிக் காட்சியில்வந்துன்
கருத்தறிந்தேயருள் செய்வேன்—கலி
காலமெனச்சிறு நீதிசெலுத்திக்
கருணைகுறைத்துள னென்றுன்
கண்டானிதை விண்டாலெவர் கொண்டாள்பவர் தண்டாயுதக்
கைக்குகன்சொல்லென நின்றான். (உகூ0)

காலமவன்றன் கருணையின்முன்னிற்
கவின்றிடலேதெனிற் றன்னை—மட்டிற்
காக்கமுயன்றிடிற் சித்தியுறும்பொதுக்
காரியத்திற்றனை நீதி
காலத்தினை நாடிச்செய நாதிப்பர மோனத்தவர்
காணவுரைத்திடுஞ் சேதி. (உகூக)

அப்படிப்பற்பல காலந்தவஞ்செய்
தகிலத்துயர்கெடி னன்றிக்—கதி
யாசிக்கிலேனென நேசிக்கிலவ்வண
மாக்கிடுசத்தியை யீயும்
அதுபோதடி யவர்மாதவ வலியாலுல கநுகூலம
தாகிச்சுகமிக வேயும். (உகூஉ)

தென்பழனிக்கிடை வந்துதவத்திடை
சிந்தைசெலுத்திடு தீரன்—மிகு
சீர்கொள்சிரவண மாபுரத்தூடு
திகழுமெய்யன்பினர்க் கந்நாள்
செப்பிப்பழ னிப்பொற்றையி டத்திற்கும ரப்பற்கபி
ஷேகஞ்செயற்கொரு நன்னாள். (உகூங)

அடியவர்க்குத்திருமுகமனுப்பல்

பற்பலதொண்டர்கட் குந்தெரிவித்துப்
பழனித்தலத்தினில் வந்தே—தண்ட
பாணிக்குருபரன் பாதத்தெரிசனம்
பாடித்தொழும்வணம் விண்டான்
பாரூடிவன் வானோர்விழை சீராரபி டேகாதிகள்
பண்ணுதல்யாருமுட் கொண்டார். (உகூச)

அடியவர்வருகை

காரமர்பூம்பொழில் சூழ்தரநீடு
கணபதிமாநகர் வாழ்வோர்—மிகு
காதல்பொருந்தும் விளாங்குறிச்சிப்பதி
காணுமனேகநல் லோர்கள்
கனமார்சிர வணமாநக ரிடைவாழ்தரு பலசீரியர்
கற்பினுடன்வந்திட் டார்கள். (உகூரு)

சீரணைத்துந்திகழ் கிரநத்தப்பதி
　　சேர்பலவுத்தமத் தொண்டர்—அருட்
சிந்தையுடன்சௌரி பாளையநன்னகர்
　　சேர்பலசீரடி யார்கள்
செறிசோலைகொள் கணுவாய்நகர் வருதூயவர் பலரேண்மிகு
　　சின்னவேடன்பட்டி யார்கள். (உகசு)

சற்குணமார்நடுப் பாளையம்வாழ்தரு
　　சாதகர்கோயமுத் தூர்வாழ்—பல
சற்சனர்நற்றுடி யற்பதியோர்வளஞ்
　　சாலுமுடுமலைப் பேட்டை
தங்கும்பிரி யந்துன்றும ருங்தொண்டர்க ணெஞ்சன்பொடு
　　தாண்டிவந்தார்வழிப் பாட்டை. (உகஎ)

வெள்ளிமலைப்பட்ட ணப்பெயர்கொண்டான்
　　மேவியதென்கயி லைப்பால்—அவிர்
மிக்கபுனற்றிருக் காஞ்சிநதிக்கரை
　　மேவுபதித்தலை சேர்ந்தோர்
மிளிரும்பல பதிதங்கின ரெவரும்பழ னியில்வந்தருள்
　　மேவுசிறப்பினி னேர்ந்தார். (உகஅ)

தொண்டைநன்னாட்டினுட் சூழ்நடுநாட்டுத்
　　தொனித்திருமாதையில் வாழும்—குரு
தொண்டர் பல்லோருமவ் வூர்க்கருகாகித்
　　துலங்குபல்லூர்களி னின்றே
தோயும்பலர் தாமுந்தவ நேயம்பொலி யார்வங்கொடு
　　சூழ்ந்துசென்றார்தொழ வென்றே. (உகக)

வந்துளதொண்டர்கள் பற்பலரன்றி
மலைப்பழனித்தலத்தூடே—வளர்
மாதவத்தொண்டினர் தாமுமகிழ்ச்சி
மலிந்துபணிந்துட ஞனர்
வல்லார்புகழ்செவ்வேளரு ளிவ்வாறுசெய் தெவ்வாழ்வும்
வழங்கப்பெறற்குரித்தானர். (கூ00)

எல்லவருந்தவ வல்லமைகொண்டுய
ரெல்லையன்றனை நள்ளி—அவன்
எவ்வமையந்தயை செய்குவனென்றுள
மெல்லையிலன்பினின் மல்க
எய்துற்றிடு மவ்வுத்தமர் செய்கைக்கிவ னுள்ளத்திடை
யெவ்வமிலன்பது பல்க. (கூ0க)

வந்துதன்சேவை வழங்கியென்னுலுங்கள்
வாழுடற்குப்பிர யாசம்—மலை
வாழ்குருநான்றன் னுலும்முயிர்க்கு
வரும்பெருலாபமென் றிட்டான்
வந்தோர்பல ருந்தாளிணை யன்போடுப ணிந்தாரொரு
மாற்றஞ்சொலாநிலை யிட்டான். (கூ0உ)

தன்கவுமார மடத்திடைமிக்க
சபாபதிப்பேருறு தூயன்—முதற்
சற்சனர்முற்று மெழிற்பழனிக்கிரி
சார்ந்தனர்சுந்தரப் பேரோன்
தகுபூசனை முதலாவன குருவாய்மொழி தவறாது
தரித்து நடத்தினன் வாரான். (கூ0கூ)

பார்வதிமன்றல் முடித்திடுநாளிற்
பரமன்குறுமுனி யார்கும்—தனைப்
பைந்தமிழ்த்தென்பொதி யைக்கிரிக்குச்செலப்
பன்னிடுநீதியின் பண்பே
பழனுபுரி யபிடேகநல் விழவானதை யொருமாமுனி
பார்க்கவில்லாதரு ணண்பே. (ங0ச)

தெள்ளத்தெளிந்தவர் கொள்ளத்தகுந்ததோர்
செல்வப்பரம்பொரு ளாகும்—குரு
செவ்வைப்பதங்களை யுள்ளிற்கொளுந்தவர்
தெய்வத்தலம்பல மேலே
செல்வார்களு மெய்தாநல முள்ளாரெனு மவ்வாய்மொழி
செய்கைக்கோர்சுந்தர னூலே. (ங0ரு)

ஆறுவகைக்கவு மாரமதிற்சிறி
தாமுலகக்கவு மாரம்—அதி
லார்பவரிப்புவி யூடதிகத்தொகை
யாமவர்முற்பலர் தாமும்
அகளப்பொருள் குருவாவரு மெனுமுத்தம கவுமார
மறிந்திடச்செய்யவிந் நேமம். (ங0சு)

திருமலைக்கெழுந்தருளல்.

ஆர்கலியையா யிரத்திருபத்துநான்
காந்துந்துபிப்பெய ராண்டில்—வர
லானதையிற்பதி ஞறின்மதித்தின
மாமிருகச்சிர நாளில்
அதிகாலையி லுயர்பூசனை செபமாதிய நிறைவேறி
யருட்டிருமேனிசெவ்வேளில். (ங0எ)

வெண்டிருநீறு முழுதும்விளங்க
விரிந்தசிகைபுறந் தோன்றத்—தவ
மேவுமுருத்திர மாலையணிந்து
வியன்மிருகாவியி னலே
மிளிருங்கவ சமும்வெண்பொடி யுறுதிண்ணையு மவிர்தண்டும்
வியன்கரத்தேந்தினன் மேலே. (௩0அ)

உற்றதிவ்வாறு மனத்திடைதேசிக
னைப்பறுபாதம்வி டானு—நிலை
யுற்றதன்வாழிடம் விட்டுவிசாக
முடைக்குகநாயகன் வாழும்
உயர்வெற்பினை யடைதற்கென வெளியிற்செல நினைவுற்றவி
வுத்தமன்கண்புனல் வீழும். (௩0௯)

## அடியவர்காட்சி

நீரின்முழுகிவெண் ணீறுதரித்து
நிறைமணியின்வடம் பூண்டு—தங்கள்
நித்தியசத்ய நியமமுடித்து முன்
னின்றபல்லாயிரந் தொண்டர்
நிகழின்னிசையொடுதண் ணுமை முதலெண்ணறுபணிதுன்னி
நெருங்கல்கண்டொஞ்சின ரண்டர். (௩௧0)

வாசற்கதவந் திறந்து வெளியில்
வரலுங்குரவன்மெய்க் காட்சி—பெறு
மாதவத்தொண்டர் வசமிழந்தார்த்து
வணங்கியரவொலி செய்தார்
வந்தோர்பல ருங்கோல்கொள்கு கன்றேசுக லந்தோரென
மாதவனுந்தொழுகைதான். (௩௧௧)

சென்னியிற்சேர நிலத்திற்றணைந்து
சிரம்படத்தாழ்ந்தெழுந் தப்பால்—அயிற்
சேவகன்வாழ்மலை யேவலஞ்செய்து
திருக்கணநாதனைப் போற்றி
திகழாயிர கனிதோசையெ ளவல்மோதக பயறுதிய
சேரப்படைத்தொளி யேற்றி. (ருகஉ)

தேங்காய்விடலை சிதறிவணங்கித்
திருமலைமுன்படி கண்ணின்—மிசை
சேரவொற்றிப்பல பேதவர்க்கத்துயிர்
தீதின்முத்திக்கிடை யேகச்
செய்யுங்குரு விவனென்றிடு மெய்யிம்பரு மறியும்படி
செல்படியாயிரமாக. (ருகங)

ஆறெழுத்தின்செப மோதிநற்றண்டம்வி
டாவொருத்தன்பத நாடிச்—செல
லானமுத்தன்பிற கேறுமெய்த்தொண்டர்ப
ராவுசத்தங்கடல் போலே
அவிர்சண்முகமாலைப்பனு வலுமின்னம பாரத்துதி
யாற்றினர்கண்மழை மேலே. (ருகச)

அபிஷேகாராதனையியற்றல்

சென்றுகுகன்றிரு முன்புபணிந்து
திகழுமுன்மண்டபஞ் சேர்ந்தே—ஒரு
தீதில்பஞ்சாமிரு தாதிகொண்டேயபி
ஷேகமன்பாகநன் காற்றி
திருவாரா தனையாவையு முறையாலே நிறைவேறுதல்
செய்துகுமரனன் பேற்றி. (ருகரு)

அன்புறுதொண்டர்க ளானந்தமீறிநின்
றுடிப்புகழ்பல பாடி—நிக
ரற்றுளசுத்தமனத்தொடுநிட்டை
யதைப்பெறவுற்றனர் போதம்
அந்தக்கும ரற்கர்ச்சனை முந்தச்செயு நற்பக்குவ
ஆதிசைவன்பிர சாதம். (௩கசு)

கொண்டுவந்திவ்விரா மானந்தன் முன்மறை
கூறியளித்துநன் மாலை—புயங்
கொள்ளவணிந்து முடியிற்பட்டாடை
குலவத்தரித்தனன் பின்னும்
குளிர்சந்தன களபம்பரி வொடுதந்துந லுரையும்பல
கூறினன்பின்னிவன் பன்னும், (௩கஎ)

திருவேட மளித்தல்

தன்னதருட்கிலக் காவுதித்துள்ள
தவச்சிசுவாங்கந்த சாமி—யெனுஞ்
சற்குணன்றன்னை யருகுறக்கூவிச்
சகத்திலுள்ளோர்கொளும் போகம்
தனிவானுல கினர்போகமு மயன்மாலொடு திசைகாவலர்
தஞ்சுகமும்வெகு சோகம். (௩கஅ)

நித்தியமன்றிது சத்தியமன்பி
னிலைத்ததவஞ்செயு நீரே—மிகு
நிச்சயமென்று முவப்பிலமுழ்ந்து
நிசக்கதியுந்தர லாலே
நியமத்தொடு தவவேடமெய் திடவித்ததி நலமாமென
நேரிலுரைத்தனன் மேலே. (௩கசு)

அன்னவன்சிந்தை நெகிழ்ந்திவன்முன்றெழு
　　தற்புதமெய்திநின் றானே—யுட
னாரு ணேக்குச் செலுத்திவெண்கீளு
　　மணிக்கவுபீனமுங் காவி
யதின்மூழ்கிய விருதானேயு மவனுதுகை யினிலீய
　　வணிந்துபணிந்தனன் மேவி. (௩௨௦)

குருத்துவம் வழங்கல்

தேசிகன்வெண்டிரு நீறளித்தேதநஞ்
　　சிரவணமாபுரத் தூடே—யருட்
சிர்க்கவுமார மடாலயத்தின்பல
　　சீடர்கட்குந்தலை நீயே
செயுமாதவ நெறியாவரு முறுமாறுசொ லிடுமேனிலை
　　சேருநிற்குந்தெரி வாயே. (௩௨௧)

பற்பலதொண்டர்கள் பக்குவங்கண்டு
　　பறப்பறுசிந்தையினேடே—யவர்
பற்றிடுமாறு விளக்குதலாதிய
　　பட்சமெலாமறி வாயே
பலவாறுள பொருள்பூமியின் விவகாரமு நெறியோடு
　　பரித்திடுவாயினி நீயே. (௩௨௨)

ஞானமுடி சூட்டல்.

என்றிராமானந்த தேசிகன்கூறி
　　யெழிற்குமரேசன்றன் மீதிற்—புனேந்
தேயளிக்கும்பிர சாதநன்மாலை
　　யினைக்கந்தசாமிக்குச் சூட்டி
யிணைதீர்மண மலராலணி பெறவேசெயு முடியான
　　தெடுத்தணிந்தானருள் காட்டி. (௩௨௩

தொண்டர்களார்த்து மலர்மழைபெய்து
தொனிக்குமாகா வோசை—திசை
தேர்றுமெட்டும்புவி யேழுமுட்டுஞ்சுரர்
தூவுபட்பங்களின் மாரி
சுகமாதவ கவுமாரர்த மிசையேவிழ லவர்பூசைசெய்
தோதுமொக்கும்பெரு வாரி. (௩௨௪)

இந்தவியப்பினை யென்றனுளத்தி
லிசைந்தவிருப்பத னாலே—சுவை
யின்பமிகுத்துறு செந்தமிழிற்கவி
யென்றமையச்சபை யூடே
யேத்திப்பொருள் சாற்றிப்பணி பேற்றைப்பெற வேற்சித்த
ணியற்றினன்றன்னரு ளீடே. (௩௨௫)

இச்செயல்கண்டொ ரகத்தியனென்ற
வியற்கலைகொண்டுள தூயன்—மிகு
மிட்டமுடன்சிறு மைக்குணமொன்று
மெனைப்பெரிதுஞ்சொல லானன்
இவனென்னது குரவன்மகன் மிகுமுன்னத கலைபன்னு
மிவன்றுணைச்சோதர னேநான். (௩௨௬)

தந்தைகுணந்தனை யற்குறுமென்றிடு
சத்தியச்சான்றிவ னுகி—யின்னுஞ்
சற்குணமாதவ நிற்குணமேனிலை
சார்ந்திடவேளருள் செய்வான்
சபையூடுள கவுமாரர்செய் திடுபாவனை வழியானுயர்
சார்புறநீளருள் பெய்வான். (௩௨௭)

என்னமொழிந்தனன் மன்னுசிகண்டியி
லெண்ணறுதொண்டர்கண் முன்னே—வரும்
இன்னமுதம்பொரு சண்முகன்வண்பணி
யின்னலறுஞ்சுக வண்மை
இம்மாதவ னின்றொடு தன்னுயிர நன்மேலவ
ரெண்ணுபயன்பெற வுண்மை. (௩உஅ)

செய்குவனென்றுதி சைவநல்வேதியன்
செப்பியரகர நாமம்—பலர்
சேரமொழிந்தனன் பொன்மணியாதிய
தெக்கணையாவர்க்கு நல்கி
திருவாலயம் வலமாய்மலை யடிவாரமெய் துபுநீடு
திருமடத்தின்றலை மல்கி. (௩உசு)

மஞ்சளுஞ்சுண்ணமுஞ் சேர்ந்த நன்னீரில்
வளர்கருப்பூரநற் றீபம்—கொண்டு
மங்களமோதி வணங்கிடமேலவர்
மாமடத்துட்புக லானார்
வளமார்பழ னியில்வேலவ னருளாலிது நிறைவேறிய
மாட்சிமுற்றுஞ்சொல நானார். (௩௩0)

## மாஹேஸ்வர பூசை.

ஆறுவிதச்சுவை யானகறித்தொகை
யார்பலபச்சடி தோசை—பணி
யாரமிலட்டுக பாயசமுக்கனி
யாம்வடைநற்றயி ராநெய்
அணிவாழையி னிலைமீதன முடனேயமை வுறுமாறுசெய்
தானபினற்றவர் தானே. (௩௩க)

எங்குமிருந்திட வண்சுடர்கொண்டுகை
யின்கண்முழங்கிடு கண்டை—செவி
யின்பம்வழங்கிட வண்புனல்கொண்டுசெ
யின்றொழிலுஞ்செய்து நன்றே
யெழிலார்தரு துதிகூறிந லுணவேயுணும் வணமோதி
யிருந்துமகிழ்ந்தன ரன்றே. (௩௩௨)

மானிடசென்மப் பயனடியார்கள்
மகேசுரபூசனை செய்தல்—அவர்
மாட்சியிருந்திருக் காட்சியைக்காணலென்
வாய்மைதுலக்கிடவன்றே
மயிலாபுரி யிடையோர்மகள்சுடமூடுருவுறலாயினள்
மாதவர்தேர்வரி தொன்றே. (௩௩௩)

## விடையளித்தல்.

அப்புறமெய்த்தவ நேசமுளார்பலர்க்
காடையுமாடையு நல்கி—மகிழ்
வாகவனுப்பியெ லோருமவர்க்கிசை
வாமிடமுற்றிட வோவி
யணிமாதையி லுளதேசிக னுயர்காதையொர் முதுகாவிய
மாச்சொலவென்றனை யேவி. (௩௩௪)

அக்குரவற்கொர் சிறப்புருவிக்கிர
கத்தையமைத்திட நாடும்—விழை
வப்படிமுற்றும்வி தத்தையுரைத்தன
னற்பொதியைத்தவ ராசன்
அதன்மேலெழின் மதுராபுரி யுறநாடுபு பழனுபுரி
யப்பனைப்போற்றின னேசன். (௩௩௫)

## மதுராபுரி யடைதல்.

சாரருட்பாலக னாகியமைந்த
　　தவக்கந்த சாமியு மற்றும்—சில
சற்சனரும்புடை சுற்றமுழங்கு
　　தனிப்புகழ்கொண்டிடு மாடல்
சகசீவர்க ணெதிரேயறு பதுநாலுசெய் மதுராபுரி
　　தன்னையுற்றான்பல பாடல். (௩௩௬)

பெற்றுவிளங்குக யற்கணிமுன்பு
　　பெயர்க்கருமன்புவி ராவி—மிகு
பெற்றிகொள்சுந்தர னுக்குமுயர்ந்த
　　பெயர்த்திருமஞ்சன மாதி
பெரிதார்வமொ டினிதாநடை பெறுமாறுசெய் தருள்வாழ்வு
　　பிறங்கவிளங்கின னேதி. (௩௩௭)

நற்கந்தசாமியைச் சேதுவின்மூழ்கி
　　நலங்கொடுவாவெனச் சொன்னா—னவ
னன்குசென்றாழியின் மூழ்கிநற்றீர்த்தங் கள்
　　நாடிப்படிந்தரற் போற்றி
நலமார்மது ரையில்வாழ்குரு பரன்வார்கழல் பணிபோதவ
　　னன்மொழிபாசிகள் சாற்றி. (௩௩௮)

## சிரவணபுரஞ் சேருதல்.

கொங்குநன்னாட்டிற் சிரவணமாபுரக்
　　கோயிற்குருபரற் போற்றி—யருள்
கொண்டகௌமார மடாலயமேகக்
　　குறித்தவண்விட்டதி சீராய்
குறைதீர்புகை ரதமேறின னவிர்கோயந கர்மேவியோர்
　　கோதில் சகடதி னேராய், (௨௨௧)

தெங்குவளர்ந்த பொதும்பர் செறிந்து
செழுங்கமுகின்புடை வாழை—வகை
சென்றுநெருங்க வுகுங்கனியன்பர்
தினம்புரியுங்குரு பூசை
திகழ்தோகைகொள் சிகியாடிட வளர்பூவைக ளிசைபாடிடு
தெய்விகக்காட்சியி னுசை. (௩௪0)

சிட்டர்பலோர்தவ நிட்டையினூடு
செகத்தபிமானமி லாராய்—மறை
செப்பியதேசிக னற்பதநாடு
சிறப்புபல் காவிய ஞானம்
தினமும்புல வர்கள்வந்துசொல் பிரசங்கமு முதல்விண்டிடு
சீர்த்திகுலாவுறு தானம்.

ஆகுமெழிற்கவு மாரமடத்தி
லனேகதவத்தினர் பேண—மிகு
மன்புறுசுந்தர னென்றதொழும்ப
னரும்பயனென்றுவ ணங்க
அணிமிக்குள கனகச்சபை நடுவிற்றவி சிடைநிட்டை
யமர்ந்திருந்தானருள் பொங்க. (௩௪௨)

## தற்பர விளக்கம்

தீபமொன்றிற்பல தீபங்களேற்றினுஞ்
செப்புமொளிகெட லின்றித்—திகழ்
தீபமெனத்தன தோர்தலைமைத்திறல்
சேரவளிக்கினு மென்றும்
செப்புந்தலை மைப்பண்புப டைத்தன்பர்வி ருப்பந்தரு
தெய்வமதாவுள னின்றும். (௩௪௩)

யாருமெளி தினிற் கண்டுபணிவதற்
கெய்துகில்லானிவ னென்பார்—மன
மேற்றதவத்துறை யாற்றல்படைத்தவ
ரெங்குமறிந்திட நேர்வான்
இகவாழ்வினை நிலையாமெனு முழுமூடர்க ளெதிர்காணினு
மென்செயவல்லரென் றோர்வான். (௩௪௪)

## சற்குருவடிவப் பிரதிட்டை, தண்டபாணி விஜயப் பட்டாபிஷேகம் நடப்பித்தல்

பத்தர்தொழுந்திரு மாதைப்பதியிற்
பதிந்தகுருபரன் காதை—தண்ட
பாணிவிஜயமென் பேருறக்காவியப்
பான்மையிலோதினன் யானே
பணிவுற்றிடு மவன்மெய்த்திரு வுருவைத்திரு வருணைப்பதி
பற்றுமொர்பெண்மக டானே. (௩௪௫)

அன்பினுடன்றிகழ் செம்பிலமைந்திட
வாக்கினள்காவிய நூலைப்—பல
ரண்டிமகிழ்ந்திட விண்டுகும்பப்புன
லவ்வுருவிற்பெயுஞ் சீரே
அவிர்சுந்தர முனிவன்றனை யதுசென்றுசெ யெனவின்பொ
டனுப்பினன்மாதையி னேரே. (௩௪௬)

தான்செயுங்காரியந் தன்சுதன்செய்யத்
தகுந்தவனென்றறி பண்பா—லிவன்
சாற்றியனுப்பிய வாறுசபையிற்
றலைமைவகித்தரங் கேற்றி
சந்தோஷக ரஞ்சேருமலங்காரமி லங்கோர்கொள்
தனிக்கும்பநீர்முழுக் காற்றி. (௩௪௭)

பற்றுபுகழ்த்தண்ட பாணிவிஜயத்தின்
பட்டாபிஷேகமுஞ் சூட்டிப்—பல
பத்தர்கள்பூமழை பெய்துபுகழ்ந்து
பணிந்திடநல்லளி செய்தான்
பழனிப்பதி யினிலத்தினம் இலதுற்றன னிதிலக்குறை
பாறியதிம்மொழி மெய்தான். (ஙசஅ)

மாதையினின்றுபல் கோயில்கள்போற்றி
மலையமலைத்தலை சென்று—சில
வாரமிருந்து திரும்பிமதுரையில்
வாழ்கயற்கண்ணியைப் போற்றி
வளமிக்குள பழனிக்கிரி யினிலுற்றவ னடியைத்தொழும்
வாஞ்சையின்சீர்நிறை வேற்றி. (ஙசகூ)

சற்குருநாதன் றனிப்பிரசாதந்
தலங்களிற்கொள்பிர சாதம்—கையிற்
றுங்கிச்சிரவன மாபுரியிற்பொற்
சபைக்குருநாதனைக் கண்டான்
தகைதோய்குரு பரனுதிரு பதவாரிச மலர்மீது
தலைவணங்கிக்களி கொண்டான். (ஙரு0)

அதீதநிலை

சந்தமிகுங்குரு நாதனருட்பிர
சாதமடைந்தளி கூர்ந்தே—தவ
சாதனமுற்று மதீதநிலைத்தலை
தங்கியிலங்குகின் றனே
தனிராமா னந்தன்றிரு வடியேநா ளுங்கும்பிடு
தன்மையுற்றேனடி யேனே. (ஙருக)

## அபிப்பிராயம்.

இன்றுவரையி னடந்துளகாதை
　　யிதிற்பகர்ந்திட்டன வாகும்—இனி
யிப்புவியிற்செயு மற்புதங்கண்டபி
　　னேத்துநர்பற்பல ராமே
யெவர்கூறினு மடியார்புகழ் முடியாதெனு மொருவாய்மை
　　யிருப்பதுசத்திய மாமே. (௩௫௨)

இந்தக்கதையினைச் சிந்துக்கவியி
　　லியம்பிப்பயனுறு மாறே—அவன்
என்றற்கொருவிடை தந்திட்டனனதை
　　யென்சிற்றறிவுறு நீரே [னுத்தம
யிதனிற்சொலி யவன்மெய்த்துணை கொடுமுற்றல்செய் தன
　　ரென்சொற்பிழைபொறுப் பாரே. (௩௫௩)

## வாழி

தண்டபாணிக்குரு நாதனும் வாழி
　　தவவிராமானந்தன் வாழி—வழி
சார்ந்தசாமியும் வாழிகௌமார
　　சபையிலுள்ளோர்களும் வாழி
தனேர்சிரவணமாபுர மடம்வாழிமெ யடியார்புகழ்
　　சாற்றுநர்வாழிமெய் வாழி. (௩௫௪)

இராமானந்தப்பிரதாபச்சிந்து

முற்றிற்று

குருபாதமேகதி

# நூற்பயன்

---

சிந்து

(செந்தின் மாநகர் என்ற பண்)

இந்தமாதவ ராமானந்தன்புகழ்
ஏத்துகின்றோர்வினை போமே—அவா
எண்ணமெல்லாநிறை வாமே—அகல்
இந்த மாநிலமொன்றுமானிட ரின்பமேவவி ரும்பிநாடொறும்
எங்குமாய்நிறை யுங்குருநாதன்
இணையடிபோற்றிநின் றானே—பவம்
இல்வழி காட்டுநன் றானே.

தம்மையேபர மென்று மதித்திடு
தப்பினர்தங்களைக் கூட்டான்—தவ
சாதனத்தொண்டரை வேட்டான்—மிகு [வாய்கொடு
தண்கொண்மாதையி டங்குலாவிய செந்திறையக தொண்டன்
சந்தமார்தமிழ்ச் சிந்ததனுன்மொழி
தன்பிரதாபமு மேற்றான்.வினை
தன்னைத் தகிக்கும்வெண் ணீற்றான்.

அங்கிவேள்வியி டங்கொலையூனவி
யாதிசெய்வார்க்கிவன் றாரன்-தயை
யன்புகொள் வார்க்குப காரன்-திகழ்
அக்கமாலைத ரித்துநீள்கலை யுற்றகாவிது லக்கியோர்கையில்
அங்கமாகிய தண்டுறவோர்கை
யருட்குறிகாட்டிநின் றானே-சிகை
யார்தரு சென்னியன் றானே.

கொங்குநாட்டிற் சிரவணமாபுரங்
கொண்டமடாலயம் வாழ்வான்-இசை
கூறுகௌமாரர்சொல் வீழ்வான்-மிகு
கொந்தலர்ந்தக டம்பணிந்தபுயங்கொளுங்குமரன்பெரும்புகழ்
கூறுவார்தம் விருப்பமிகப்பெறு
கும்பனருட்கலை யானேன்—ஒளி
கொண்டகலைக்கிடை போனேன்.

தண்டபாணி திருப்புகழ்மாமுனி
சார்முருகன்றனித் தாசன்—எனும்
சற்குருதாள்பணி நேசன்—பலர் [ற்றிடு
சாற்றுசுக்கிர ஞட்சபைக்கிடை போற்றுமுத்தமர் காட்சிபெ
தன்மையாலொரு சித்திரமேனியிற்
றங்கியருள்புரிவானே—அவன்
றுளிணை யான்பணிவேனே.

அறுசீர்விருத்தம்

இராமானந்தன் பிரதாப மியம்புஞ்சிந்துப்பனுவலினை [ட்டைப்
விராவன்புடனே படித்திடுவோர் வினவிமகிழ்வோர் வியனே
பராவித்தினம் பூசித்திடுவோர் பரமகுரவன் கருணையினு
லராவென்றிடத்துன் புறுத்தும்வினை யற்றுக்கதிபெற்றிடு
வாரே.

இராமானந்ததேசிகன்றிருவருள் நீடூழிவாழ்க.

குருபாதமேகதி.

---

உ

குருவே துணை.

இராமானந்தப்பிரதாபச்சிந்தின்

# அநுபந்தச்சிந்து

இஃது

திருவாமாத்தூர்க் கௌமாரமடாலயம்

ஸ்ரீமான் தி. மு. செந்திநாயகம்பிள்ளையவர்கள் குமாரர்

முருகதாசபிள்ளையாலியற்றியது.

அக்ஷய௵ மேடரவி.

உ

குருவே துணை

# சாத்துகவிகள்

சிரவணபுரம்

## ஸ்ரீமத் சுந்தரசுவாமிகள் இயற்றியன.

### அறுசீர்விருத்தங்கள்

விந்தைமிகத்திகழ்தருமெஞ் சொந்தமுடைக் குருபரன் பான் மேவுமன்பாற், றந்தையெனவுளத்திருத்திச் சிந்துபகர் செந்திநகர்ச்சாமிப்பேரோன், மைந்தனெனப்புவியிலுளோர் வாழ்த்திடுமோ றனைவருள்ளு மகிழ்ச்சிபொங்கச், சந்தமுடைச் சிந்ததனு லுத்தரபாகத்ததெனச் சாற்றினுனல். (க)

அறிஞர்களும்புகழ்ந்தேத்தற் குரியதுவாய் விரிந்து பொலி யன்னோன்காதை, சிறிதுதனக்கெட்டியவா றுரைப்பு னெனத் துணிந்ததெண்ணிற் சீர்மைத்தான, துறவினராசார மொடு கொலைபுலையைநீப்பதுவே தொழிலாயுற்ற, செறிதரு மெய்ப்பத்தியினுற் றிருமலைமீதிருந்துருண்ட தேசிகேசன்.

மருமலர்த்தாட்கன்புசெயு மனவுறுதியமைந்ததொன்றவ் வல்லோன்பேரே, சரியதெனப்பெரியர்பலர் முருகதாசன் னெனவேற்சாற்றும்பண்பு, முரியனவாப்பெற்றமையா லமையு மெனயா னுரைத்தேனெலிநீர்ப்பாரிற், றிருமலியும்பெருமை யனு யிகபரத்தினன்மைமுற்றுஞ் சேர்கமாதோ. (௩)

சிரவணபுரம்

## ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகள் இயற்றியது

அறுசீர்விருத்தம்.

நந்தப்பாட்டலைகடற்பார் தேரவிரா மானந்த நாதன் கண்ட, முந்தப்பாட்டணிப்பிரதா பங்கடமக் காண்டெதிரின் முளையாநின்ற, பிந்தப்பாட்டநுபவங்க டமையநுபந் தச்சிந் தாப் பேசினனஞ், சந்தப்பாட்டன்முருக தாசப்பே ரன்பின் மிகத் தழைப்பான்மாதோ. (க)

---

சிரவணபுரம்

## ஸ்ரீ சின்னச்சாமி சுவாமிகள் இயற்றியது

அறுசீர்விருத்தம்.

மிக்கபுகழ்பெற்றவிரெங் குருராமா னந்தமுனி விளை யாட்டியாவுந், தொக்கபுகழ்ப்பிரதாப காவியங்க டமின்மூவர் சொற்றபின்னர், புக்கபுகழ்ச்சரித்திரத்தை யநுபந்தச் சிந்தி னிடை புகட்டியீந்தான், நக்கபுகழ்ச்செந்திநா யகன்றவச்சே யாமுருக தாசன்மாதோ.

---

திருவாமாத்தூர் கௌமாரமடாலயம்

## ஸ்ரீமான் தி-மு-செந்திநாயகம் பிள்ளையவர்கள் இயற்றியது

அறுசீர்விருத்தம்.

முருகதாசப்பெயர்பூண் டெனதருமைச்சுதனுகி முந் நீர்ப்பாரிற், பெருகுதிருப்புகழ்க்குரவன் பேரனெனவடிமை யெனப் பிறங்கிப்பாலன், றிருமலிராமானந்தப் பிரதாபச்சிந் தினையான் செய்தபின்னர், மருவுகதையினைவிளக்கி யநுபந்தச் சிந்தெனுநூல் வழுத்தினனே.

குருபாதமேகதி

குருவே துணை.

இராமானந்தப்பிரதாபச் சிந்தின்

# அநுபந்தச்சிந்து

காப்பு.

கலிவிருத்தம்.

உன்றன் கீர்த்தி யுரைத்துப் பராவுசீ
ரென்ற னக்கிங் கிசையப் புரிகுவாய்
குன்ற லற்றபல் கோடி மதங்களுந்
துன்ற வைக்குந் தொழிற்குரு நாதனே.

நூல்

சிந்துகள்

(பொன்னுலவு என்ற சந்தம்)

இந்தராமா னந்தமுனி வன்புவியி லன்பர்பலர்க்
கின்னலறு நன்மைதர வெண்ணியே—மெய்ப்பே
ரின்பவெள்ளம் பொங்கியுறற் கண்ணியே—விய
னிலகுசிரவண புரியினிடமுறு
கனகசபையினை யொருவியுடமலே
யென்றபெயர் கொண்டநகர்க் கேகியே—யன்ப
ரேத்திடவி ருந்தனனன் பாகியே

அந்தவிடஞ் சிற்சிலதி னங்கழித்தன் பர்க்கருள்செய்
தங்கிருந்து போகர்புலிப் பாணியே—முத
லாயினோர்வ ணங்கியருட் காணியே—யென்

வடைந்தசீர்ப்பழ ஞபுரிக்கிடை
யியைந்தகோற்கா மேவநிற்குமெ
மையனைச்சென் றன்பொடுவ ணங்கியே—பிற
கங்கயற்கண் ணம்மையையி ணங்கியே

கண்டுதெரி சிக்கமனங் கொண்டுமெது ரைப்பதியிற்
காதன்மிகை யோடுபுகுந் தன்பிஞ—லவள்
கான்மலரை நாடியுற்ருன் வன்பிஞல்—மிகு
கசடரும்புக் காடிடிற்சுக
முதவிடும்பொற் ருமரைக்கிடை
கற்புறும னத்திவனீ ராடியே—செழுங்
காவிநனைத் திட்டவுடை சூடியே

சேயதிரு நீறணிந்து தூயகண நாதனுற்ற
சீருறுத ளிக்கருகு சேரவே—யமன்
செல்லுமிவன் பக்கல்களி கூரவே—யுறு
செந்திஞயக னென்றபேர்கொளு
மெந்தையோடுசி லன்பர்காணுறத்
தேவியொரு தாயிலரு காயிஞ—ளுடன்
சென்றதறி யாதவணம் போயிஞள்

நல்லவரொ ருவரெய்தி லெல்லவர்க்கு நன்மையெய்து
நானிலத்தி லென்றமொழி போலுமே—யிவ
ளுட்டியக தையிதொன்றுஞ் சாலுமே—பினர்
நாகலோகசு மாரியைக்குக
வேண்முஞண்மனை யாளெனக்கொளு
நற்பாங்குன் றிற்குகனைப் போற்றிஞன்—றமிழ்
நல்குபொதி யைக்கிரிநீ ருற்றிஞன்

மிக்கவள மேய்ந்தநெல்லை யிற்றறுகி யாய்ந்தபுகழ்
மேவுமுரு மாமலையை நண்ணியே—யருண்
மேயதாமி ரவனியை யண்ணியே—யதின்
　　மேவிமூழ்கிவ ணங்கிவேலனை
　　யோதைசேரலை வந்துமோதிடும்
வேலையுறுஞ் சீரலைவாய்க் கேகவே—முனம்
வேல்விடுத்துச் சூரிருகூ றாகவே

வீழ்த்தியசட் டித்திருவி ழாப்பொலிவுற் றிட்டதில்
வேற்காக்கு மாரனடி போற்றியே—யென்றும்
வேள்பதத்த ருச்சனைப்பண் டாற்றியே—நெல்லை
　　மேவியாறுமு கற்குவப்புறு
　　பூசைகாவடி யற்புதத்தகை
மேலெனத்தி ருப்பணிகள் பண்ணுவோ—னன்பர்
வேட்டபயன் யாவுமுறக் கண்ணுவோன்

பற்பலருக் கும்பிரிய முற்றிடத்தி கழ்ந்தபுகழ்
பாவுமமா வாசையெனு நாமமே—விய
பண்ணவனைக் கண்டுளத்தி னேமமே—யதைப்
　　பத்தியா லுரை யாடியேதனக்
　　குற்றதோர்குர வோனநாள்வரு
பண்பின்மனை யேகியன்பிற் றாழ்ந்தனன்—அங்கு
பற்றுசெந்தி னாயகன்சீர் சூழ்ந்தனன்

பத்திமலி வுற்றவவற் குப்பலதி றத்திலுளப்
பக்குவத்தி றமதனுக் கொத்தவே—யுயர்
பான்மையுற வோதியருண் மெத்தவே—செறி

பாதப்பொழில் சூழ்தமிழ்க்கிரி
யானமெய்ப்பொதி யாசலத்தமை
பாவநாசத் தின்புனலி லாடினுன்—சிவன்
பாததாம ரைசிரத்திற் சூடினுன்

பிற்சிரகி ரிப்பதியி னிற்பரம னைத்தொழுது
பின்னுகன்ரு ேனாிரண்டு மாதவர்—தொழப்
பேரொளிய மைந்தபல வாதவர்—புரை
போரவைக்கண்மு னுடல்செய்திட
லேமுதற்பல சீர்கொள்தில்லையைப்
பேணியன்பி னிற்றுதிகள் சாற்றினுன்—வினைப்
பேதமடி யாரகல மாற்றினுன். (க)

(சேன்னிகுள நகர்வாசன் என்ற சந்தம்)

தில்லையை விட்டெந்த மருங்குஞ்—சோலை
செறிந்தாவி னங்கண்முன் சிருங்கம்—பெறுஞ்
சீரார்திரு வாமாதையி னூடாசிரி யோனுனவன்
நிகழ்வான்—வானும்—புகழ்வான்

இல்லையென் றேதனை யண்டி—வரு
மிரவல ருக்குய ருண்டி—முத
லீந்தாதர முறக்காண்டலின் வான்கூவிள நிழற்பாங்குறு
மெண்டி—சையு—மண்டி

இலங்குகி ளைகண்மிக் கிரிந்தே—பரந்
நி தலன் னுன்புகழ் விரிந்தே—யுற
லெனநல்லபெ ருக்கந்திகழ் கவின்மல்குமதிற்சந்ததம்
என்றும்—அணி—துன்றும்

தக்கசெவ் வாய்க்கிளி யினமே—கூடிச்
சந்தோட மாயொரு மனமே—கொடு [வெகு
சார்ந்தேதகொஞ்சித்திகழ்வியன் வாய்ந்தேததங்கப்புகழ்
சனமே—சொல்வார்—தினமே

சந்நிதி யின்முனித் தாரு நின்று
தழைகளு திர்த்திடுஞ் சீரு—மெய்மைத்
தவசீலரர்ச் சனைநாளுமுத் தமமாம்விருப் புடனேசெயற்
சாற்றும்—படி—தோற்றும்

எல்லையில் லாப்பசுக் கூட்டந்—தனை
யிரட்சிக்கச் செய்தவ நாட்டன்—மலை
யினிலேறியு ருண்டோர்சிறி தளவேனுமு ளைஞ்சா துறு
மீட்டன்—சந்தப்—பாட்டன்

தண்டபணி யுங்கர நேசன்—நீறு
தழைத்த முருகனற் றூசன்—வண்ணச்
சரபன்புவி முழுதுஞ்சொல விணையின்றிய தகையன்றளி
சார்ந்து—களி—கூர்ந்து

போற்றி வணங்கநன் மாதை—நகர்
புகுந்திருந் தேபல மேதை—மிகும்
பூமண்டல முளமானிடர் யாருங்கொலை புலைதீர்நலம்
பொருந்தச்—சுக—மருந்த

சட்சம யாதீத சாரம்—பெறு
சமரச மாங்கவு மாரம்—பகர்
சபையூடடி யவர்யாருமெ யநுபூதியெய் திடமேனிலை
சாற்றி—பவ—நீற்றி

பின்மயி லக்கிரி சேர்ந்தா—னந்தப்
பிறங்கலின் சீர்முற்றுந் தேர்ந்தான்—றவம்
பெருகுங்குரு பரனோர்கவி யிடைவிண்டுளவி தியாலவண்
பேணும்—படி—பூணும்

சீர்த்தி மலிந்திடும் பாலே—யப்பேர்த்
தேசிகன் றன்கள்ளிப் பாலே—யுண்டு
சிறிதூனமு மடையாதுல கிடையேபல தினமாம்வரை
சித்தி—செய்து—முத்தி

சேர்ந்த வியன்மிக மேவும்—அன்றித்
திங்கடொ றன்பர வாவும்—புகழ் [ஞ்
செறியாரலின்விழவேமிகுமவண்மா தவர்குழுநாடொறு
செறிவா—றுண்மை—யறிவார்

அத்தலத் தூடென்று மடையாக்—கத
வமைந்தசத் திரச்சீ ரிடையா—வரும்
அளவிட்டிதுவரை தானெனமுடியச்சொலவெனிலோவரி
தம்மா—பெரி—தம்மா

என்னசொல் வேனச்சத் திரத்தைக்—கட்டி
யேய்ந்தான் பயனந்தத் தரத்தைப்—பெறல்
இராதாபுர மாமூரிடை மாவேமன னோரார்மர
பிலங்கும்—புகழ்—துலங்கும்

இலக்குமி நாரணப் பேரோன்—றனக்
கிசைந்த கண்ணெனுஞ் சீரோன்—அகல்
இப்பார்முழு துங்கூறிடு நற்சீருறு பங்காருவென்
றிசைப்பார்—தலை—யசைப்பார்

அப்புகழ்ச் சத்திரத் தார்ந்தா—னன்ப
ரானந்த மாக்களி கூர்ந்தார்—பன்னு
ளச்சத்திர மிசையேவதி வுற்றுத்திக ழொருநாள்வள்ளி
யம்மை—விண்ணூ—ரம்மை

பக்கலு றத்திகழ் வேலன்—றனைப்
பத்தியி னுலிந்தச் சீலன்—றனைப்
பரிவாரம தாகப்பல வடியார்புடை சூழக்கிரிப்
பாலே—யுற்று—மேலே

சென்றன னன்பரோர் பங்கிற்—கண்ணீர்
சிந்திப் புகழ்வரோர் பங்கிற்—றமிழ்த்
தேவாரமு தற்கூருலி யோவாமலி சைத்தேவரச்
சென்றான்—றவங்—குன்றான்

ஆங்குறு பாலையற் கண்டா—னவ
னானந்த மேலிடக் கொண்டான்—பிற
கவனோடிவ னிவனோடவ னிருவோர்களு மகிழ்வாயுற
வாடிக்—களி—நீடி

பற்பல் சுவைத்திற நீடும்—கலம்
பகப்பெயர் நூலங்கு கூடும்—உயர்
பத்தர்க்குத வற்குச்சிகி வெற்புத்தவ னச்சிட்டது
பரிந்தே—கொடை—புரிந்தே

அச்சியற் றுங்தொழிற்சாலை—சென்னை
யம்பதியிற்கொளும்வேலை—புரிந் [டுரை
தவிர்சுந்தரமெனுமந்தணன் மிகுநன்றுறும் வகை கண்
யறைந்து—களி—நிறைந்து

எந்தவ மாவரு மின்னோன்—மலை
யேய்ந்துறு பாலைய முன்னோ—னெனு
மிருமாதவர் களும்வேலவ னதுபூசனை முடிவாயபி
னென்னே—பவன்—முன்னே

உத்தர வைப்பெற்றப் பாலே—யிந்த
வுத்தமன் வந்தான்கீழ்ப் பாலே—அவண்
உறுசத்திர வாயிற்றலை யவிர்கற்புர வாலத்திகொ
டுற்றான்—றவம்—வற்றான்

அன்பர்பல் லோராமு துண்டா—ரிந்த
வருந்தவ மாதவன் றண்டார்—கரத்
தாசான்றனை நாடோறுமு ளேமாண்புற வேபூசைசெய்
தவிர்ந்தான்—பவந்—தவிர்ந்தான்

ஆங்கொர்நந் தாவன முண்டு—பண்ணி
யதிற்பல் விதநிறங் கொண்டு—திக
முழகாகிய பலவாசனை யுறுபூவகை முருகோன்மிசை
யணிந்தா—னன்பிற்—பணிந்தான்

தெய்விகந் தாங்குமிம் மோனி—யருள்
செறிதவத் தாற்றிரு மேனி—தன்னிற்
சேர்வெப்பம தாலேசுர மேவுற்றத னாலேயொரு
தினத்தில்—மிக—மனத்தில்

வருந்திக் கிளியனூர் வேமன்—குலம்
வாழுங்கந்தப்பநன் றமன்—மனை
மங்கைப்பெய ரொடுநாயகி யென்கத்திகழ் குணசீலியுள்
வாடி—மிக—நாடி

உற்றிடும் வேளையிப் பெரியன்—அவள்
ஊன்கண்முற் ரேய்ந்திது சரியன்—றெனத் [தது
வோதித்தசை யுடல்சேர்வினை யாமெற்கிலை யெனவோ
முற்ற—ளன்பு—வற்றாள்

உன்றிரு மேனியிற் சூட்டால்—வரு
மோதரும் வெப்பினைக் கேட்டா—லெனக்
குண்டாம்விச னந்தானள வன்றலென விண்டாளுட
ளொருவா—லிப—வுருவாய்

தங்கு பிராமண ளுகி—மனச்
சஞ்சலந் தீருவப் பாகி—யெனைச்
சாராதிடர்நீ தானெனமெய்காணுயென வேயோர்மொழி
சாற்றி—மனந்—தேற்றி

அவ்வுரு வத்தினைக் கரந்தான்—பின
ரரியவ யித்தியத் தரந்தான்—கொளு
மறிஞன்விழுப் புரம்வாழ்வுறு சுகுணனிவற் புதமாதவ
னருகா—வுள—முருகா

மாணிக்கப் பேருறு நல்லோன்—வேளாண்
வண்குலத் திற்றிகழ் வல்லோன்—சில
வகையாமவு டதமேகொடு சுகமேவிடல் செயவேமுயல்
வாய்மை—கண்டு—தூய்மை

கொண்ட முனிவனே ராறு—முகங்
கூறு புயங்களீ ராறு—கண்கள்
குறைதீர்பதி னெட்டாயவிர் தாநீடொளி யுற்றேதிகழ்
கோலம்—கண்டான்—சீலம். (உ)

# அநுபந்தச்சிந்து

(கண்ணாயிரம் படைத்த என்ற சந்தம்)

தண்ணார்பொ ழிற்குண்மயில் கண்ணாடகப் பொலிவு
சார்சிர வணபுரி யூடுறு தவமிக நண்ணியே—கந்த
சாமியெ னொருபெயர் மேயவன்மயிலம நண்ணியே

விண்ணாட் டிறையுமொல்க மண்ணாட் டுறுமடியர்
விரும்பி வழிபட வணங்கி யருள்புரிபான்மையால்—வியன்
மிகுந்ததிருவருள் வளங்கொள்கருணைபெய் மேன்மையால்

ஆசாரி யற்பரமெ னாவோது மெய்த்தெளிவி
னடியவர் பற்பலர் வளையம லர்ப்பதம் வணங்கியே—பிற
கவண்வரு தற்கிசை வுறவுளமிக்கவு முணங்கியே

போற்றி யிருவிழிநீ ரூற்றித் துதிக்கவருட்
பொலிவுறு மிக்குரு பரனமொ ழிச்செவி கேட்டன-னென்ன
புகலுவதச்சிர வணபுரியிற்புகல் வேட்டனன்

செவ்வூர் விடுத்தணிகள்வெளவூர் சென்னைப்பதியைச் [வியன்
சேர்ந்து மயிலைநகர் வாய்ந்த புகழ்கொளொற்றி வாழ்த்தியே
றேர்ந்த வளமைமிக வேய்ந்த குகனையுற்றங் கேத்தியே

திருவோண மாபுரியி னிடையேகெள மாரர்பலர்
செழுமலர் தூவிட வரவொலி மேலிட வின்பொடே—கவின்
செறியியமோவிட வடியவர்பாடல்க ளன்பொடே

கண்ணீ ரிறைத்துருகி யுண்ணீர்மை யுற்றறையக்
கனகசபையினிட மகிழ்வுறவடியரொ டேகியே—மிகு
களியொடுகுருபத மலரிணைதொழுதனன் யோகியே

பன்னாள்க ழித்தபிற கென்னையு ளக்கருணை
படிறுமிகப்பெறு மடியனையுந்தடுத் தாண்டனன்—இரு
பதமலரைத்தொழு நெறிகொளென்பினைப் பூண்டனன்

எந்நா ளவன்கருணைக் கிந்நா யடியன்முற்று
மெய்துவனென்பதொ ரெள்ளளவுந்தெரி யேனையா—வது
மெல்வரிலங்கிரு ளொல்லையிரிந்திடல் தானையா

அன்போ டடியவரி வன்பாத மேத்தவிவ
னருண்மிகுதன்குரு பரனையுளன்பொடு தாழ்ந்துளா-னுளத்
தநுபவமிஞ்சிய பரமசுகந்தனில் வாழ்ந்துளான்

இராமானந் தப்பெயர்கொள் சீமான் கனகசபை
நாயகமெனவடி யார்கள்பாரவிட வூழியே—பெற
நாணிலமகிழ்வுற வாழியநுதினமும் வாழியே

இத்தேசி கன்கிருபை யுற்றேமெ யடியவ
ரின்னலிலாதுறு நன்னலமேவுபு வாழியே—யவ
ரெண்ணியவாபணி பண்ணிடயானிதம் வாழியே.

---

## நெஞ்சறிவுறுத்தல்.

(புள்ளிக்கலபமயிற் பாகன் என்ற சந்தம்)

சந்தச் சரபகுரு நாதன்—அருட்
டன்மை மலிந்திலகு போதன்—றமிழ்ச்
சலதியொக்குமுயர் பலதிறக்கவிசொல்
சாதன்—சத்ய—விரதன்

சொந்தக் கருணையிடை யாழ்ந்து—பதத்
துணையிற்பற் பலமுறை வீழ்ந்து—கெஞ்சிச்
சூழ்ந்துதுதிக்கில்வினைப் பாழ்ந்துயரொடுபவம்
தொலைப்பான்—உள்ளில்—நிலைப்பான்

சந்தக் கனககசபை வாசன்—கழல்
தன்னிற் றினமுருக தாசன்—சொலுந்
தமிழ்க்கவியத்தனையு மனக்களிப்பொடுகொளுந்
தலைவன்—தவ—மலையன்

தன்பதத்தைச் சரணு மேவி—யன்பாற்
றுழ்ந்திது நாள்வரையிப் பாவி—யுனைச்
சார்ந்து வணங்கிடாமற் சோர்ந்துழன் றேனெனவே
சாற்றி—மலர்—தூற்றி

பந்தப் பிணிப்புமுற்று நீக்கி—யுயர்
பத்தி யெனுங்கயிற்றால் வீக்கி—யெனைப்
பாடிக்களித்துவிளை யாடித்திகழும்படி
பதிப்பாய்—வினை—சதிப்பாய்

எப்படியுங் கையெனைவி டாதே—யரு
ளீந்தருள வேண்டுமிந்த வாதே—னுனக்
கென்ன வவனிரண்டு சொன்னமலர்ப்பதத்தை
யேத்தி—கவி—சாத்தி

நாயேன் பிழைபொறுக்கொண் ணுதா—ராமா
னந்தப் பெயர்ச்சற்குரு நாதா—எந்தாய்
நானேதுயர்க்கடற்கா ளானேனிரங்கியருள்
நன்றே—குணக்—குன்றே

என்று தினமுமொரு புத்தி—யுட
னேத்திப் பணிந்தவன்றாட் பத்தி—செய்யில்
என்றன் மனமே நல மொன்றிச் சித்திமுத்தியு
மிலங்கும்—புகழ்—துலங்கும்.

முற்றிற்று.

## வாழி

சீர்மலியு மாதைநகர் வாழி—யவண்
சேர்தருகௌமாரநன்ம டாலயச்சீர்வாழி
பேர்மலிதிருப்புகழோன் வாழி—யவன்
பெய்திட்டமெ யய்திட்டரை யைதிற்சுக மெய்தப்புரி
பீடுகொணூல்யாவுமிக வாழி—யத
னூடுபுகுமீடுடையார் வாழி
தண்டணிகையன்புகல்வாக் கியமே—மறைச்
சாரமெனவேகொடுல கோர்கண்மிக நயமே
கொண்டிடத்தானேரிலக்கியமே—யெனக்
கூடுந்தய வோடுந்தின மாடுங்கன நீடும்புகழ்க்
குன்றிராமானந்தகுரு வாழி—யவ
னென்றியபொன் மன்றினிதுவாழி
மெத்தியற்சிரவணவூர் வாழி—யதி
மேலதாங்கௌமாரமடாலயமும்வாழி
சித்திமகோற்கடன்குகன் வாழி—நலஞ்
சேர்சுக்கிர வாரக்கவு மாரக்கனிவீரக்கன
சித்தமுறும்பத்தர்தினம் வாழி—யவர்
சித்தியுடன் முத்திகொடு வாழி

சட்சமயத்தேவர்களும் வாழி—யெனச்
சாற்றுமெழிற்றெண்டரெலா மேற்றமொடுவாழி
அட்சரிகர்கற்புடையார் வாழி—யெழி
லாவோடுபல்பாவோதுநருவேர்களும் யாவோர்களு
மாசினலமியாவுமிக வாழி யிதைப்
பேசினருமூழிமிக வாழி.

---

நூன் மாட் சி

வெண்பா.

சிந்துக் கவியாற் சிரவணபு ரத்திலன்பர்
வந்திக்கச் சொன்மூ வகைநூலும்—புந்திக்
கலக்கமற ஞானக் கனியளிக்கும் வேத
விலக்கணத்தி லக்கியமா மே.

குருபாதமேகதி,

---

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
| --- | --- | --- | --- |
| எ | கஉ | யுயா | யுயர் |
| அ | கஅ | மிகவுநடை | மிகவுமிடை |
| கஎ | கசு | மமோ | மகோ |
| கஅ | எ | யாராம் | யாரம் |
| ககூ | ரு | நூறு | தூறு |
| உ௦ | உந | ஓது | ஓது |
| உந | கஉ | கோவில் | கோயில் |
| ஒடு | கசு | பணி | பண்ணி |
| உசு | கஉ | ணிற | ணிர |
| உஎ | உஉ | ிரும்பூது | ிறும்பூது |
| நந | ஒடு | கவி | கதி |
| நஎ | கந | வெங்கைக்கி | வெங்கெங்கி |
| நஅ | உந | தவநிகர் | தவநுகர் |
| சஅ | கக | செய்தனை | கண்டனை |
| ருக | கஎ | கத்த | ரத்த |
| ஒடு | கக | மகநிலை | மகணிலை |
| ருச | அ | ளவநிநிலை | ளலவணிலை |
| சுஉ | கந | மைமந்ந | மைமந்தந |
| சுரு | உந | யதநலடி | யதநலடு |
| சுஎ | கக | கொஞ்கி | கொஞ்சி |
| சுகூ | க௦ | கனி | கள் |
| அஎ | உச | தணா | தணர் |
| கூஎ | கஉ | ெணண் | ெனண் |
| க௦ச | கஉ | தாவிககி | தாவிக்கி |
| க௦ரு | சு | யுற | லுற |
| கக௦ | க | சாவமி | சுவாமி |
| கஉரு | உஉ | மயிற்யரி | மயிற்பரி |
| கநஅ | எ | மென்றெனா | மென்றனர் |
| கசரு | கசு | நான் | நாதன் |
| கருரு | கஅ | கக்ச | கச்ச |
| கருஎ | கசு | சிரவன | சிரவண |
| கருகூ | ரு | அவா | அவர் |